# தமிழ்

[செய்யுள் - உரைநடை]

# எட்டாம் வகுப்பு

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது.
(விற்பனைக்கு அன்று)

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்
கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2005

மறுபதிப்பு - 2007

**குழுத் தலைவர்**

**பேராசிரியர் வி. கணபதி**

மேனாள் பேராசிரியர் தமிழ்க்கல்வி
13/5, ஸ்ரீபுரம் 2-ஆவது தெரு
சென்னை - 600 014.

**மேலாய்வாளர்கள்**

**முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன்**
தமிழ் இணைப்பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி (தன்னாட்சி),
சென்னை - 600 005.

**புலவர் பூ. ஜெயராமன்**
மேனாள் முதுகலைத் தமிழாசிரியர்.
68, (350) ஔவை சண்முகம் சாலை,
சென்னை - 600 005.

**நூலாசிரியர்கள்**

**புலவர் த. ஆறுமுகம்**
மேனாள் துணைத் தலைமையாசிரியர்,
3/54, D வடிவம் 25 ஆம் தெரு,
சிட்கோ நகர், வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.

**புலவர் செ. சிவநேசன்**
தலைமையாசிரியர்,
அரசுயர் பள்ளி, தெ.நெடுஞ்சேரி,
கடலூர் மாவட்டம் - 608 305.

**மா. பெரியசாமி**
தமிழாசிரியர்,
எம்.எஸ்.பி.சோலை நாடார்
நினைவு மேல்நிலைப் பள்ளி,
திண்டுக்கல் - 624 005.

**புலவர் மா.இராமலிங்கம்**
துணைத் தலைமையாசிரியர்,
அரசுயர் பள்ளி, சிட்லபாக்கம்,
சென்னை - 600 064.

**சகோ. பூ.மை.பேபி விக்டோரியா**
தமிழாசிரியை,
இமாகுலேட் பெண்கள் மேனிலைப் பள்ளி,
ஆவடி, சென்னை - 600 054.

**பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காகப் பள்ளிக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு.**

**இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.**

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

**ஸ்ரீனிவாசா ஆர்ட்ஸ், சாத்தூர் – 626 203.**

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப் பண் பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும்,
மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும்,
வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில்
எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு

**வெற்றி ! வெற்றி ! வெற்றி !**

# தேசியப் பாடல்

வந்தே மாதரம் !
ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம்

ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும் தள ஸோபிநீம்

ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம், மாதரம்!
வந்தே மாதரம் !
வந்தே மாதரம்!

**- பங்கிம் சந்திர சாட்டர்ஜி**

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந் நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந் நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும், ஒருமைப் பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

'மனோன்மணீயம்' பெ. சுந்தரம்பிள்ளை

## ஆசிரியர்க்கு

எட்டாம் வகுப்பு மொழிப் பாடத்திற்குரிய இந்நூல் செய்யுள், உரைநடை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்வகுப்புக்குரிய இலக்கணமும், துணைப்பாடமும் தனி நூலாக வெளியிடப்பெற்றுள்ளது. செய்யுள் பகுதியில் ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய விளக்கமானது 'நூல் குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, சொற்களஞ்சியம், (சொற்களைப் பிரித்தறிக, அருஞ்சொற்பொருள், விளக்கவுரை), பொருளுணர் திறன் பயிற்சி, மொழித்திறன் வளர் பயிற்சி, திறன்வளர் தொடர் பணி' என ஆறு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது.

'பொருளுணர் திறன் பயிற்சி'யில் புறவய வினாக்கள், மூன்று வரி-ஆறுவரி வினாக்கள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் பாடப் பொருளைச் சார்ந்தவையாகும். அடுத்து, மொழித்திறன் வளர் பயிற்சி வினாக்கள் உள்ளன. இறுதியாக அமைந்த திறன்வளர் தொடர் பணி - பாடத் தொடர்புடைய பிற செய்திகளை அறிவதற்குத் தூண்டுமாறு வினாக்களை அல்லது விளக்கங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

உரைநடைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு பாடத்திலும் 'சொற்களஞ்சியம்' முதலாக 'திறன்வளர் தொடர் பணி' ஈறாக ஏழு பகுதிகள் உள்ளன. சொற்களஞ்சியம் - சொற்களைப் பிரித்தறிக, அருஞ்சொற்பொருள், சொல்லாட்சித் திறன், விளக்கவுரை என நான்கு பிரிவுகளாக அமையும். செய்யுள் பகுதியில் உள்ளது போலவே, இங்கும் புறவய வினாக்கள், மூன்று வரி - ஆறு வரி வினாக்கள் ஆகியன 'பொருளுணர் திறன் பயிற்சி'யில் இடம் பெற்றுள்ளன.

அடுத்துள்ள பகுதியில் மொழித்திறன் வளர்க்கும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைபோன்ற **மேலும் சில பயிற்சிகளையும், வினாக்களையும் ஆசிரியர் தயாரித்துப் பயன்படுத்துதல் நன்று.** 'பிழை நீக்கி எழுதுக' பகுதியில் மாணவர் கட்டுரை எழுதுங்கால் ஏற்படும் பெரும்பாலான பிழைகளை நீக்குவதற்கான பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இதனையடுத்து 'வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம்' அறிந்து எழுதுவதற்கான பயிற்சி இடம் பெற்றுள்ளது. அடுத்துள்ள பகுதி 'அகராதி காணும் பயிற்சி'யாகும். எழுத்து வரிசையினை அறிவதற்கும் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளை வரிசை முறையில் அறிவதற்கும் பயிற்சியளிக்கப்பட்டு அவற்றின்வழி அகராதியைப் பயன்படுத்தும் திறன் வளர்க்கப்படுகிறது. இறுதியாக அமைந்த 'திறன்வளர் தொடர் பணி' பாடத் தொடர்புடைய பிற

செய்திகளை மாணவர் அறிவதற்குத் தூண்டுமாறு வினாக்களை, விளக்கங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத் திட்டம் மாணவரது எழுத்துத்திறன் வளர்ச்சியோடு கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களை வளர்ப்பதற்கும் சில வழிமுறைகளைப் பரிந்துரைத்துள்ளது. அதன்படி கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களை வளர்க்க ஒவ்வொரு மாதமும் (முதல் வாரம் - முதல் வேலைநாள், இரண்டாம் வாரம் - முதல் வேலைநாள், மூன்றாவது வாரம் - முதல் வேலைநாள் எனக்) கிழமைகளை ஒதுக்கி அவற்றிற்குப் பயிற்சி தரலாம். அல்லது பள்ளிச் சூழ்நிலைக்கு ஏற்பத் திட்டமிட்டுக் கொள்ளலாம்.

மாணவரது **கேட்டல் திறனை வளர்ப்பதற்கான ஒலி நாடாக்களைத் தயாரிக்கும் சில குறிப்புகள்** பாடநூல் இறுதியில் பின் இணைப்பாகக் **கொடுக்கப்பட்டுள்ளன.** பள்ளியின் ஆதரவுடன் அவற்றைத் தயாரித்துப் பயன்படுத்துதல் நன்று.

மாணவரது பேசுதல் திறனை வளர்ப்பதற்கு, குறிப்பிட்ட தலைப்புகளை முன்னதாக வழங்கிப் பேசச் செய்தல், நகைச்சுவைத் துணுக்குகள் கூறச் செய்தல், வினாடி வினா நடத்துதல் என இப்பாட வேளையை அமைத்துக் கொள்ளலாம். **ஒரு பாடவேளையில் குறைந்தது 10 மாணவராவது பேசுமாறு திட்டமிட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் ஆண்டில் குறைந்தது இரண்டு முறைகளாவது பேசியிருத்தல் வேண்டும்.**

படித்தல் திறன் வளர்த்தல் இரு பகுதிகளாக அமையும். பிறர் கேட்டுப் பொருள் உணரும் வண்ணம் நிறுத்திப் படித்தல், குரல் ஏற்றத் தாழ்வுடன் படித்தல், ஒலிப்புப் பிழையின்றி வாய்விட்டு உரக்கப் படித்தல் ஒரு பகுதியாக அமையும். ஒவ்வொரு மாணவனையும் **வாய்விட்டு உரக்கப் படிக்கச் செய்தல்** வேண்டும். அடுத்தது படிப்புப் பழக்கம் ஏற்படுத்துதல். மாணவர்களைப் பாடநூல் தவிர **நூல் நிலையத்திலுள்ள புத்தகங்கள், பிற புத்தகங்களைப் படிக்கச் செய்தல்** வேண்டும். அந்தந்த நூலின் சுருக்கத்தை ஒரு குறிப்பேட்டில் எழுதச் செய்தல் வேண்டும். அக்குறிப்பேட்டில் ஆசிரியர் அவ்வப்பொழுது கையொப்பமிடல் வேண்டும். நூல் படித்த விவரங்களைக் குறிக்கப் பாடநூல் இறுதியில் ஒரு படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிவத்தைத் தனியே தயாரித்து, மாணவர் விவரங்களை நிரப்பியவுடன் ஆசிரியர் அதிலும் கையொப்பமிட வேண்டும்.

இவ்வாறு மாணவரது மொழித்திறன்களை வளர்க்க, ஆசிரியர் திட்டமிட்டுச் செயலாற்றுதல் நன்று.

# கற்றல் பொருள்
## *செய்யுள் பகுதி*


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | 1 |
| 2. | அறவுரைப் பகுதி | |
| | அ. திருக்குறள் | 4 |
| | ஆ. ஏலாதி | 25 |
| | இ. இன்னிலை | 29 |
| 3. | தொடர்நிலைச் செய்யுள் | |
| | அ. திருவிளையாடற் புராணம் | 33 |
| | ஆ. ஆசிய ஜோதி | 45 |
| 4. | பல்சுவைப் பாடல்கள் | |
| | அ. முத்தொள்ளாயிரம் | 51 |
| | ஆ. திருக்குற்றாலக் குறவஞ்சி | 53 |
| | இ. தில்லைக் கலம்பகம் | 56 |
| | ஈ. வள்ளலார் பிள்ளைத் தமிழ் | 58 |
| | உ. முக்கூடற் பள்ளு | 62 |
| | ஊ. கலைசைச் சிலேடை வெண்பா | 64 |
| | எ. நாட்டுப் பாடல் | 66 |
| 5. | மறுமலர்ச்சிப் பாடல்கள் | |
| | அ. தமிழ் | 69 |
| | ஆ. பெண் கல்வி | 72 |
| | இ. கையறுநிலை | 74 |
| | ஈ. பெண்மை வெல்க | 76 |
| | உ. முன்னேற்றம் முடக்குவது | 78 |
| | ஊ. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் | 81 |
| | எ. பாட்டெழுது. | 83 |
| 6. | வழிபாட்டுப் பாடல்கள் | |
| | அ. சிவபெருமான் | 85 |
| | ஆ. திருமால் | 88 |
| | இ. இயேசுநாதர் | 90 |
| | ஈ. முகம்மது நபி | 92 |

## மனப்பாடப் பகுதி


| | அடி |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 4 |
| திருக்குறள் | 60 |
| ஏலாதி (செய்யுள் - 2) | 4 |
| இன்னிலை (செய்யுள் - 3) | 4 |
| திருவிளையாடற் புராணம்(செய்யுள்-10, 11) | 8 |
| முத்தொள்ளாயிரம் | 4 |
| திருக்குற்றாலக் குறவஞ்சி | 8 |
| முக்கூடற்பள்ளு | 8 |
| | 100 அடிகள் |


## உரைநடைப் பகுதி


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | உலக உத்தமர் காந்தியடிகள் ........................................ (பேரறிஞர் அண்ணா) | 94 |
| 2. | பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக. ........................................ (பத்மஸ்ரீ திரு. நெ.து. சுந்தரவடிவேலு) | 105 |
| 3. | மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ........................................ (பாவலர் ஆ. முத்துராமலிங்கம்) | 114 |
| 4. | சிற்றிலக்கியங்கள் ........................................ (பேராசிரியர் முனைவர் இரா.கு.நாகு) | 122 |
| 5. | தீங்குசெய் தீயைத் தடுப்போம் ........................................ (முனைவர் சு.பரமசிவன்) | 131 |
| 6. | கொம்பை வெட்டிக் காலை நடு ........................................ (திருமதி. சந்திரிகா ராஜ்மோகன்) | 138 |
| 7. | சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் ........................................ (திருமதி. மணிமேகலை பாலதண்டாயுதம்) | 144 |
| 8. | விளையாட்டுகள் ........................................ (முனைவர் இராச. திருமாவளவன்) | 151 |
| 9. | நலவாழ்வுக்கு நல்ல மூலிகைகள் ........................................ (முனைவர் பி. இரத்தின சபாபதி) | 157 |
| 10. | குமண வள்ளல் (நாடகம்) ........................................ (புலவர் தணிகை உலகநாதன்) | 163 |

# செய்யுள் பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

'வாழ்த்து' என்னும் சொல்லுக்குப் 'புகழ்ந்து போற்றுதல்' என்று பொருள். இறைவனின் இயல்புகளைத் தாம் உணர்ந்தவாறு உள்ளன்போடு போற்றிப் பாடுதல் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

கதிரவன் கிரணக் கையாற்
        கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடு மாடிப் பாடித்
        துதிசெயுந் தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்
        பூதந்தந் தொழில்செய் தேத்தும்
அதிர்கட லொலியால் வாழ்த்தும்
        அகமேநீ வாழ்த்தா தென்னே!

- வேதநாயகம் பிள்ளை

### I. நூல் குறிப்பு

இச்செய்யுள் வேதநாயகம் பிள்ளை பாடித் தொகுத்த 'நீதி நூல் திரட்டு' என்னும் நூலிலிருந்து தேர்வு செய்யப் பெற்றுள்ளது. இறைவன் உலகில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் பரவிக் காணப்படுவதால் அவன் இறைவன் என அழைக்கப் பெற்றான். எண்ணம், பேச்சு, செயல் மூன்றையும் கடந்துள்ளமையால் 'கடவுள்' எனப்பெற்றான். இப்படிப் பலவாறு போற்றப் பெறும் அனைத்திற்கும் மேலான சக்தியை. இயற்கையின் படைப்புகள் எல்லாம் எவ்வெவ்வாறு வழிபடுகின்றன என்று கூறி, தம் மனத்தையும் அவ்வழிபாட்டு நெறிக்குச் செல்லுமாறு ஆசிரியர் இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

### II. ஆசிரியர் குறிப்பு

வேதநாயகம் பிள்ளை, சவரிமுத்துப் பிள்ளைக்கும் ஆரோக்கிய மேரி அம்மையார்க்கும் மகனாகப் பிறந்தவர். திருச்சிக்கு அருகிலுள்ள

குளத்தூரில் வாழ்ந்தவர். அரசுப் பணியில் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து, முனிசீபாகப் பணியாற்றியவர். 'நீதி நாயகர்' எனப் போற்றப் பெற்றவர். இவர் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினத்தை எழுதினார். இதுவே தமிழில் எழுதப்பட்ட முதல் புதினமாகும். உரைநடை வளர்ச்சிக்கு இவர் வழிவகுத்தார். நீதி நூல் திரட்டு, பெண்மதி மாலை, சர்வ சமயக் கீர்த்தனைகள் முதலிய செய்யுள் நூல்களையும் படைத்துள்ளார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1826 - 1889.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

கிரணக்கை - கிரணம் + கை; புட்கள் - புள் + கள்; சுதியொடுமாடி - சுதியொடும் + ஆடி; தருக்களெல்லாம் - தருக்கள் + எல்லாம்; பூதந்தந்தொழில் - பூதம் + தம் + தொழில்; செய்தேத்தும் - செய்து + ஏத்தும்; கடலொலி - கடல் + ஒலி; வாழ்த்தா தென்னே - வாழ்த்தா(த)து + என்னே.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

கிரணம் - ஒளிக்கதிர்; புள் - பறவை; சுதியொடு - இசையுடன்; துதிசெயும் - வணங்கும்; தருக்கள் - மரங்கள்; பொதிஅலர் - மணம் பொருந்திய மலர்; பூதம் - ஐம்பெரும் மூலப் பொருள்கள் (நிலம்,நீர், தீ, வளி,வெளி); ஏத்தும் - போற்றும்; அதிர் கடல் - ஒலிக்கின்ற கடல்; அகம் - மனம்.

### இ. விளக்கவுரை :

'கதிரவன் தன் கதிர்களாகிய கைகளால் கடவுளைத் தொழுகிறான்; பறவைகளும் தம் இனிய ஓசையால் ஆடிப்பாடி வணங்குகின்றன. மரம் செடி கொடிகள் மணம் நிறைந்த மலர்களைத் தூவி வணங்குகின்றன. ஐம்பெரும் பொருள்களும் தம் தம் தொழில் செய்து போற்றுகின்றன. ஒலிக்கின்ற கடலானது தன் ஒலியால் வாழ்த்துகிறது. அவைபோல் மனமே, நீ வாழ்த்தாமல் இருக்கலாமோ? வாழ்த்துவாயாக' என்று வேதநாயகம் பிள்ளை பாடுகிறார்.

## IV. பொருளுணர் திறன் பயிற்சி

### அ. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. இவ்வாழ்த்துச் செய்யுள் ----- நூலிலிருந்து தேர்வு செய்யப் பெற்றுள்ளது.
2. வேதநாயகம் பிள்ளை எழுதிய புதினத்தின் பெயர் ------- .

3. பாடலில் 'பறவைகள்' என்பதைக் குறிக்கும் சொல் ---.

4. பாடலில் 'மரம்' என்பதைக் குறிக்கும் சொல் -------.

**ஆ. கீழ் உள்ள சொற்களையும் பொருள்களையும் பொருத்துக.**

| **சொற்கள்** | | **பொருள்கள்** |
|---|---|---|
| 5. | கிரணம் | - அ. கடல் |
| 6 | புள் | - ஆ. மலர் |
| 7. | தரு | - இ. பறவை |
| 8. | அலர் | - ஈ. ஒளிக்கதிர் |
| | | - உ. மரம் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. புட்கள் இறைவனை எவ்வாறு வணங்கும்?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

10. வேதநாயகம் பிள்ளை தம் மனத்துக்குக் கூறுவதென்ன?

## V. மொழித்திறன் வளர் பயிற்சி

கீழ் உள்ள எடுத்துக்காட்டைப் படித்து அறிக. பின்பு அட்டவணையை நிறைவு செய்க.

எ.டு : கிரணம் + கை - கிரணக்கை

1. வட்டம் + பலகை ................................
2. பழம் + தோல் .......................................
3. அகலம் + கிணறு ................................
4. நீளம் + தாண்டுதல்................................
5. புறம் + கூறுதல்......................................

## VI. திறன்வளர் தொடர்பணி

இச்செய்யுளில் 'வணங்குதல்' என்னும் பொருளில் தொழுதல், துதித்தல், ஏத்துதல், வாழ்த்துதல் ஆகிய சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இதனைப்போன்று 'சொன்னான்' என்னும் பொருள் தரக்கூடிய நான்கு சொற்களை எழுதுக.

1. .................. .　　　2. .................. .

3. .................. .　　　4. .................. .

# 2. அறவுரைப் பகுதி

வாழ்க்கைக்கு உகந்த நற்பண்புகளை அறிவுறுத்தும் அறவுரை இலக்கிய நூல்கள் தமிழில் பல உள்ளன. அவற்றுள் திருக்குறள், ஏலாதி, இன்னிலை ஆகிய நூல்கள் கூறும் நற்கருத்துகள் சில இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

## அ. திருக்குறள்

திருக்குறள் 'உலகப் பொதுமறை' என வழங்கப்படுகிறது. இதில் சுட்டப்பெறாத வாழ்க்கை முறைகள் எதுவுமே இல்லை எனலாம். இந்நூலில் 15 அதிகாரங்களிலிருந்து 30 குறட் பாக்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன.

### நடுவுநிலைமை

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 1

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 2

### ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 3

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 4

### அழுக்காறாமை

கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 5

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 6

### புறங்கூறாமை

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 7

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 8

### அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 9

அருளிலார்க்(கு) அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 10

### சிற்றினம் சேராமை

நிலத்தியல்பால் நீர்திரிந்(து) அற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப(து) ஆகும் அறிவு. 11

நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல். 12

### தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 13

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல். 14

### சுற்றம் தழால்

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 15

காக்கை கரவாக் கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 16

### இடுக்கண் அழியாமை

இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர். 17

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 18

### சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 19

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 20

**வினை செயல்வகை**

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 21

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 22

**அவையஞ்சாமை**

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 23

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர். 24

**பொருள் செயல்வகை**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல(து) இல்லை பொருள். 25

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 26

**நட்பு ஆராய்தல்**

ஊதியம் என்ப(து) ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 27

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 28

**பண்புடைமை**

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்(பு) இல்லா தவர். 29

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 30

**- திருவள்ளுவர்**

## I. நூற்குறிப்பு

மக்கள் அனைவரும் தம் வாழ்வில் பின்பற்றி உயர்வு அடையத்தக்க சிறந்த கருத்துகளை எடுத்துரைப்பது திருக்குறள். சுருக்கமான அடிகளில் விரிவான பொருளை அளந்து காட்டுவது.

மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பது. எனவே 'உலகப் பொதுமறை' எனப் போற்றப் பெறுகிறது. இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் தலை சிறந்தது. மக்கள் வாழ்வில் அடையத்தக்க உறுதிப் பொருள்கள் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் விரித்து உரைப்பது. எனவே 'முப்பால்' எனும் பெயர் பெற்றது. 133 அதிகாரங்களையும் 1330 குறள் பாக்களையும் பெற்றிருப்பது. வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யாமொழி, தெய்வநூல் என்னும் பெயர்களும் இதற்கு உண்டு. 'திருவள்ளுவ மாலை' என்பது திருக்குறளின் பெருமை குறித்துச் சான்றோர் பலர் பாடிய பாக்களின் தொகுப்பாகும். இதனால் திருக்குறளின் பெருமையை அறியலாம். திருக்குறளை நன்கு படித்து அதன்படி ஒழுகுவோமாயின் வாழ்வு செம்மையுறும்.

## II. ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரைப் பற்றிய உண்மை வரலாறு தெரிந்திலது. இவர் சிறப்பை விளக்கச் செவிவழிச் செய்திகள் பல வழங்குகின்றன. இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில் புலவர், பெருநாவலர், தேவர் முதலிய பெயர்களாலும் போற்றுகின்றனர். இவர் கி.மு.31இல் பிறந்தவர் என உறுதி செய்யப்பட்டுத் 'திருவள்ளுவர் ஆண்டு' கணிக்கப்பட்டுள்ளது. இவர் தம் குடிப்பெயரைத் தம் பெயராக்கிக் கொண்டவர் என்பர். இவர் பிறந்தமையால் தமிழ் மொழியும் தமிழ்நாடும் பெருமை பெற்றன. எனவேதான் பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாடினார். "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்று பாரதிதாசனும் பாடியுள்ளார்.

## III. சொற்களஞ்சியம்

**நடுவுநிலைமை** : நண்பர், பகைவர், அயலார் என்னும் மூவகையாரிடத்திலும் அறத்தில் தவறாது சமமாக நிற்கும் தன்மை.

### அ. சொற்களைப் பிரித்தறிக.

1. நடுவிகந்தாம் - நடுவு + இகந்து + ஆம்.

2. அமைந்தொருபால் - அமைந்து + ஒரு + பால். சான்றோர்க்கணி - சான்றோர்க்கு + அணி.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

1. தரினும் - கொடுப்பதானாலும்; நடுவு - நடுவுநிலைமை, தகுதி

உடைய அறம்; இகந்து - நீங்கி, ஒழிந்து; ஆம் - ஆகும்; ஆக்கம் - செல்வம்; அன்றே - அப்பொழுதே; ஒழியவிடல் - (விரும்பாது) விட்டுவிடுக.

2. சமன் செய்து - முதலில் தான் சமமாக நின்று; சீர்தூக்கும் - தன்னிடம் வைத்த பொருளை அளவிட்டுக் காட்டும்; கோல் - தராசு; ஒருபால் - ஒரு பக்கம்; கோடாமை - வளைந்து கொடுக்காமை; அணி - அழகு.

**இ. விளக்கவுரை:**

1. நடுவு நிலைமையைக் கைவிடுவதால் வரும் செல்வம் (நன்மை தருவதுபோல் தோன்றினாலும்) தீமையே தரும். இக்குறளில் **நடுவு நிலைதவறியதால் வந்த செல்வம் தீமை பயக்கும்** என்பது கூறப்பட்டது.

2. சமன் செய்தலும் சீர் தூக்கலும் ஒருபாற் கோடாமையும், துலாக் கோலுக்கும் சான்றோருக்கும் சிறப்பு சேர்ப்பவை. **ஒரு பால் கோடாது** (ஒரு பக்கம் சாராமல்) **செயல்படுவதே நடுவுநிலை** என்பது கூறப்பட்டது.

**ஒழுக்கம் உடைமை:** விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி தவறாது நடத்தல்.

**அ. அருஞ்சொற்பொருள்:**

3. விழுப்பம் - சிறப்பு, பெருமை; ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்.

4. எய்துவர் - அடைவர்; இழுக்கத்தின் - (ஒழுக்கத்தில்) தவறுவதால்; எய்தா - அடையக்கூடாத; பழி - பழிச்சொல், குற்றம் கூறுதல்.

**ஆ. விளக்கவுரை:**

3. எல்லார்க்கும் சிறப்பைத் தருவது நல்லொழுக்கமே. ஆதலால் இங்கு 'ஒழுக்கம்' என்று குறிப்பிடப்பெற்றது நல்லொழுக்கத்தையே. எல்லாப் பொருள்களினும் சிறந்தது உயிரே. ஆயினும் ஒழுக்கத்தைப்போல் உயிர் விழுப்பம் (உயர்வைத்) தராததனால் உயிரினும் மேம்பட்டது என்று கூறினார். 'உயிரினும் சிறந்தது ஒழுக்கமே' என்பதனால் இதில் **ஒழுக்கத்தின் சிறப்பு** கூறப்பட்டது.

4. அடையத்தக்கது மேன்மை. அடையத் தகாதது பழி. இக்குறளில் **ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் சிறப்பும் ஒழுக்கத்தில் தவறுவதால் ஏற்படும் பழியும்** கூறப்பட்டன.

**அழுக்காறாமை :** பிறரது வளர்ச்சி, செல்வம் முதலானவற்றைக் கண்டு பொறாமை கொள்ளாத இயல்பு.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

6. திருச்செற்று - திரு + செற்று. தீயுழி - தீ + உழி.

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

5. அழுக்கறுப்பான் - பொறாமை கொள்பவன்; சுற்றம் - உறவினர், சுற்றி நிற்பவர்; உடுப்பது - உடை; உண்பது - உணவு.

6. அழுக்காறு - பொறாமை; பாவி - கொடிய தன்மை; திரு - செல்வம்; செற்று - அழித்து; தீயுழி - கொடிய இடம், நரகம்; உய்த்து - செலுத்தி.

**இ. விளக்கவுரை:**

5. ஒருவர் உணவும் உடையும் இல்லாமல் கெடுவர் என்பதனால், பிற செல்வங்களையும் இழப்பர் என்பது கூறப்பட்டது. வறியவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பதைத் தடுக்கக்கூடாது என்பதை ஔவையார் 'ஈவது விலக்கேல்' எனக் கூறியுள்ளார். அதனால் வறுமை வந்து சேரும் என்பது புலப்படுகிறது.

6. இம்மையிலேயே பயனைத் தருவதனால் 'ஒரு பாவி' எனக் குறிப்பிட்டு அழுக்காறாகிய பாவியின் கொடுமையை விளக்கினார். இக்குறள்களில் **அழுக்காறு உடைமையது குற்றம்** கூறப்பட்டுள்ளது.

**புறம் கூறாமை:** பிறரைக் காணாத இடத்தில் இழிவாகப் பேசாமை. புறம் பேசுதல் சொற் குற்றத்தை ஏற்படுத்தும்.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

7. நட்பாடல் - நட்பு + ஆடல்.

8. தங்குற்றம் - தம் + குற்றம்; தீதுண்டோ - தீது + உண்டோ.

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

7. பகச்சொல்லி - விட்டுப் பிரியும்படி சொற்களைக் கூறி, புறங் கூறி; கேளிர் - சுற்றத்தவர்; பிரிப்பர் - பிரியச் செய்வர்; நட்பாடல் - நட்புச் செய்தல்; தேற்றாதவர் - அறியாதவர்.

8. ஏதிலார் - அயலவர்; தம் குற்றம் - புறங் கூறுதலாகிய தமது குற்றம்; காண்கிற்பின் - ஆராய்ந்து பார்த்தால் ; மன்னும் உயிர்க்கு - நிலை பெற்ற உயிர் வாழ்க்கைக்கு; தீது உண்டோ - வரக்கூடிய துன்பம் எதுவும் உண்டோ?

**இ. விளக்கவுரை :**

7. புறம் பேசுபவனை விட்டு அவன் நண்பனும் பிரிந்து விடுவான். புறம் கூறுபவன் நண்பர்களையும் பிரிப்பான்; இனிய சொற்களைப் பேசி அயலவரோடு நட்புக் கொள்ளுதலையும் அறியான். இக்குறளில் **புறம் பேசுபவன் அடையும் குற்றம்** கூறப்பட்டுள்ளது.

8. புறம் பேசுபவன் அதற்காகப் பிறரிடம் குற்றங்களைத் தேடுகிறான். அதுபோல், தான் புறம் பேசுவதும் குற்றம் என்பதை உணர வேண்டும். தன் குற்றத்தை உணர்ந்தால் புறம் பேசமாட்டான் என்பதாகும். இக்குறளில் **புறங்கூறாது இருப்பதற்கு உரிய வழி** கூறப்பட்டுள்ளது.

**அருள் உடைமை :** தொடர்பு இல்லாத நிலையிலும், எல்லா உயிர்களிடத்திலும் செய்வதாகிய கருணை. ஏதேனும் ஓர் உயிர் துன்புறும்போது, அத்துன்பத்தைத் தன் உயிருக்கு ஏற்பட்ட துன்பமாக எண்ணி வருந்தும் இரக்கம்.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

9. அருட்செல்வம் - அருள் + செல்வம்; பொருட்செல்வம் - பொருள் + செல்வம்.

10. அருளிலார்க்கு - அருள் + இலார்க்கு; அவ்வுலகம் - அ + உலகம்; பொருளிலார்க்கு - பொருள் + இலார்க்கு; இவ்வுலகம் - இ + உலகம்; இல்லாகியாங்கு - இல் + ஆகி + ஆங்கு.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

9. அருட்செல்வம் - அருளால் வரும் செல்வம்; பொருட் செல்வம் - பொருளால் வரும் செல்வம்; பூரியார் - இழிந்தவர்; உள - உளவாகும்.

10. அருள் - கருணை, இரக்கம்; பொருள் - செல்வம்; அவ்வுலகம் - மோட்ச உலகம், முக்தி; இவ்வுலகம் - மண் உலகம்; இல்லாகியாங்கு - இல்லாதது போல.

**இ. விளக்கவுரை :**

9. உயர்ந்தோரிடத்து மட்டுமே உளதாகும் அருளாகிய செல்வம், அவர் உயிரையும் பிற உயிர்களையும் பாதுகாக்க ஏதுவாகும். தாழ்ந்தவரிடத்தும் உளதாகும் பொருள் செல்வம், அதை உடையவர் உயிரை மட்டும் அல்லாமல் பிற உயிர்களையும் பாதுகாக்க உதவாமல் போகலாம். எனவே, பொருள் செல்வத்தைவிட அருள் செல்வமே

சிறந்ததாகும். பூரியார்கண் - இங்கு 'கண்' என்பது 'இடத்தில்' என்ற பொருளை உணர்த்தி வந்ததால் 'ஏழாம் வேற்றுமை உருபு'. இதில் **அருளின் சிறப்பு** விளக்கப்பட்டது.

10. 'அவ்வுலகம்' என்பது அந்த உலகமாகிய வீட்டு உலகில் அனுபவிக்கப்படும் இன்பத்தையும், 'இவ்வுலகம்' என்பது இந்த உலகமாகிய மண்ணுலகில் அனுபவிக்கப்படும் இன்பத்தையும் குறித்தன. 'அ', 'இ' என்பவை சுட்டெழுத்துகள். அருளிலார்க்குச் சுவர்க்க இன்பம் இல்லை. செல்வம் இல்லாதவருக்கு மண்ணுலக இன்பம் இல்லை. இக்குறளில் **அருள் இல்லாதவருக்கு வரும் குற்றம்** கூறப்பட்டது.

**சிற்றினம் சேராமை :** நன்மை தீமை உணராமை, தீய ஒழுக்கம் உடைமை, வஞ்சகம் முதலான அற்ப குணம் உடையோர் சிற்றினம் ஆவர். இத்தகைய குணம் படைத்தவருடன் சேர்ந்திராமை.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

11. நிலத்தியல்பால் - நிலத்து + இயல்பால்; அற்றாகும் - அற்று + ஆகும்; இனத்தியல்பது - இனத்து + இயல்பு + அது.

12. நல்லினம் - நன்மை + இனம்; துணையில்லை - துணை + இல்லை; தீயினம் - தீமை + இனம்.

**ஆ. அருஞ்சொற் பொருள் :**

11. இயல்பான் - தன்மைக்கு ஏற்ப; திரிந்து - மாறுபட்டு; அற்று ஆகும் - அந்த நிலத்தின் தன்மையைப் பெறும்; மாந்தர் - மக்கள்.

12. ஊங்கு - காட்டிலும், விட; அல்லல் படுப்பதும் - துன்பம் தருவதும், பகையும்.

**இ. விளக்கவுரை :**

11. வானிலிருந்து விழும் நீர், தான் விழும் நிலத்தின் தன்மையைப் பெறும். மக்களின் அறிவும் அவர் சேர்ந்த இனத்தின் இயல்பால் மாறுபடும். எனவே சிற்றினத்தவருடன் சேர்தல் கூடாது. இக்குறளில் **சிற்றினத்துடன் சேர்தல் ஆகாது என்பதற்கு உரிய காரணம்** கூறப்பட்டது.

நிலம் உயிரினங்கள் வாழும் இடம். நீர் உயிர்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது. தொடர்புடைய கருத்து : மண் மாசுபட்டால் நீரும் மாசுபடும். மண் மாசைத் தடுக்க மக்கள் வழிவகுக்க வேண்டும். நீர் மாசுபட்டால் உயிர் வாழ்க்கை கெடும். நீருக்கு என்று ஒரு தனித்தன்மை உண்டு. அது, தான் சேர்ந்ததன் இயல்பைப் பெறுதலாகும். சுற்றுச்சூழல்

மாசுபட்டால் உயிர் வாழ்க்கை எந்த அளவு பாதிக்கும் என்பதை மனிதன் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

12. நல்லினம் தன்னைச் சார்ந்தவரைத் துன்பங்களிலிருந்து காப்பதனால் 'சிறந்த துணை' என்றார். தீயினம் தன்னைச் சார்ந்தவரைத் துன்பத்தில் ஆழ்த்துவதனால் 'அல்லல் படுப்பது' என்றார். அதாவது 'பகை' என்றார். இக்குறளில் **நல்லினம், தீயினம் சேர்தலின் விளைவுகள்** கூறப்பட்டுள்ளன.

**தெரிந்து வினையாடல்** : ஒரு செயலைச் செய்வதற்கு உரியவரைத் தேர்வு செய்தபிறகு, அச்செயலைத் தேர்வு செய்யப்பட்டவரிடம் ஒப்புவித்தல்.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

13. அன்பறிவு - அன்பு + அறிவு ; அவாவின்மை - அவா + இன்மை; நன்குடையான் - நன்கு + உடையான்.

**ஆ. அருஞ்சொற் பொருள் :**

13. தேற்றம் - கலக்கமின்றித் தெளிதல்; அவா - பேராசை; இன்மை - இல்லாத தன்மை; தெளிவு - தெரிந்தெடுத்தல்.

14. செய்வானை - செயலைச் செய்ய வேண்டியவனை; நாடி - ஆராய்ந்து; வினை - செயலின் தன்மை; எய்த - பொருந்த; உணர்ந்து - அறிந்து.

**இ. விளக்கவுரை :**

13. அன்பு, அறிவு, தெளிவு, அவா இன்மை என்னும் நான்கு குணங்களைப் பெற்றவனையே ஒரு செயலைச் செய்வதற்கு உரியவன் என்று தேர்வு செய்தல் வேண்டும். இதில் **வினையைச் செய்வதற்கு உரியவனது இலக்கணம்** கூறப்பட்டுள்ளது.

14. செயலைச் செய்வதற்கு உரியவனைத் தேர்வு செய்து, செயலின் இயல்பையும் ஆராய்ந்து, அதன்பின் தக்க காலத்தில் செயல்படுத்தத் தூண்டுதல் வேண்டும். இக்குறளில் **தேர்வு செய்யப்பெற்றவனைச் செயலில் ஈடுபடச் செய்யும் திறம்** கூறப்பட்டுள்ளது.

**சுற்றம் தழால் :** உறவினர் தன்னை விட்டு நீங்காமல், அணைத்து வாழ்தல். (சுற்றம் - உரிய காலத்தில் சுற்றி நிற்பவர். எனவே காரணப்பெயர்)

அ. **சொற்களைப் பிரித்தறிக.**

16. கரைந்துண்ணும் - கரைந்து + உண்ணும்.

ஆ. **அருஞ்சொற்பொருள் :**

15. சுற்றப்பட - சூழும்படி; ஒழுகல் - தழுவி, ஆதரித்து நடத்தல்; பெற்றத்தால் - பெற்றதால்.

16. கரவா - மறைக்காது, ஒளிக்காமல்; கரைந்து - அழைத்து; ஆக்கம் - நன்மை, பெருஞ்செல்வம்; அன்ன நீரார்க்கு - அத்தன்மையதான இயல்பை உடையவருக்கு.

இ. **விளக்கவுரை :**

15. சுற்றத்தவர் சூழ்ந்திருக்கும்படி வாழ்தல் என்பது சுற்றத்தவரை ஆதரித்தலாகும். அதுவே செல்வத்தைப் பெற்றதற்குப் பயனாகும். இதில் **செல்வத்தைப் பெற்றிருத்தலாலாகிய பயன் சுற்றம் தழுவி வாழ்தல்** என்பது விளக்கப்பட்டது.

16. செல்வத்தைப் பெற்றவர், தாம் நுகர்வதைத் தம் சுற்றத்தவரும் நுகருமாறு செய்தல் வேண்டும் என்னும் கருத்தை விளக்கக் காக்கையின் செயலை உவமை கூறியுள்ளார். இக்குறளில் **சுற்றம் தழுவி வாழும் தன்மை** கூறப்பட்டது.

**இடுக்கண் அழியாமை :** செயலில் ஈடுபடும்போது ஏற்படும் துன்பத்தைக் கண்டு மனம் கலங்காத தன்மை.

அ. **சொற்களைப் பிரித்தறிக.**

18. இயல்பென்பான் - இயல்பு + என்பான்.

ஆ. **அருஞ்சொற்பொருள் :**

17. இடும்பை - துன்பம்; இடும்பை படாதவர் - வருந்தாதவர்; இடும்பை படுப்பர் - துன்பம் விளைப்பர்.

18. விழையான் - விரும்பாதவன்; இயல்பு என்பான் - இயல்பு என்று நினைப்பவன்; உறுதல் - அடைதல்.

இ. **விளக்கவுரை :**

17. இடைவிடாது மன உறுதியோடு முயல்பவர், தாம் மேற்கொண்ட செயலில் ஏற்படும் துன்பத்திற்குத் துன்பம் ஏற்படுத்துவர். இக்குறளில் **துன்பம் கண்டு மனம் அழியாத நிலை** கூறப்பட்டது.

இந்தக் குறளில் ஓர் அழகு அமைந்துள்ளது. ஒரே சொல் பலமுறை வந்துள்ளது. அது எச்சொல்? 'இடும்பை' என்னும் சொல்.

எப்பொருளில் வந்துள்ளது? 'துன்பம்' என்ற பொருளில் வந்துள்ளது. இப்படி ஒரு சொல், அதே பொருளில் பல முறை வருவதனை ஓர் அழகாகக் (அணியாகக்) கொள்வர். அதனைச் 'சொற்பொருள் பின்வருநிலை அணி' என்பர்.

18. இன்பம் ஒன்றை மட்டுமே விரும்பாமல், துன்பம் வந்த போதிலும் எடுத்த செயலைக் கைவிடாமல் முயற்சியைத் தொடர்பவன் துன்பம் அடைவது இல்லை. இக்குறளில் **உடலுக்கு ஏற்படும் வருத்தத்திற்கு மனங்கலங்காமையும் அதற்கான வழியும்** சொல்லப்பட்டன.

**சொல்வன்மை :** எண்ணிய செயலை முடிப்பதற்கு ஏற்ற சொற்களைச் சொல்லுதலில் வல்லமை பெறுதல்.

### அ. சொற்களைப் பிரித்தறிக.

19. தகையவாய் - தகை + அவாய்; மொழிவதாம் - மொழிவது + ஆம்.

20. சோர்விலன் - சோர்வு + இலன்.

### ஆ. அருஞ்சொற் பொருள் :

19. கேட்டார் - நட்பாய் ஏற்றுக் கொண்டவர்; பிணிக்கும் - தம்மிடமிருந்து நீங்காதபடி வசப்படுத்தும்; தகை - பண்பு, இயல்பு; அவாய் - அவாவி, மேலும் மேலும் கொள்ள விரும்பி; கேளாரும் - பகையாய் ஏற்றுக் கொள்ளாதவரும்; வேட்ப - (பகை நீக்கி) விரும்புமாறு.

20. சொலல்வல்லன் - சரியானதைப் பிறர் ஏற்றுக் கொள்ளும்படி எடுத்துச் சொல்லுதலில் வல்லமையுடையவன்; சோர்வு இலன் - கூற வேண்டியவற்றை மறந்துவிடாதவன்; அஞ்சான் - சபைக்கு அஞ்சாதவன்; இகல் வெல்லல் - பகைமை பாராட்டி வெற்றி பெறுதல்.

### இ. விளக்கவுரை :

19. நண்பராக ஏற்றுக் கொண்டவரைப் பிணிப்பதோடு, பகைவராகி ஏற்றுக் கொள்ளாதவரையும் பகை நீக்கி ஏற்றுக் கொள்ளுமாறு உரைக்கப்படுவதே சிறந்த சொல்லாகும். சொல்லைக் கேட்டவரும் நீங்கக் கூடாது, கேளாதவரும் விரும்பி ஏற்க வேண்டும் என்பதாகும். குற்றம் இல்லாமல், சுருக்கமாக, விளங்குமாறு, சிறந்த கருத்துகளைக் கூறினால் எவரும் ஏற்பர். பகைவரும் நண்பராவர் என்பதாம். இக்குறளில் **சொல்லின் இலக்கணம்** கூறப்பட்டது.

20. தான் கூறும் கருத்தைக் கேட்பவர் ஏற்குமாறு சொல்லுதலில் வல்லமை உடையவனாய், சொல்ல வேண்டியதை எக்காரணத்தாலும் மறக்காதவனாய், சபையைக் கண்டு அஞ்சாதவனாய் உள்ளவனைப் பகைமை பாராட்டி எவராலும் வெற்றி பெற முடியாது. சொல்வன்மை, சோர்வு இன்மை, அஞ்சாமை என்னும் இயல்புகளைப் பெற்றவனை எவரும் பகைத்து வெற்றிபெற முடியாது. இக்குறளில் **சொல்லுதல் வல்லவரது சிறப்பு** கூறப்பட்டுள்ளது.

**வினைசெயல் வகை :** ஒருவர் மேற்கொண்ட செயலைச் செய்யும் திறமை.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

22. வினையாக்கி - வினை + ஆக்கி.

**ஆ. அருஞ்சொற் பொருள் :**

21. தூங்குக - காலம் நீட்டிக்க; தூங்கி - காலம் நீட்டித்து; செயற்பால - செய்ய வேண்டிய செயல்களை; தூங்காது - காலம் நீட்டிக்காமல்; தூங்கற்க - காலம் நீட்டிக்காது செய்க. தூங்குக × தூங்கற்க; தூங்கி × தூங்காது.

22. வினை - செயல்; ஆக்கிக் கோடல் - முடித்துக் கொள்ளுதல்; நனை கவுள் - மத நீரால் நனைந்த கன்னம்; யாத்தற்று - பிணித்தது போலாகும், கட்டியது போலாகும்.

**இ. விளக்கவுரை**

21. காலம் நீட்டித்துச் செய்ய வேண்டியதைக் காலம் நீட்டித்தும், விரைந்து செய்ய வேண்டியதை விரைந்தும் செய்தல் வேண்டும். தாமதமாகச் செய்ய வேண்டியதை விரைந்து செய்தாலும், விரைந்து செய்ய வேண்டியதைக் காலம் நீட்டித்துச் செய்தாலும் நற்பயன் விளையாது. இக்குறளில் **வினை செய்யும் திறம்** கூறப்பட்டது.

22. மதம் சிந்தும் யானையைக் கொண்டு வேறொரு மத யானையைப் பிடித்தல்போல் தொடங்கியதொரு செயலால், மற்றொரு செயலை முடிக்கும் உத்தியை அறிந்து செய்து முடித்தல் வேண்டும். இக்குறளில் **வலிமை குறைந்தவர் ஒரு செயலைச் செய்யும் முறை** கூறப்பட்டது.

**அவை அஞ்சாமை :** சபையில் ஒன்றைக் கூறும்பொழுது, அச்சபையைக் கண்டு அச்சம் கொள்ளாமை.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

24. பகையகத்து - பகை + அகத்து.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

23. கற்றாருள் கற்றார் - கற்றவர் எல்லாரினும் மிகச் சிறப்பாகக் கற்றவர்; செல - மனம் கொள்ளுமாறு; சொல்லுவார் - சொல்ல வல்லவர்.

24. பகையகத்து - பகைவர் கூட்டத்தின் இடையில்; சாவார் - அஞ்சாது போரிட்டு இறப்பவர்; அவையகத்து அஞ்சாதவர் - கற்றவர் நிறைந்த சபையில் புகுந்து பேச அஞ்சாதவர்.

**இ. விளக்கவுரை**

23. கற்றவர் நிறைந்த சபையில் தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளுமாறு எடுத்துச்சொல்ல வல்லவரே கற்றவர். எனவே, ‘எல்லாரினும் நன்கு கற்றவர்’ என உலகத்தவரால் போற்றப் பெறுவர். சிறக்கக் கற்றவர் ‘கற்றாருள் கற்றார்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவரே அவையில் அஞ்சாது சரியான கருத்தை வெளியிடுவர்.

24. பகைவர் கூட்டத்திடையே புகுந்து அச்சமின்றிப் போரிட்டு உயிர் விடுவது அரிய செயலாகும். உயிருக்கு அஞ்சாது போரிடும் அவர்களை, கற்றவர் நிறைந்த சபையில் புகுந்து அச்சமின்றிக் கருத்தை வெளியிடுபவருடன் ஒப்பிடும்போது எளியவரே ஆவர். அவை அஞ்சாதவர் கிடைப்பதற்கு அரியவராவர். இக்கருத்தை உள்ளடக்கியே ‘பேசப் போகிறாயோ? சாகப் போகிறாயோ?’ என்னும் பழமொழி உலகில் வழங்கி வருகிறது. இந்த இரு குறள் பாக்களிலும் **அவை அஞ்சாதவரது** சிறப்பு கூறப்பெற்றுள்ளது.

**பொருள் செயல்வகை :** பொருளாகிய செல்வத்தைத் தேடுதலின் வகை.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

25. பொருளல்லவரை - பொருள் + அல்லவரை; பொருளாக - பொருள் + ஆக; பொருளல்லது - பொருள் + அல்லது.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

25. பொருள் அல்லவரை - ஒரு பொருட்டாக மதிக்கத்தக்க சிறப்பு இல்லாதவரை; பொருளாக - மதிக்கத் தக்கவராக; செய்யும் - மதிக்கச் செய்யும்; பொருள் அல்லது - செல்வத்தைத் தவிர; பொருள் இல்லை - தேடத்தக்க பொருள் வேறு இல்லை.

26. இல்லாரை - பொருள் செல்வம் இல்லாதவரை; எள்ளுவர் - இகழ்ந்து பேசுவர்; எல்லாரும் - நண்பர், பகைவர், நொதுமலர் என்னும் அனைவரும்; நண்பரும் பகைவரும் அல்லாத அயலவரை 'நொதுமலர்' என்பர்.

**இ. விளக்கவுரை :**

25. மதிப்பதற்கு உரிய அறிவோ குணமோ இல்லாதவரையும், உயர்பொருளாக மதிக்கத்தக்க நிலைக்கு உயர்த்துவது பொருள் செல்வம். எனவே, பொருள் செல்வத்தைவிட உயர்ந்தது வேறு எதுவும் இல்லை.

26. பொருள் செல்வம் இல்லாதவரை நண்பர், பகைவர், அயலவர் ஆகிய அனைவரும் இகழ்ந்து பேசுவர். செல்வம் உடையவரை எல்லாரும் சிறப்புச் செய்து உயர்த்துவர். உலகிலுள்ள மக்கள் அனைவரையும் நண்பர், பகைவர், நண்பரோ பகைவரோ அல்லாத அயலவர் என்னும் மூன்று பிரிவுக்குள் அடக்கி விடலாம். இந்த இரு குறள்களிலும் **பொருளின் சிறப்பு** கூறப்பட்டுள்ளது.

''கல்லானே யானாலும் கைப்பொருளொன்(று) உண்டாயின்
எல்லாரும் சென்றங்(கு) எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்(று) ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா(து) அவன்வாயின் சொல்''

என்னும் நல்வழிச் செய்யுளை இங்கே ஒப்பிட்டுப் பார்த்திடுக.

**நட்பு ஆராய்தல்** : நட்புச் செய்வதற்கு உரியவரை ஆராய்ந்து அறிதல்.

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

28. மாசற்றார் - மாசு + அற்றார்; ஒன்றீத்தும் - ஒன்று + ஈத்தும்; ஒப்பிலார் - ஒப்பு + இலார்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

27. **ஊதியம்** - நற்பேறு, இலாபம்; ஒருவற்கு - ஒருவனுக்கு; பேதையார் - அறிவு இல்லாதவர்; கேண்மை - நட்பு; ஒரீஇ - நீக்கி, விலக்கி, ஒழித்து.

28. மருவுக - விரும்பி ஏற்றுக் கொள்க; மாசுஅற்றார் - குற்றம் இல்லாதவர், நல்லோர்; ஒன்று ஈத்தும் - ஒரு பொருளைக் கொடுத்தாவது; ஒருவுக - நீக்குக, ஒழித்திடுக; ஒப்பு இலார் - ஏற்கத்தக்க சிறப்பு இல்லாதவர். மருவுக × ஒருவுக.

**இ. விளக்கவுரை :**

27. அறிவு இல்லாதவருடன் நட்பு கொள்ளுதல் ஏற்றதன்று. ஆராய்ந்து பார்க்காமல் அவ்வகை நட்பைக் கொண்டிருந்தால், உடனே அடியோடு விலக்கிவிடுதல் வேண்டும். அப்படி விலக்காவிட்டால் துன்பமே ஏற்படும். இம்மை மறுமை இன்பங்களை இழக்க நேரிடும் என்கிறார் வள்ளுவர். இக்குறளில் **ஆராய்ந்து அறிந்தபின் நீக்கப்படவேண்டிய நட்பின் இயல்பு** விளக்கப்பட்டுள்ளது.

''சந்தனத்தைச் சார்தருவும் தக்க மணங்கமழும்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற - அந்தவனம்
தானுமச் சந்தனமும் தன்னினமும் மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்''

என்னும் நாலடியாரின் பாடல் கருத்தைப் படித்து அறிக.

28. குற்றமில்லாதவர் நட்பை விரும்பிக் கொள்ள வேண்டும். புகழையும் புண்ணியத்தையும் கொண்ட அவரது நட்பு இருமைக்கும் இன்பத்தைத் தரும். அல்லாத தீயவரின் நட்பை ஒரு பொருளைக் கொடுத்தாவது வலிந்து ஒழித்தல் வேண்டும். இக்குறளில் **கொள்ளத்தக்க மற்றும் தள்ளத்தக்க இருவகை நட்பு பற்றியும் முறைபற்றியும்** கூறியுள்ளார்.

''குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு''

என்னும் குறளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

**பண்பு உடைமை** : உலக வழக்கம் அறிந்து ஒழுகுதலைப் பெற்றிருத்தல். (பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல் - மக்கள் பண்பு என்று சொல்லப்படுவது உலக வழக்கம் அறிந்து ஒழுகுதல்.)

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

29. மக்கட்பண்பு - மக்கள் + பண்பு.

30. பண்பிலான் - பண்பு + இலான்; பெருஞ்செல்வம் - பெருமை + செல்வம்; நன்பால் - நன்மை + பால்; கலந்தீமை - கலம் + தீமை; திரிந்தற்று - திரிந்து + அற்று.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

29. அரம் - ஒரு வகை வாள், உலோகத்தைத் தேய்த்துச் சமம் செய்யும் கருவி; கூர்மையர் - அறிவு நுட்பம் உடையவர்.

30. பண்பு இலான் - பண்பு இல்லாதவன்; கலம் - பாத்திரம்; தீமையால் - குற்றத்தினால்; திரிந்து அற்று - கெடுதல் போன்றதாகும்.

**இ. விளக்கவுரை :**

29. மக்களுக்கு உரிய நற்பண்பு இல்லாதவர் அரம் போன்ற கூர்மை உடையவராயினும், மரத்திற்கு ஒப்பானவரேயாவர். அறிவின் நுட்பத்தோடு, செயல் நுட்பத்தையும் பெற்றிருப்பவரைக் 'கூர்மையுடையார்' என்றார். அரம், தான் தேயாது; பிற பொருளைத் தேய்க்கவும் கூராக்கவும் செய்யும்.

30. நல்ல பசுவின் பால் தன்னை ஏற்ற பாத்திரத்தின் குற்றத்தால் திரிந்து கெடும். அதுபோல, பண்பு இல்லாத ஒருவன் பெற்ற பெருஞ்செல்வம், அப்பண்பு இல்லாமையாகிய குற்றத்தால் பயன்படாது ஒழியும். 'பெருஞ்செல்வம்' என்பது எல்லாப் பயனும் கொடுக்கவல்லது. ஆனால், அது பண்பு இல்லாதவனிடம் சேர்ந்ததால் பயனற்றுப் போய், கெடுகிறது என்பதாம். இவை இரண்டு குறள்களிலும் **பண்பு இல்லாதவரது இழிவு** கூறப்பட்டுள்ளது.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **சான்றோர்க்கு அணியாவது ..........**

அ. சமன் செய்தல் ஆ. ஒருபால் கோடாமை

இ. சீர்தூக்குதல்

2. **ஒழுக்கம் ஓம்பப்படக் காரணம் .......**

அ. அது சிறப்பைத் தருவது

ஆ. அது உயிரினும் சிறந்ததென்பது

இ. அது உயிரைக் காப்பது

3. **உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் .........**

அ. அழுக்காறு உடையான்

ஆ. அழுக்கறுப்பான் சுற்றம்

இ. அழுக்காறு என்னும் பாவி

4. **செல்வத்தை அழிப்பதோடு நரகத்தில் செலுத்தவல்லது .......**

அ. இழுக்கம் ஆ. அழுக்காறு இ. புறங்கூறல்

5. **உயிர்க்குத் தீது உண்டாகாதிருக்க.........**

அ. ஏதிலார் குற்றமும் தம் குற்றமும் காண வேண்டும்.

ஆ. ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண வேண்டும்

இ. ஏதிலார் குற்றமில்லாது தம் குற்றம் காண வேண்டும்

6. **பூரியார் கண்ணும் உள்ளது.........**

அ. அருட்செல்வம் ஆ. செல்வத்துட் செல்வம்

இ. பொருட்செல்வம்

7. **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

**- இக்குறளில் விளக்கப்பட்டுள்ள செய்தி.........**

அ. அருளுடையாரின் சிறப்பு

ஆ. அருளிலார்க்கு வரும் குற்றம்

இ. அருளுடைமையின் நன்மை

8. **நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்.**

**- இக்குறள் உணர்த்தும் செய்தி......**

அ. சிற்றினம் சேர்தலின் விளைவுகள்

ஆ. நல்லினம் சேர்தலின் விளைவுகள்

இ. நல்லினம் தீயினம் சேர்தலின் விளைவுகள்

9. **'அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்' - இதில் 'தேற்றம்' என்பதற்கு ............... என்பது பொருள்.**

அ. கலக்கம் இல்லாமை

ஆ. ஆசை இல்லாமை

இ. தெளிவு இல்லாமை

10. **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு எய்த உணர்ந்து செயல்.**

**- இக்குறளில் கூறப்பட்டுள்ள செய்தி .........**

அ. செயலைச் செய்வதற்கு உரியவனது இலக்கணம்

ஆ. தேர்வு செய்யப் பெற்றவனைச் செயலில் ஈடுபடச் செய்யும் திறம்

இ. செயலை முடிக்க வேண்டிய முறையும் காலமும்

11. **காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள. - இக்குறளில் 'மறைக்காது' என்னும் பொருளைத் தரும் சொல் ...**

அ. கரைந்து ஆ. அன்ன இ. கரவா

12. **துன்பம் கண்டு மனம் அழியாத நிலையை விளக்கும் குறள் ..........**

அ. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

ஆ. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

இ. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

13. **'இடும்பை கண்டு துன்புறாதவன்' என வள்ளுவரால் குறிப்பிடப்பட்டுள்ளவன் ......**

அ. செயலில் இன்பம் ஒன்றை மட்டுமே விரும்புபவன்

ஆ. துன்பத்திலும் செயலைக் கைவிடாது தொடர்பவன்

இ. செயலில் இன்பமும் துன்பமும் இயல்பு எனக் கொள்பவன்

14. **கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.**

**- இக்குறளில் கூறப்பெற்றுள்ளது.......**

அ. சொல்பவனின் இலக்கணம்

ஆ. சொல்லப்பட வேண்டிய செய்தியின் இலக்கணம்

இ. சொல்லின் இலக்கணம்

15. **சொல்லுதல் வல்லவர் பெற்றிருக்க வேண்டிய சிறப்புகள் .........**

அ. நாநலம், ஆக்கம், வெல்லும் சொல் இன்மை

ஆ. சொல்வன்மை, சோர்வு இன்மை, அஞ்சாமை

இ. அன்பு, அறிவு, தெளிவு, அவாஇன்மை

16. **தூங்கற்க தூங்காது செய்யும் வினை' - இத்தொடரில் 'தூங்காது' என்னும் சொல் உணர்த்தும் பொருள் ......**

அ. உறங்காது ஆ. தொங்காது இ.காலம் தாழ்த்தாது

17. **கற்றார்முன் கற்ற செலச் சொல்லுபவர் .....**

அ. அவையகத்து அஞ்சாதவர்

ஆ. கல்லாதவரின் கடையர்

இ. கற்றாருள் கற்றார்

18. **'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்' - இத்தொடரில் 'எல்லாரும்' என்பது ...... ஆகியோரைக் குறிக்கிறது.**

அ. மனைவி, தாய், பிள்ளைகள்

ஆ. உறவினர், நண்பர், சுற்றம்

இ. நண்பர், பகைவர், அயலார்

19. **ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரீ இ விடல்.**

**-இச்செய்யுளில் 'நட்பு' என்னும் பொருளைக் குறிக்கும் சொல் ......**

அ. ஒரீ இ ஆ. ஊதியம் இ. கேண்மை

20. **ஒன்று ஈத்தும் நீக்க வேண்டியது ......**

அ. மாசற்றார் கேண்மை

ஆ. ஒப்பிலார் நட்பு

இ. அறியாதார் தொடர்பு

ஆ. **பொருத்துக.**

i. **கீழ்உள்ள குறள் பகுதிகளுள் தொடர்புடையவற்றை இணைத்து எழுதுக.**

21. அன்றே ஒழியவிட வேண்டுவது - அ. வினையால் வினையாக்கிக் கோடல்
22. திருச்செற்றுத் தீயுழி உய்ப்பது - ஆ. கற்றாருள் கற்றாராதல்
23. செல்வம் பெற்றத்தால் பெற்ற பயன்- இ. நடுவிகந்தாம் ஆக்கம்
24. யானையால் யானை யாத்தல் - ஈ. அழுக்காறு எனும் பாவி

– உ. சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்

ii. **கீழ்உள்ள சொற்களையும் பொருள்களையும் பொருத்தி எழுதுக.**

| சொற்கள் | பொருள்கள் |
|---|---|
| 25. பூரியார் | - அ. கேட்காதவர் |
| 26. ஏதிலார் | – ஆ.சிறப்பில்லாதவர் |
| 27. இல்லார் | - இ. அயலவர் |
| 28. ஒப்பிலார் | - ஈ. வறியவர் |
| | - உ. இழிந்தவர் |

**iii. கீழ்உள்ள சொற்களையும் பொருள்களையும் பொருத்தி எழுதுக.**

| சொற்கள் | பொருள்கள் |
|---|---|
| 29. விழுப்பம் | - அ. பெருஞ்செல்வம் |
| 30. தேற்றம் | - ஆ. நற்பேறு |
| 31. ஆக்கம் | - இ. கலக்கம் இல்லாமை |
| 32. ஊதியம் | - ஈ. சிறப்பு இல்லாமை |
| | – உ. பெருமை |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

33. திருக்குறள் 'உலகப் பொதுமறை' எனக் கூறப்பெறுவது ஏன்?
34. பாரதியும் பாரதிதாசனும் திருவள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துள்ளனர்?
35. திருவள்ளுவருக்கு வழங்கப்பெறும் வேறு நான்கு பெயர்களைக் கூறுக.
36. ஒழுக்கத்தின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு கூறியுள்ளார்?
37. புறங்கூறாது இருப்பதற்கு உரிய வழியை வள்ளுவர் எவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்?
38. அருளுடைமையின் சிறப்பைக் கூறுக.
39. அருளில்லார்க்கு வரும் குற்றத்தை எழுதுக.
40. ஒரு செயலைச் செய்வதற்கு உரியவனது இலக்கணமாகக் குறள் கூறுவது யாது?
41. இடும்பைக்கு இடும்பை படாதவர் இயல்பு யாது?
42. எவன் துன்பமுறமாட்டான் எனக் குறள் கூறுகிறது?
43. ஒரு செயலால் மற்றொரு செயலைச் செய்து முடித்தலைக் குறள் எவ்வாறு விளக்குகிறது?
44. கொள்ளத் தக்க, தள்ளத் தக்க நட்பு குறித்துக் குறள் கூறுவது யாது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

45. திருக்குறளின் சிறப்பு குறித்து ஆறு வரிகள் எழுதுக.
46. திருக்குறள் அமைப்பு முறை குறித்து எழுதுக.
47. நடுவுநிலை என்பது பற்றியும் நடுவுநிலை தவறியமையால் வந்த செல்வம் பற்றியும் வள்ளுவர் கூறுவது யாது?

48. அழுக்காறு உடைமையது குற்றத்தை விளக்குக.

49. சிற்றினம் சேராமை குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக.

50. சுற்றம் தழுவி வாழவேண்டும் என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

51. சொல்லின் இலக்கணத்தையும், சொல்லுதல் வல்லாரின் சிறப்பையும் குறள் எவ்வாறு விளக்குகிறது?

52. ஒரு வினையைச் செய்யும் வகையை வள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

53. அவை அஞ்சாதவர் சிறப்புகளாகக் குறள் கூறியுள்ளவற்றை எழுதுக.

54. பொருளின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

55. நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டிய திறத்தைக் குறள் கருத்தால் விளக்குக.

56. பண்பு இல்லாதவரது இழிவை வள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார்?

## V. மொழித்திறன் வளர் பயிற்சி

**அ. கீழ்உள்ள உடன்பாடு, எதிர்மறைச் சொற்களைப் படிக்க; பின்னர் அட்டவணையை நிறைவு செய்க.**

| | உடன்பாடு | எதிர்மறை |
|---|---|---|
| எ-டு | சேர்தல் | சேராமை |
| | 1. அழிதல் | ................ |
| | 2. ................ | பேசாமை |
| | 3. உண்ணுதல் | ................ |
| | 4. ................ | அகலாமை |
| | 5. செயல்படுதல் | ................ |

## VI. திறன்வளர் தொடர் பணி

திருக்குறள் பாடப் பகுதியில் ஒழுக்கமுடைமை (ஒழுக்கம் உடைமை), அருளுடைமை (அருள் உடைமை), பண்புடைமை (பண்பு உடைமை) என்னும் மூன்று அதிகாரங்களிலிருந்து குறட்பாக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. திருக்குறள் நூலில் 'உடைமை' என அமையும் வேறு அதிகாரப் பெயர்களை அறிந்து எழுதுக.

## ஆ. ஏலாதி

பாடல்தோறும் ஆறு கருத்துகளை விளக்கிக் கூறும் அற இலக்கியம் ஏலாதி. மருந்துகள் உடல் நோயைப் போக்குவது போன்று, ஏலாதி கூறும் கருத்துகள் உள்ளத்தை நல்வழிப்படுத்தும் நன்மையுடையன.

**எளிதும் அரிதும்**

சாவது எளிதுஅரிது சான்றாண்மை நல்லது
மேவல் எளிதுஅரிது மெய்போற்றல் - ஆவதன்கண்
சேறல் எளிதுநிலை அரிது தெள்ளியராய்
வேறல் எளிது அரிது சொல். 1

**மன்னர்போல் வாழ்வார்**

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கால்
முடம்பட்டார் மூத்தார்மூப் பில்லார்க்(கு) - உடம்பட்டு
உடையராய் இல்லுள்ஊண் ஈத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று. 2

**அன்புடையார்க்கு உள்ள ஆறு குணங்கள்**

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே - ஓதலின்
அன்புடையார்க்(கு) உள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 3

**- கணிமேதாவியார்**

### I. நூற்குறிப்பு

ஏலம் + ஆதி - ஏலாதி. ஏலக்காய், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடல் பிணி போக்கி நலம் செய்யும். அதுபோல இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட ஆறு கருத்துகளும் மக்களுடைய மன நோயாகிய அறியாமையைப் போக்கித் தெளிவைத் தரவல்லன. ஆகவே, இந்நூலுக்கு ஏலாதி என்று பெயர் இடப்பட்டுள்ளது. இந்நூல் தற்சிறப்புப் பாயிரம், சிறப்புப் பாயிரம் உட்பட 82 செய்யுள்களைக் கொண்டுள்ளது. சிறந்த அறநெறிகளைக் கூறுகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

### II. ஆசிரியர் குறிப்பு

ஏலாதி நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். இவரைக் ‘கணிமேதையார்’ எனவும் கூறுவர். ‘கணிமேதை’ என்னும்

தொடரினைக் கொண்டு சோதிடத்தில் வல்லவர் என்று கொள்வாரும் உண்டு. இவர் மாக்காயனாரின் மாணாக்கர் ஆவார். சிறுபஞ்ச மூலத்தை இயற்றிய காரியாசான் உடன் பயின்றவராவார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். திணை மாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். இவர் வாழ்ந்த காலத்தைக் கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டது என்பர்.

## III. சொற்களஞ்சியம்

### 1. அ. சொற்களைப் பிரித்தறிக.

எளிதரிது - எளிது + அரிது; சேறல் - செல் + தல்; நிலையரிது - நிலை + அரிது; வேறல் - வெல் + தல்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

நல்லது - இல்வாழ்க்கை (யை); மேவல் - மேற்கொள்ளுதல்; மெய் - வாய்மை, உண்மை; ஆவது - துறவறம்; சேறல் - செல்லுதல்; தெள்ளியர் - தெளிந்த அறிவை உடையவர்; வேறல் - வெற்றி பெறுதல்.

### இ. விளக்கவுரை :

இறத்தல் என்பது எளிய செயல். ‘சான்றோன்’ எனப் பெயர் பெறுதல் அரிய செயல். இல்லற வாழ்வை மேற்கொள்வது எளிய செயல். உண்மையைப் பின்பற்றி ஒழுகுதல் அரிய செயல். துறவற வாழ்வை மேற்கொள்வது எளிதாயினும் அதில் நிலைத்து நிற்பது அரிய செயல். எதனையும் சொல்வது எளிதாயினும் அதனைத் தெளிவாகச் செய்து வெற்றி பெறுவது அரிய செயல்.

### 2. அ. சொற்களைப் பிரித்தறிக.

கடம்பட்டார் - கடன் + பட்டார்; காப்பில்லார் - காப்பு + இல்லார்; கைத்தில்லார் - கைத்து (கையகத்து) + இல்லார்; தங்கால் - தம் + கால்; மூப்பில்லார்க்கு - மூப்பு+இல்லார்க்கு; ஈத்துண்பார் - ஈத்து + உண்பார்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

கைத்து (கையகத்து) - கையில் உள்ள (செல்வம்) ; காப்பு - காப்பவர்; மூப்பு -முதுமை; இல் - வீடு; ஈத்து - கொடுத்து.

### இ. விளக்கவுரை :

கடன்பட்டவர்களுக்கும், பாதுகாப்பு இல்லாதவர்களுக்கும், பொருள் இல்லாதவர்களுக்கும், கால் முடம்பட்டவர்களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும், குடும்பத்தில் பெற்றோர் முதலிய பெரியவர்

இல்லாதவர்களுக்கும் மனம் விரும்பித் தம் வீட்டில் இருக்கச்செய்து உணவு கொடுத்து உண்பிப்பவர்கள் உலகில் வாழும் மன்னர்களைப்போல் குடும்பத்துடன்கூடி இன்பமாக வாழ்வார்கள்.

‘புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார் - கண்கண்பட்(டு)
ஆழ்ந்து நெகிழ்ந்தவர்க்(கு) ஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து’

என்னும் சிறுபஞ்ச மூலச் செய்யுளோடு இங்குக் கூறப்பட்டுள்ள செய்தியை ஒப்பிட்டுப் பார்க்கவும்

**3. அ. சொற்களைப் பிரித்தறிக.**

இன்சொல் - இனிமை + சொல்; மென்புடையார் - மென்பு (மென்மை) + உடையார்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

புணர்வுவத்தல் - கூடி இருத்தலை விரும்புதல்; நோதல் - வருந்துதல்; கவறல் - மனம் கலங்குதல்; ஓதல் - கூறுதல்; மென்புடையார் - மென்மைக் குணம் உடைய சான்றோர்.

**இ. விளக்கவுரை :**

நண்பர் இறந்தால் தாமும் அவருடன் இறத்தல், நண்பர்க்கு வறுமை வந்தபோது பொருள் கொடுத்து உதவுதல், துன்பம் வந்தபோது இனிய சொற்களைக் கூறுதல், நண்பர்களோடு கலந்து பேசி மகிழ்தல், துன்பத்தில் பங்கு கொள்ளுதல், பிரிந்த காலத்தில் உள்ளம் கலங்குதல் ஆகிய ஆறு குணங்களையும் நண்பர்களோடு கூடி மகிழ்ந்த அன்புடையவர்கள் பெற்றிருப்பர் என மென்மையான இயல்புடைய சான்றோர்கள் விவரித்துக் கூறியுள்ளனர்.

## IV. பொருளுணர் திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தெள்ளியராய் வேறல் எளிது அரிதுசொல் - இத்தொடரில் ‘வேறல்’ என்பதன் பொருள்..........**

   அ. வேறுபடுதல் ஆ. வெற்றி பெறுதல்

   இ. வேறு அல்லாதது

2. **தங்கால் முடம்பட்டார் மூத்தார்மூப் பில்லார்க்கு - இத்தொடரில் ‘மூப்பில்லார்’ என்பதன் பொருள் .......**

   அ. முதுமை அடையாதவர் ஆ. பெற்றோர்

   இ. என்றும் இளமையாய் இருப்பவர்

**ஆ. சொல்லையும் பொருளையும் பொருத்துக.**

| **சொல்** | | **பொருள்** |
|---|---|---|
| 3. | மேவல் | - அ. கவலைப்படுதல் |
| 4. | சேறல் | - ஆ. சேராதிருத்தல் |
| 5. | வேறல் | - இ. மேற்கொள்ளுதல் |
| 6. | கவறல் | - ஈ. வெற்றிபெறுதல் |
| | | - உ. சேர்தல் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

7. நல்லது மேவல் எளிது, அரிது மெய்போற்றல் - இத்தொடரால் விளக்கப்படும் கருத்து யாது?

8. ஈத்துண்ணலைப்பற்றி ஏலாதி என்ன கூறுகிறது?

9. நண்பனுக்குத் துன்பம் வந்தபோது என்ன செய்ய வேண்டும் என ஏலாதி கூறுகிறது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

10. ஏலாதி - பெயர்க் காரணம் தருக.

11. கணிமேதையார் பற்றி நீவிர் அறிவன யாவை?

12. எளியனவும் அரியனவும் யாவை?

13. மன்னர்போல் வாழ்வார் யார்?

14. அன்புடையார்க்கு உள்ள ஆறு குணங்கள் யாவை?

## V. மொழித்திறன் வளர் பயிற்சி

ஏலாதி முதல் பாடலில் 'சாவது', 'மேவல்' என முதல் இரண்டு அடிகளில் அமைந்த சொற்கள், முதல் எழுத்து அளவு ஒத்து (நெடிலாக) இருக்க, இரண்டாம் எழுத்து ஒரே எழுத்தாக 'வ' அமைந்துள்ளது. இதனை 'அடி எதுகை' என்பர். இதே போன்று ஏலாதியின் பிற பாடல்களிலும் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

## VI. திறன் வளர் தொடர்பணி

அ. ஏலம் முதலிய ஆறு பொருள்களின் கலப்பால் அமைந்த மருந்தின் பெயர் 'ஏலாதி' நூலக்குப் பெயராக அமைந்தது. மூன்று மருந்துப் பொருள்களின் கலப்பால் அமைந்த மருந்தின் பெயரைக் கொண்டது 'திரிகடுகம்'. ஐந்து மருந்துப் பொருள்களின் கலப்பால் அமைந்த மருந்தின் பெயரைக் கொண்டது 'சிறுபஞ்ச மூலம்'. இவை எவ்வெப் பொருள்களின் கலப்பால் அமைந்த மருந்துப் பெயர்கள் என்பதை அறிந்து எழுதுக.

# இ. இன்னிலை

மக்கள், நன்னிலை பெற, இனிய கருத்துகளைக் கூறுவது 'இன்னிலை' எனும் நூல். இஃது அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப் பொருள் நான்கையும் விளக்குகிறது.

கழிவிரக்கம் கொள்ளார் கதழ்வாளார் வேர்த்துப்
பழிமுறுகக் கோடார் பயன்போர்த்(து) - அழிமுதலை
இல்லம் கொண்(டு)ஆக்கார் இடும்பைத் தளைதணப்பர்
நல்லறனை நாளணிகொள் வார். 1

திரைத்த விரிக்கின் திரைப்பின்நா வாய்போல்
உரைத்த உரையதனைக் கேட்டும் - உரைத்த
பயன்தவா செய்வார் சிலர்ஏதம் நெஞ்சத்து
இயன்றவா செய்வார் பலர். 2

நல்லினம் சாரல் நயன்உணர்நூல் பல்லாற்றான்
நல்லினம் ஓம்பல் பொறையாளல் - ஒல்லும்வாய்
இன்னார்க்(கு) இனிய புரிதல் நெறிநிற்றல்
நன்னாப்பண் உய்ப்பதோர் ஆறு. 3

- **பொய்கையார்**

## I. நூல்குறிப்பு

இனிமை + நிலை - இன்னிலை. 'இனிமையாகிய நிலை' என்பது பொருள். இந்த நூல் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் என நான்கு பகுதிகளைக் கொண்டது. அவற்றுள் வீட்டுப்பால் இல்லியல், துறவறவியல் என இரண்டு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அறப்பால் (அறத்துப்பால்) 10, பொருட்பால் 9, இன்பப்பால் (இன்பத்துப்பால்) 12, வீட்டுப்பால் 14, (இல்லியல் 8, துறவறவியல் 6) ஆக 45 வெண்பாக்களைக் கொண்டது. இது சங்கம் மருவிய நூல்களுள் ஒன்று; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

## II. ஆசிரியர் குறிப்பு :

இன்னிலை என்னும் நூலின் ஆசிரியர் பொய்கையார். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இவரை ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர் எனவும் கூறுவர். இந்நூலைத் தொகுத்தவர் மதுரையாசிரியர். கடவுள் வாழ்த்துச் செய்யுளை இயற்றியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

## III. சொற்களஞ்சியம்

**1. அ. சொற்களைப் பிரித்தறிக.**

கழிவிரக்கம் - கழிவு + இரக்கம்; கதழ்வாளார் - கதழ்வு + ஆளார்; நல்லறன் - நன்மை + அறன்; நாளணி - நாள் + அணி.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

கழிவிரக்கம் - கழிந்ததற்காக (இழந்த பொருளுக்காக) வருத்தம்; கதழ்வு - சினம்; வேர்த்து - வெகுண்டு; பழி முறுக - பழிமிகுமாறு; அழிமுதல் - அழியும் பொருள்; கோடார் - கொள்ளார்; இடும்பை - துன்பம்; தளை - விலங்கு; அணி - அணிகலன்; தணப்பர் - நீங்குவர்.

**இ. விளக்கவுரை :**

நன்மையைத் தரும் அறத்தை நாள்தோறும் தமக்கு அணியாகக் கொள்பவர் செயல் விளக்கப்பட்டுள்ளது. கழிவு இரக்கம் என்பது தொடர்ந்து கவலை தரும் ஒன்று. வீடு (குடும்பம்) என்பது தழைத்து வளர வேண்டியது. ஆதலால் அறத்தின் பயனைக் கெடுக்கவல்லதாகிய, அழியும் இயல்புடைய, நல்வழியில் தேடாத பொருளைத் தம் இல்லத்திற்குக் கொண்டு சென்று சேர்க்கமாட்டார். செல்வத்தைச் சேர்ப்பதாக எண்ணி 'அழி முதலை' இல்லத்தில் சேர்க்க நினையார்.

கழிந்த (கைவிட்டுப்போன) பொருளுக்கு இரக்கம் கொள்ளாமை, சினம் கொள்ளாமை, பழிச்செயல் புரியாமை, பாவச் செயலால் பொருளை ஈட்டாமை ஆகியன நல்லறனை நாளும் அணி கொள்வார் செயல்களாகும். (அறப்பால்)

**2. அ. சொற்களைப் பிரித்தறிக.**

உரையதனை - உரை + அதனை

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

திரைத்த - சுருட்டிய; நாவாய் - மரக்கலம் (கப்பல்); தவா - (தவாது) கெடாது; திரைப்பின் - விரித்த பாய்களைச் சுருட்டினால்; இயன்றவா - இயன்றவாறு; ஏதம் - துன்பம்.

**இ. விளக்கவுரை :**

எல்லாரும் நல்வாழ்வு வாழப் பழகவேண்டும் என்பது இதில் வற்புறுத்தப் பெற்றுள்ளது. சான்றோர் கூறும் அறவுரை கேட்டும், பலர் நன்னெறியைக் கடைப்பிடிக்காமல் தீய வழியில் செல்கின்றனர். இது

மிகவும் வருந்தத் தக்கதாகும் என்பதை வற்புறுத்த, பாய்மரக் கப்பலை உவமையாகக் கூறியுள்ளார். பாய்மரக் கப்பலுக்கு உள்ள செயல் திறம்கூட, சான்றோர் அறிவுரை கேட்ட மக்கள் பலருக்கு இல்லை என்று உணர்த்துகிறார். பாயை விரித்துக் கட்டினால் கப்பல் குறித்த இடத்திற்குச் செல்லும். சுருட்டிவிட்டால் அசையாது நிற்கும். மாலுமி காற்றின் திசை அறிந்து பாயை விரிப்பான். அறிவுரை கேட்டால் திருந்த வேண்டும். ஆனால் திருந்தாதவரே பலராக உள்ளனர் என்பது விளக்கப்பட்டுள்ளது. (அறப்பால்)

**3.அ. சொற்களைப் பிரித்தறிக.**

நல்லினம் - நன்மை + இனம்; பொறையாளல் - பொறை + ஆளல்; நன்னாப்பண் - நன்மை + நாப்பண்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

நயன் - நீதி; பொறையாளல் - பொறுமையை மேற்கொள்ளுதல்; சாரல் - சேர்தல்; ஓம்பல் - பாதுகாத்தல்; ஒல்லும்வாய் - இயன்ற வழி; இன்னார் - பகைவர்; நெறிநிற்றல் - நல்லொழுக்க நெறியில் வாழ்தல்; நன்னாப்பண் - நல்ல நடு இடம், மேல்உலகம், வீடு.

**இ. விளக்கவுரை :**

நல்லாரைச் சேர்ந்திருப்பது, நல்வழியை அறிந்து நடப்பது, நல்லவர்களைக் காப்பது, மனத்தில் பொறுமையை நிலை நிறுத்துவது, பகைவர்க்கும் நன்மை செய்வது, நல்வழியில் நிற்பது ஆகிய செயல்கள் ஒருவனை மேல் உலகில் கொண்டு சேர்க்கும் என்கிறார். இச்செய்யுள் ‘வீட்டுப்பால்’ பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில் இல்லறத்தில் இருப்பவன் வீடுபெற கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகளைக் கூறியுள்ளார்.

## IV. பொருளுணர் திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **கழிவிரக்கம் கொள்ளார் கதழ்(வு) ஆளார் - இத்தொடரில் ‘கோபம்’ என்னும் பொருள் தரும் சொல் ..........**

   அ. கழிவு ஆ. கதழ்வு இ. இரக்கம்

2. **இடும்பைத் தளை தணப்பர் - இத்தொடரல் ‘இடும்பை’ என்னும் சொல் தரும் பொருள் .............**

   அ. கோபம் ஆ. இன்பம் இ. துன்பம்

3. **ஏதம் நெஞ்சத்து இயன்றவா செய்வார் பலர் - இத்தொடரில் 'ஏதம்' என்னும் சொல் தரும் பொருள் ........**

அ. குற்றம் ஆ. சினம் இ. துன்பம்

4. **நல்லினம் - இச்சொல் பிரிக்கப்பட வேண்டிய முறை ......**

அ. நல் + இனம் ஆ. நன்மை + இனம் இ. நல்ல + இனம்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. இன்னிலை ஆசிரியர் பற்றிக் கூறுக.

6. இன்னிலை - பெயர்க் காரணம் கூறுக.

7. பகைவர்க்கும் உதவ வேண்டும் என்பதனை இன்னிலை எவ்வாறு கூறுகிறது?

8. நல்லினம் பற்றி இன்னிலை கூறும் இருசெய்திகளைக் கூறுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. நாளணி கொள்வாரது செயல்களைக் கூறுக.

10. மரக்கலத்தை உவமையாகக் கொண்டு பொய்கையார் விளக்கும் கருத்துகள் யாவை?

11. ஒருவரை முத்தியடையச் செய்யும் வழிகள் யாவை?

**V. மொழித்திறன்வளர் பயிற்சி**

அ. 'நல்லினம் சாரல்' எனத் தொடங்கும் செய்யுளில் 'சாரல்', 'ஓம்பல்', 'ஆளல்' என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவை, 'அல்' விகுதி பெற்ற தொழிற் பெயர்கள்.

சார் (அல்) - சாரல், ஓம்பு (அல்) - ஓம்பல், ஆள் (அல்) - ஆளல் என அமைந்தன. இவைபோன்று கீழுள்ள வினைப் பகுதிகளை 'அல்' விகுதிபெற்ற தொழிற்பெயர்களாக்குக.

1. ஓடு ................ 3. சேர் ................

2. காண் .................. 4. விளையாடு ..............

ஆ. 'கழிவிரக்கம்' எனத் தொடங்கும் முதற் செய்யுளில், முதல் அடியில் 'கழிவிரக்கம்', இரண்டாம் அடியில் 'பழிமுறுக' இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல்லாக 'அழிமுதலை' என அமைந்துள்ளன. இவ்வாறு முதல் எழுத்து அளவு ஒத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒரே எழுத்தாக அமைதலை 'எதுகை' என்பர். இதே போன்று இரண்டாம், மூன்றாம் செய்யுள்களில் அமைந்த எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

செய்யுள் : 2. திரைத்த ............. .............

செய்யுள் : 3. நல்லினம் .......... ..............

# 3. தொடர்நிலைச் செய்யுள்

பொருள் தொடர்புடைய வகையில், செய்யுள்களால் கதையைக் கூறுவது தொடர்நிலைச் செய்யுள் ஆகும். இதனைக் 'கதைபொதி பாடல்'கள் என்றும் கூறுவர்.

இவ்வரிசையில் திருவிளையாடற் புராணம், ஆசிய ஜோதி ஆகிய தொடர்நிலைச் செய்யுள்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

## அ. திருவிளையாடற் புராணம்

### கூடற் காண்டம்

### விறகு விற்ற படலம்

வரகுண பாண்டியன் அவையில், வடபுலத்து இருந்து வந்த ஏமநாதன் பாடிச் செருக்குற்றான். அவன் செருக்கை அடக்குமாறு இசைப் பாணர் தலைவன் பாணபத்திரனிடம் பாண்டிய மன்னன் கூறினான். பாணபத்திரன், இறைவன் அருள் வேண்டினான். பாண பத்திரனுக்காக இறைவன் விறகாளாய் வந்து, ஏமநாதன் கேட்கும்படி இன்னிசை பாடி, அவனை ஊரை விட்டு ஓடச் செய்தார். மதுரையில் சோமசுந்தரக் கடவுளாக வீற்றிருக்கும் சிவபெருமானின் இத்திருவிளையாடலைக் கூறுவதே விறகு விற்ற படலம்.

**'இறையருளால் ஏமநாதன் செருக்கழிப்பேன்' எனப் பாணபத்திரன் கூறுதல்**

தென்னவர் பெரும யானுன்
　　　　திருவுள வலனும் கூடல்
முன்னவன் அருளும் ஊட்டு
　　　　முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி
　　　　அவனைவீ றழிப்பன் என்றான்
மன்னவன் நாளைப் பாடு
　　　　போகென வரைந்து சொன்னான். 1

### பாணபத்திரன் சோமசுந்தரக் கடவுளை வேண்டுதல்

மையணி மிடற்றி னானை
மதுரைநா யகனை வந்தித்து
ஐயனே அடியேற்கு இன்றுன்
அருள்துணை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி
வேண்டுகொண் டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லம்
புக்கினிது இருந்தான் இப்பால். 2

### இறைவன் விறகாளாய்த் தோற்றம் கொண்டது

அழுக்கு மூழ்கிய சிதரசைத்து அவிர்சடை அமுதம்
ஒழுக்கு வெண்மதி வாங்கியே செருகியது ஒப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப்பு அருமறை கடந்ததாள் ஏற்றி 3

தறிந்த இந்தனம் தினந்தொறும் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை உடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையும் காணாது
எறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி 4

நடந்து கொள்ளுநர்க்கு அறாவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலும்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச் செல்வார் 5

### ஏமநாதன் வினவியதும் விறகாள் கூறியதும்

எடுத்த இந்தனம் ஒருபுறத்து இறக்கியிட்டு ஊன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினார் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவான் என்றிசை வல்லான் 6

வண்டறை கொன்றை யான்முன்
வந்துநீ யாரை என்றான்
பண்டரு விபஞ்சி பாண
பத்திரன் அடிமை என்றான்

முண்டக மலரோன் மாயோன்
புரந்தரன் முதன்மற்று ஏனை
அண்டரும் தன்குற் றேவல்
அடிமையாக் கொண்ட அம்மான் 7

கனியிசைக் கிழவன் தன்கீழ்க்
கற்பவர் அனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு
நானும்அவ் வினைஞன் ஆனேன்
தனியிசைக் கிழவன் நோக்கித்
தசையெலாம் ஒடுங்க மூத்தாய்
இனிஇசைக் கிழமைக்கு ஆகாய்
என்றுஎனைத் தள்ளி விட்டான் 8

வெவ்விறகு எறிந்து கட்டி
விலைபகர்ந் தேனும் ஐய
இவ்வயிறு ஓம்பு கேன்என்று
இத்தொழில் பூண்டேன் என்ன
நைவளம் தெரிந்த ஏம
நாதனும் விறகு மள்ளா
அவ்விசை ஒருகால் இன்னும்
பாடென ஐயன் பாடும். 9

**விறகாள் பாடிய இசையின் மாண்பு**

தருக்களும் சலியா முந்நீர்ச்
சலதியும் கலியா நீண்ட
பொருப்பிழி அருவிக் காலு
நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத இன்னிசை
அமுதம் மாந்தி
மருட்கெட அறிவன் தீட்டி வைத்தசித்
திரமே யொத்த 10

பைத்தலை விடவாய் நாகம்
பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய்
வல்லிய மருட்கை எய்தித்
தத்தம்ஆறு அறியா வாகித்
தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும்
இசைவலைப் பட்ட அம்மா 11

**இசை கேட்ட ஏமநாதன் செருக்கழிதல்**

யான றிந்தசா தாரியன்று இம்பருள் இதனை
நான றிந்ததென்று ஒருவரு நவின்றிலர் தேவ
கானம் ஈதுஇவற்கு உணர்த்தினோன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வல்லரோ இதுவியப்பு என்னா 12

இழுக்கி விட்டஇக் கிழமகன் இசையிதேல் அந்த
வழுக்கில் பத்திரன் பாடல்எற் றோவென மதியா
அழுக்க முற்றெழுந்து இசைவலான் அடுத்ததன் பண்டர்
குழுக்க ளும்குலை குலைந்திட இருள்வழிக் கொண்டான். 13

**இறைவன் பாணபத்திரன் கனவில் தோன்றி அருளியது**

அன்று பத்திரன் கனவில்வந்து ஆடலேற்று அழகர்
இன்று பத்திர இசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திரன் அடிமையாம் என்றுபாண் செய்து
வென்று பத்திரம் செய்துநின் வேண்டுகோள் என்றார். 14

**-பரஞ்சோதி முனிவர்**

## I. நூற்குறிப்பு

புராணம் - பழைய வரலாறு. மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விளக்கிக் கூறும் பழைய வரலாற்று நூல் திருவிளையாடற் புராணம். இது மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. மதுரைக் காண்டத்தில் 18 படலங்களும், கூடற்காண்டத்தில் 30 படலங்களும், திருவாலவாய்க் காண்டத்தில் 16 படலங்களும்

அமைந்துள்ளன. இந்நூல் 3360 பாடல்களைக் கொண்டுள்ளது. பெரிய புராணத்திற்கு அடுத்ததாகப் பெருமை பெற்று விளங்குவது. இந்நூல் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தையும், வடமொழி நூலாகிய 'ஆலாசிய மாகாத்துமியம்' என்னும் நூலையும் தழுவி எழுதப்பட்டது என்பர். பாடப் பகுதியாகிய 'விறகு விற்ற படலம்' கூடற்காண்டத்தில் 23 ஆவது படலமாக இடம் பெற்றுள்ளது.

## II. ஆசிரியர் குறிப்பு

திருவிளையாடற் புராணத்தைப் பாடிய பரஞ்சோதி முனிவர், வடமொழியையும் தமிழையும் நன்கு கற்றுணர்ந்த சான்றோர். இவர் நாகை மாவட்டத்துத் திருமறைக்காட்டில் பிறந்தவர். தந்தையார் மீனாட்சி சுந்தரதேசிகர். மதுரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சி அம்மை இவர் கனவில் தோன்றி, "எம்பெருமான் திருவிளையாடலைப் பாடுக" என்றதால் இவர் இதனை இயற்றினார் என்பர். இவர் வேதாரணிய புராணம், திருவிளையாடற்போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

## III. சொற்களஞ்சியம்

**1. அ. சொற்களைப் பிரித்தறிக.**

யானுன் - யான் + உன்; வீறழிப்பன் - வீறு + அழிப்பன்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

தென்னவர் - பாண்டிய மன்னன் வரகுணன்; வலன் - வலிமை; கூடல் முன்னவன் - மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள்; அன்னவன் - வடநாட்டுப் புலவன் ஏமநாதன்; வீறழிப்பன் - செருக்கை நீக்குவேன்.

**2. அ. சொற்களைப் பிரித்தறிக.**

மையணி - மை + அணி; இன்றுன் - இன்று + உன்; மெய்யனேயென்று - மெய்யனே + என்று; கொண்டன்பு - கொண்டு + அன்பு; பொய்யறு - பொய் + அறு ; புக்கினிது - புக்கு + இனிது.

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

மையணி - கருநிறம் உடைய; மிடறு - கழுத்து; வந்தித்து - வணங்கி; ஐயனே - தலைவனே; பொய்யறு - குற்றம் இல்லாத; இல்லம் - வீடு.

**இ. விளக்கவுரை :**

**மையணி மிடற்றினான் :** தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் பெறுவதற்காகத் திருப்பாற் கடலைக் கடைந்தனர். அப்போது முதலில் 'ஆலகாலம்' என்னும் கொடிய நஞ்சு வெளிப்பட்டது. அனைவரும் அதனைக் கண்டு அஞ்சி ஓடினர். அது உலக உயிர்கள் அனைத்தையும் அழிக்கவல்லது. அதனை ஏற்றுக் கொண்டால்தான் அமிழ்தைப் பெறமுடியும். ஆகையால் உயிர்கள் அனைத்தையும் காக்க, சிவபெருமான் அக்கொடிய நஞ்சினை ஏற்று உண்டார். தம் கணவனைக் காப்பதற்காகப் பார்வதி கழுத்தில் கை வைத்து அழுத்தித் தடுத்தாள். நஞ்சு சிவபெருமானின் கண்டத்தில் நின்றது. அதுமுதல் இறைவன் சிவபெருமான் 'திருநீல கண்டர்' என அழைக்கப்பட்டார். இந்நிகழ்ச்சியாலேயே சிவபெருமான் 'மையணி மிடற்றினான்' என்று குறிக்கப்படுகிறார்.

**3. அ. சொற்களைப் பிரித்தறிக.**

சிதரசைத்து - சிதர் + அசைத்து; வெண்மதி - வெண்மை + மதி; வெள்வாய் - வெள்ளை (வெண்மை) + வாய்; அருமறை - அருமை + மறை.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

சிதர் - கந்தைத் துணி; அசைத்து - உடுத்தி; மழுக்கு கூனல் - மழுங்கி வளைந்த; வெள்வாய்க் குயம் - வெண்மையான வாயை உடைய கொடுவாள்; தாள் ஏற்றி - கால்களில் அணிந்து.

**இ. விளக்கவுரை :**

விறகு விற்பவனாக வந்த இறைவன், வலப்பக்கம் செருகியிருந்த வெள்வாய்க் கொடுவாள், இறைவனின் சடையில் பொருந்திய வெள்ளிய சந்திரப் பிறையை எடுத்து அணிந்தது போன்றிருந்தது.

**4. அ. சொற்களைப் பிரித்தறிக.**

தேய்ந்தழுந்திய - தேய்ந்து + அழுந்திய; பங்குறை - பங்கு + உறை.

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

தறிந்த - தறித்த, வெட்டிய; இந்தனம் - விறகு; பங்கி - தலை மயிர்; பறிந்து - நீங்கி; மறிந்த - மடங்கிய; கங்கை - இறைவன் முடியில் இடம் பெற்றிருந்த கங்கைநதி; பங்குறை மங்கை - இறைவன் உடலின் இடப் பாகத்தில் உள்ள பார்வதி தேவி.

## இ. விளக்கவுரை :

பகீரதன் தன் முன்னோர் நற்கதி பெறுவதற்காக, அவர் சாம்பல்மீது கங்கை பாய விரும்பினான். தவமிருந்து வானிலிருந்து கங்கையை மண்ணுக்கு வரவழைத்தான். கங்கையின் வேகத்தைத் தணிப்பதற்குச் சிவபெருமானை வேண்டினான். எனவே, சிவபெருமான் கங்கையைத் தம் தலைமீது தாங்கி வழியச் செய்தார். இதனையே **'பரிந்து மறிந்த கங்கை'** என்னும் தொடர் குறிக்கிறது.

பிருங்கி முனிவர் சிவபெருமானையே வழிபட்டு உய்ய விரும்பினார். எனவே வண்டு வடிவமெடுத்துச் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் இடையே புகுந்து, சிவபெருமானை மட்டும் சுற்றி வந்தார். இதனைக் கண்ட பார்வதி தேவி, முனிவர் தன்னை நீக்கி வழிபட்டதன் காரணத்தை அறிந்து வருந்த, சிவபெருமான் 'சக்தியின்றிச் சிவனில்லை. சிவனின்றிச் சக்தியில்லை' என்பதை உலகத்துக்கு உணர்த்தத் தம் உடலில் பாதியைப் பார்வதிக்கு அளித்தார். இதனையே **'பங்குறை மங்கை'** என்னும் தொடர் குறிக்கிறது.

## 5. அ. அருஞ்சொற்பொருள் :

அறாவிலை - அளவுக்கு மீறிய விலை; பகர்ந்து - கூறி; மிடைந்த - நெருங்கிய; கவலை - தெருக்கள் கூடும் இடம்; முடுக்கர் - தெருச் சந்து; மால் - திருமால்; சூழ்ச்சி - ஆலோசனை; கடைத்தலை - தலைவாயில்.

## ஆ. விளக்கவுரை :

வேதங்களால் உணர்த்த முடியாதவர் சிவபெருமான். பன்றி உருவோடு சென்ற திருமால், அன்னப் பறவை உருவோடு சென்ற பிரம்மா ஆகியோரின் திட்டமிட்ட முயற்சியாலும் காணமுடியாதவர் சிவபெருமான். காலத்தைக் கடந்தவர் சிவபெருமான். இவற்றையே **'வேதமும் பிரமன் மால் சூழ்ச்சியும் பகலும் கடந்த'** என்னும் தொடர் குறிக்கிறது.

## 6. அ. சொற்களைப் பிரித்தறிக.

இன்னிசை - இனிமை + இசை; சிறிதெழீஇ - சிறிது + எழீஇ; மடுத்தியாரவன் - மடுத்து + யார் + அவன்.

## ஆ. அருஞ்சொற்பொருள் :

அடுத்தவன், இசைவல்லான் - ஏமநாதன்; சிறிது எழீஇ - சிறிது உயர்த்தி; சுருதி - இசை; மடுத்து - (இசையைக்) கேட்டு.

**7. அ. சொற்களைப் பிரித்தறிக.**

வண்டறை - வண்டு + அறை; பண்டரு - பண் + தரு; குற்றேவல் - குறுமை + ஏவல்

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

வண்டறை - வண்டுகள் ஒலிக்கும்; கொன்றையான் - கொன்றை மாலை அணிந்த சிவன்; பண்டரு - இசை தருகின்ற; விபஞ்சி - வீணை; முண்டகம் - தாமரை மலர்; முண்டக மலரோன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன்; மாயோன் - திருமால்; புரந்தரன் - இந்திரன்; அண்டர் - தேவர்.

**8. அ. சொற்களைப் பிரித்தறிக**

தசையெலாம் - தசை + எலாம்.

**ஆ. அருஞ்சொற்பொருள்:**

கனியிசைக் கிழவன் - இனிய இசைக்கு உரியவனாகிய பாணபத்திரன்; கிழமை - உரிமை; வேட்டு - விரும்பி; வினைஞன் - தொழில் செய்பவன்; மூத்தாய் - முதுமையுற்றாய்.

**9. அ. சொற்களைப் பிரித்தறிக.**

வெவ்விறகு - வெம்மை + விறகு; பாடென - பாடு + என.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

வெவ்விறகு எறிந்து - உலர்ந்த விறகினை வெட்டி; ஓம்புகேன் - காப்பாற்றுவேன்; நைவளம் - ஒருவகைப் பண்; விறகு மள்ளா - (அழைத்தல்) விறகு சுமக்கும் திண்மையானவனே; ஒருகால் - மற்றொருமுறை.

**10. அ. சொற்களைப் பிரித்தறிக.**

முந்நீர் - மூன்று + நீர்; பொருப்பிழி - பொருப்பு + இழி; அருட்கடல் - அருள் + கடல்; மருட்கெட - மருள் + கெட.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

தருக்கள் - மரங்கள்; சலியா - அசையா; முந்நீர்ச் சலதி - மூன்று நீரையும் கொண்டுள்ள கடல்); கலியா - ஆரவாரம் செய்யா; பொருப்பு - மலை; இழி - இறங்குகிற; மாந்தி - பருகி; மருட்கெட - மயக்கம் தீர; அறிவன் - வல்லுநர்.

**இ. விளக்கவுரை :**

முந்நீர் - ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றும் சேர்ந்தது - கடல். மரங்கள், கடல், அருவி, நதி ஆகியன அனைத்தும் விறகாளாய் வந்த இறைவனின் இசை கேட்டு அசைவற்று நின்றன. இக்காட்சியை 'அறிவன் தீட்டிவைத்த சித்திரமே ஒத்தது' என்ற அடி குறிக்கிறது.

**11. அ. சொற்களைப் பிரித்தறிக.**

பைத்தலை - பை + தலை; பல்பொறி - பல + பொறி; தத்தம் - தம் + தம்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

பைத்தலை - படம் பொருந்திய தலை; விடவாய் - விடம்பொருந்திய வாய்; பல்பொறி - பல புள்ளிகளைக் கொண்டுள்ள; மஞ்ஞை - மயில்; நால்வாய் - தொங்குகின்ற வாய்; மத்தமான் - யானை; அரி - சிங்கம்; புல்வாய் - கலைமான்; மருட்கை - மயக்கம்; தத்தம் ஆறு - தமது தமது வழியே; மா - விலங்கினம்; புள் - பறவைகள்.

**இ. விளக்கவுரை :**

இயங்கும் உயிரினங்களும் இசை கேட்டுத் தம் தம் செயல் மறந்து மயங்கி நின்றன என்பதை இப்பாடல் குறிக்கிறது.

**12. அ. சொற்களைப் பிரித்தறிக.**

யானறிந்த - யான் + அறிந்த; சாதாரியன்று - சாதாரி + அன்று; அறிந்ததென்று - அறிந்தது + என்று.

**ஆ. அருஞ்சொற் பொருள் :**

சாதாரி - சாதாரி என்னும் பண்; இம்பர் - இவ்வுலகம்; நவின்றிலர் - கூறார்; தேவகானம் - இறைவனது இசை; உணர்த்தினோன் - கற்பித்தோன்.

**13. அ. சொற்களைப் பிரித்தறிக.**

அழுக்கமுற்றெழுந்து - அழுக்கம் + உற்று + எழுந்து.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

இழுக்கிவிட்ட - ஒதுக்கிவைத்த; வழுக்கில் - குற்றமற்ற; எற்றோ - எத்திறத்ததோ; அழுக்கம் - கவலை; பண்டர் - பாணன்; இருள்வழி - இருண்ட வழியில்.

**14. அ. சொற்களைப் பிரித்தறிக.**

ஆடலேற்றழகர் - ஆடல் + ஏறு + அழகர்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

ஆடலேறு - ஆடல் கலையில் வல்லவன், சிவபெருமான்; இசைவலான் - ஏமநாதன்; பாண் - இசை; பத்திரம் - பாதுகாப்பு.

**IV. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'தென்னவர் பெரும' என்னும் அழைப்புத் தொடரில் 'தென்னவர்' எனும் சொல் யாரைக் குறிக்கிறது?**

அ. சிவபெருமான் ஆ. வரகுண பாண்டியன்

இ. தென்பகுதி மக்கள்

2. **'பொய்யறு மனத்தான்' எனக் குறிப்பிடப்படுபவர்**

அ. பாணபத்திரன் ஆ. ஏமநாதன் இ. வரகுணன்

3. **'மழுக்கு கூனல் வெள்வாய் குயம் வலம்படச் செருகி' யிருந்ததற்குக் கூறப்பட்டுள்ள உவமை.**

அ. அழுக்கு மூழ்கிய சிதர்

ஆ. அமுதம் ஒழுக்கு வெண்மதி இ. இழுக்கு தேய் செருப்பு

4. **'முண்டக மலரோன்' யார்?**

அ. சிவன் ஆ. திருமால் இ. பிரமன்

5. **கனியிசைக் கிழவன் என்பவன் --------**

அ. பாணபத்திரன் ஆ. விறகாள் இ. ஏமநாதன்

6. **'இக்கிழமகன்' என ஏமநாதனால் குறிப்பிடப்பட்டவன்........**

அ. விறகாள் ஆ. பாணபத்திரன் இ.மன்னன்

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 7. | மதுரை நாயகன் | - அ. புரந்தரன் |
| 8. | முண்டக மலரோன் | - ஆ. திருமால் |
| 9. | கனியிசைக் கிழவன் | - இ. ஏமநாதன் |
| 10. | மாயோன் | - ஈ. சிவபெருமான் |
| 11. | நைவளம் தெரிந்தோன் | - உ. பிரம்மா |
| | | - ஊ. பாணபத்திரன் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

12. விறகாளின் தலை எங்ஙனம் இருந்ததாகப் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுகிறார்?

13. விறகாளாய் வந்த இறைவன் எங்கெங்கு அலைந்தார்?

14. இறைவன் யார்யாரைக் குற்றேவலராகக் கொண்டிருந்தார்?

15. எவை இறைவன் இசையால் சித்திரம் போலிருந்தன?

16. பாணபத்திரன் ஏமநாதனை எவ்வாறு வெல்வதாக மன்னனிடம் உறுதியளித்தான்?

17. விறகாளின் இசைகேட்டு ஏமநாதன் வியந்து கூறியது யாது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

18. 'பாணபத்திரன் தனக்கு இசை கற்பிக்க மறுத்ததற்குக் கூறிய காரணமாக' விறகாள் கூறியதை எழுதுக.

19. இசை வயப்பட்ட விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் நிலையை எழுதுக.

20. 'யார் நீ?' என வினவிய ஏமநாதனுக்கு விறகாளாய் வந்த இறைவன் உரைத்த பதிலை விளக்குக.

21. இறைவன் கொண்ட விறகாளின் தோற்றத்தை எழுதுக.

**V. மொழித்திறன் வளர் பயிற்சி**

1. 'கூடல் முன்னவன்' என்னும் தொடரால் குறிக்கப் பெறுபவர் சிவபெருமான். இதேபோன்று, பாடப் பகுதியாய் அமைந்த விறகு விற்ற படலத்தில் சிவபெருமானைக் குறிக்கும் வேறு நான்கு தொடர்களை எடுத்து எழுதுக.

    1. ........................ 3. ........................

    2. ........................ 4. ........................

2. எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழ் உள்ள சொற்களில் முதலெழுத்து அளவொத்து அமையுமாறு மாற்றி இரண்டாம் எழுத்து ஒன்றி வருமாறு பட்டியலை நிறைவு செய்க.

    எ-டு : பாடு - நாடு

    1. கூடல் - -------------
    2. கங்கை - -------------
    3. கூனல் - -------------
    4. கிழவன் - -------------

## VI. திறன் வளர் தொடர் பணி

1. விறகாளாய் வந்த இறைவனும் ஏமநாதனும் பேசிக்கொண்ட செய்தியை உரையாடலாக எழுதுக.

2. பாடப் பகுதியான விறகு விற்ற படலத்தில் சிவபெருமான் விறகாளாய் உருவம் பெற்றமை வருணிக்கப்பெற்றுள்ளது. இதே போன்று மண் சுமந்த படலத்தில், பிட்டு விற்று வாழ்வு நடத்திய 'வந்தி' என்னும் மூதாட்டிக்கு உதவச் சிவபெருமான் கூலியாளாய் உருவம் மாறி வந்தமை வருணிக்கப்பெற்றுள்ளது. அப்பாடலை ஒப்பு நோக்குக.

> "அழுக்கடைந்த பழந்துணியொன்(று)
> அரைக்கசைத்து விழுத்தொண்டர்
> குழுக்கள்தந்த இண்டைநிகர்
> சுமையடைமேல் கூடைகவிழ்த்(து)
> எழுக்கடந்து திசைகடந்திட்(டு)
> இணைகடந்த திருத்தோள்மேல்
> மழுக்கடைந்து விளங்கியவாய்
> மண்தொடுதிண் படையேந்தி"

## ஆ. ஆசிய ஜோதி

ஆசியாக் கண்டத்தின் பெரும்புகழ்ப் பேரொளியாக விளங்கியவர் புத்தர்பிரான். அவர் உலக உயிர்களின்மீது அன்பு கொண்டு வாழ்ந்து காட்டியவர். அவரது அருள் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் சிறு கதைப்பகுதியே 'ஆசிய ஜோதி' என்னும் நூலாகும்.

### புத்தரும் ஏழைச் சிறுவனும்

(அரண்மனையை விட்டு வெளிவந்த புத்தர், வழிநடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஆயர் குலச் சிறுவன் ஒருவன், தன் தாழ்ந்த குடிப் பிறப்பை எண்ணிக் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். 'பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டக் கூடாது' என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இங்குக் கூறப்படுகிறது)

#### சிறுவன் புத்தரைக் காணுதல்

ஆடுகள் மேய்த்துவரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவரைச் - செல்லும்
வழியின் மீதுகண்டான்! 1

#### சிறுவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே - பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெயிலில் வெந்திடாமல் - தழைகள்
வெட்டி அருகில்நட்டான்! 2

தெய்வ குலத்திவனை - எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே - சிறிது
சிந்தை தயங்கிநின்றான்! 3

உள்ளம் தெளிந்துடனே - வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய - மடுவை
வாயில் கறந்துவிட்டான். 4

**புத்தர் எழுந்து பால் கேட்டல்**

நிலத்திற் கிடந்தஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
'கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்து தருவாய்!'என்றான். 5

**சிறுவன் மறுத்தல்**

'ஐயையோ! ஆகாதெ'ன்றான்! - சிறுவன்
'அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா - இடையன்ஓர்
காட்டு மனிதனெ'ன்றான்! 6

**புத்தர் அறிவுரை**

உலகம் புகழ்பெரியோன் - இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால் - சொன்ன
அமுத மொழிஇதுவாம். 7

'இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல் - மாந்தர்
உறவு கொள்வர்அப்பா! 8

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோஅப்பா? 9

எவர்உ டம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்வி ழிநீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா! 10

பிறப்பி னால்எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா! 11

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார். 12

**சிறுவன் பால் தருதல்**

நிலத்து யர்ஞானி - இவை
நிகழ்த்தி, 'என்தம்பீ!
கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்துதா!' என்றான். 13

ஆயர் சிறுவனும் - கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயி னும்இனியன் - கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 14

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

## I. நூல்குறிப்பு

உலக உயிர்களின் துன்பத்தைப் போக்கத் தம் அரச வாழ்வைத் துறந்து, ஆண்டியாய் அலைந்து, போதி மரத்தடியில் புதுநெறி கண்டவர் புத்தர். புத்தரின் புனித வாழ்வின் அற்புதங்களை விளக்கும் இனிய கவிதை நூலே 'ஆசிய ஜோதி' என்னும் நூலாகும். எட்வின் ஆர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'LIGHT OF ASIA' என்னும் நூலைத் தழுவித் தமிழில் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது.

## II. ஆசிரியர் குறிப்பு

ஆசிய ஜோதியை இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் குமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் என்னும் சிற்றூரில் கி.பி. 1876 இல் பிறந்தவர். பாமரனும் சுவைத்து மகிழக்கூடிய இனிய எளிய அழகிய கவிதைகளை இவர் இயற்றிப் புகழ்பெற்றார். எனவே இவரை மக்கள் 'கவிமணி' எனப் பாராட்டினர். இவர் மலரும் மாலையும், குழந்தைச் செல்வம், உமர்கய்யாம் பாடல்கள் முதலிய பல கவிதை நூல்களை இயற்றியுள்ளார்; பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் 1954 ஆம் ஆண்டு மறைந்தார்.

## III. சொற்களஞ்சியம்

### 1. அ. அருஞ்சொற்பொருள்:

ஆயர் குலம் - இடையர் குலம்; வாடி - வாட்ட முற்று.

2. அ. **அருஞ்சொற்பொருள் :**

வையகம் - உலகம்; மாதவச் செல்வன் - சிறந்த தவத்தைச் செல்வமாகக் கொண்டவன்.

3. அ. **சொற்களைப் பிரித்தறிக.**

குலத்திவனை - குலத்து + இவனை; ஆகாதினி - ஆகாது + இனி; யாதெனவே - யாது + எனவே.

ஆ. **அருஞ்சொற்பொருள்:**

எளியேன் - தாழ்ந்தவன்; தீண்டல் - தொடுதல்; சிந்தை - மனம்.

4. அ. **சொற்களைப் பிரித்தறிக.**

வெள்ளாடு - வெண்மை + ஆடு; மயக்கொழிய - மயக்கு + ஒழிய.

ஆ. **அருஞ்சொற்பொருள்:**

மயக்கொழிய - சோர்வு நீங்க; மடு - பால் சுரக்கும் மடி.

இ. **விளக்கவுரை:**

காராடு (கருமையான ஆடு) களையும் 'வெள்ளாடு' எனக் கூறுவது மங்கல வழக்காகும்.

5. அ. **அருஞ்சொற்பொருள்:**

ஐயன் - தலைவன் புத்தன்; கலம் - கலயம், மண்ணாலாகிய பாத்திரம்.

6. அ. **சொற்களைப் பிரித்தறிக.**

ஆகாதென்றான் - ஆகாது + என்றான்; தீண்டவொண்ணா - தீண்ட + ஒண்ணா; மனிதனென்றான் - மனிதன் + என்றான்.

ஆ. **அருஞ்சொற்பொருள்:**

அண்ணலே - உயர் குடிப் பிறந்தவரே; தீண்ட ஒண்ணா - தொடக்கூடாத.

7. அ. **சொற்களைப் பிரித்தறிக.**

கேட்டந்நாள் - கேட்டு + அந்நாள்.

ஆ. **அருஞ்சொற்பொருள் :**

அலகில் - அளவு இல்லாத; அமுத மொழி - அமுதம் போன்ற இனியசொற்கள்.

8. அ. **அருஞ்சொற்பொருள் :**

இடர் - துன்பம்; இரங்கிடும்போதும் - மனம் இரக்கம் கொள்ளும் போதும்; மாந்தர் - மக்கள்.

9. **அ. அருஞ்சொற்பொருள் :**

உதிரம் - இரத்தம்.

10. **அ. அருஞ்சொற்பொருள் :**

விழி - கண்; உவர்ப்பு - உப்புத் தன்மை.

12 **அ. அருஞ்சொற்பொருள் :**

நாடும் - விரும்பும்; தின்மை - தீமை; அண்டி - நெருங்கி.

13. **அ. சொற்களைப் பிரித்தறிக.**

நிலத்துயர் - நிலத்து + உயர்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

ஞானி - தெளிந்த அறிவைப் பெற்றவர்.

14. **அ. சொற்களைப் பிரித்தறிக.**

வாங்கியுண்டு - வாங்கி + உண்டு.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

அளிக்க - கொடுக்க; தளர்ச்சி - சோர்வு.

**IV. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'எளியேன் தீண்டலும் ஆகாது இனி' என்று ஆயர்குலச் சிறுவன் நினைத்தது ஏன்?**

அ. அவர் யார் என அறியாததால்

ஆ. அவர் தெய்வ குலத்தைச் சேர்ந்தவர் என்பதால்

இ. அவர் மயக்கமாக இருந்ததால்

2. **'உலகம் புகழ் பெரியோன் இந்த உரையினைக் கேட்டு' - 'இந்த உரை' எனக் குறிக்கப்படுவது........**

அ. நான் பால்கறக்க முடியாது

ஆ. நான் கையினால் தீண்டக்கூடாத காட்டு மனிதன்

இ. நீங்கள் தெய்வ குலத்தைச் சார்ந்தவர்.

3. **ஆயர் சிறுவன் புத்தர் வாயில் பாலைக் கறந்துவிட்டது ஏன்?**

அ. புத்தர் தரையில் படுத்திருந்தமையால்

ஆ. சிறுவனிடத்தில் பாத்திரம் இல்லாமையால்

இ. புத்தரைத் தீண்டக் கூடாது என்பதால்

4. **உலகில் சிறப்பு வேண்டுமெனில் புத்தர் ............ வேண்டுமென்கிறார்.**

அ. நல்ல பிறப்பு ஆ. சிறந்த பெருமை இ. நல்ல செய்கை

5. **நிலத்துயர் ஞானி - இத்தொடரில் 'நிலத்துயர்' என்பதனை எப்படிப் பிரிப்பது சரி?**

அ. நிலம் + துயர் ஆ. நிலம் + உயர் இ. நிலத்து + உயர்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. கவிமணியைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
7. புத்தபிரானின் சோர்வைக் கண்ட ஆயர்குலச் சிறுவன் செய்த உதவி யாது?
8. புத்தர் ஆயர் குலச் சிறுவனிடம் என்ன கேட்டார்? அதற்கு அவன் கூறிய மறுமொழி யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. உலகம் புகழ் பெரியோன் கூறிய அமுத மொழிகளைத் தொகுத்துக் கூறுக.
10. 'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை' என்பதனைப் புத்தர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
11. 'மேற்குலத்தார்' என்றும், 'தீண்ட வொண்ணாதார்' என்றும் புத்தர் எவரைக் குறிப்பிடுகிறார்?
12. புத்தரின் தளர்ச்சி எவ்வாறு நீங்கியது?

**V. மொழித்திறன் வளர்பணி**

கீழ் உள்ள சொற்களுக்கு இருபொருள் கூறித் தனித்தனி வாக்கியத்தில் அமைக்க.

ஆடு - வெள்ளாடு - ஆடுதல்

எ-டு. ஆடு - தாளத்துக்குத் தக்கவாறு ஆடு.

ஆடு - எங்கள் வீட்டில் இரண்டு ஆடுகள் உள்ளன.

1. கலம் 2. ஓடு 3. நாடு 4. கலை

**VI. திறன்வளர் தொடர்பணி**

'ஆடுகள் மேய்த்துவரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்'

- இவ்வடியில் முதல் சீரிலும் (சொல்) நான்காம் சீரிலும் வந்துள்ள **முதல் எழுத்து ஒரே எழுத்தாய் (ஆ)** அமைந்திருப்பதைக் காண்க. இதனை **மோனை** என்பர்.

இதுபோன்று இப்பாடல் பகுதியில் **மோனை** அமைந்துள்ள இரண்டு அடிகளை எடுத்து எழுதுக.

# 4. பல்சுவைப் பாடல்கள்

நகை, அழுகை, வீரம் முதலான பல சுவைகள் தோன்றுமாறு பாடப்படும் பாடல்கள் பல்சுவைப் பாடல்களாம். இப்பாடல்களில் உவமை, உருவகம் போன்ற இலக்கிய அணி நயங்கள் அமைந்திருக்கும். இவை கற்பவர் சிந்தனையைத் தூண்டும்.

## அ. முத்தொள்ளாயிரம்

பண்டைத் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பெற்றது. சேர, சோழ, பாண்டியரின் ஆட்சிச் சிறப்பு, வீரம், நாட்டு வளம் முதலியன பற்றிப் பாடிய பாடல் தொகுப்பே முத்தொள்ளாயிரம்.

### சேர நாட்டு வளம்

அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

### I. நூல் குறிப்பு

மூன்று + தொள்ளாயிரம் - முத்தொள்ளாயிரம். சேர, சோழ, பாண்டிய வேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூல். அந்த இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களில், ‘புறத்திரட்டு’ என்னும் நூலின் வாயிலாக 108 வெண்பாக்கள் மட்டுமே காணக் கிடக்கின்றன. பழைய உரை நூல்களில் மேற்கோளாக 22 பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. சுவை மலிந்த இவ்வெண்பாக்கள் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

### II. ஆசிரியர் குறிப்பு

இந்நூல் ஆசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை. எனினும் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். இவர் தமிழ்ப் பண்பாட்டையும் மூவேந்தர் இயல்புகளையும் தமிழர் போர் முறைகளையும் படையில் இடம்பெறும் யானை, குதிரை, வீரர் இயல்புகளையும் நன்கு உணர்ந்தவராக இருக்க வேண்டும்.

## III. சொற்களஞ்சியம் :

### அ. சொற்களைப் பிரித்தறிக.

அரக்காம்பால் - அரக்கு + ஆம்பல்; வாயவிழ - வாய் + அவிழ; பார்ப்பொடுக்கும் - பார்ப்பு + ஒடுக்கும்; புள்ளினம் - புள் + இனம்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

அள்ளல் - சேறு; பழனம் - வயல்; பொய்கை - குளம்; அரக்கு ஆம்பல் - செந்நிறம் உடைய அல்லி மலர்; வெரீஇ - அஞ்சி, பயந்து; பார்ப்பு - பறவைக் குஞ்சு; கவ்வை - ஆரவாரம், பேரொலி; நச்சு - நஞ்சு; கோ - அரசன்; கோதை - சேரமன்னன்; புள் - பறவை.

### இ. விளக்கவுரை :

சேறு நிறைந்த வயல்களில் செவ்வாம்பல் இதழ் விரியப் பூத்திருக்கின்றது. அங்கு நீர்ப் பறவைகள் தம் குஞ்சுகளுடன் நீந்திச் செல்கின்றன. நீரில் பிரதிபலிக்கின்ற மலரின் நிறத்தைக் கண்ட பறவைகள், நீர்நிலை தீப்பிடித்துக் கொண்டதாக எண்ணின; அச்சம் கொண்டு குஞ்சுகளைக் காக்க, சிறகுகளால் அணைத்துக் கொண்டன. ஆம்பல் பூத்திருப்பதும், பறவைகள் அங்குத் தங்கியிருப்பதும் நீர் வளத்தைக் காட்டுகிறது. பறவைகள் ஆரவாரம் செய்து ஒலி எழுப்புவதைப் புலவர், பறவைகள் அஞ்சுகின்றன எனக் கூறியுள்ளார். இதன் வாயிலாகப் பறவைகள் அச்சமுற்று எழுப்பும் ஆரவாரம் தவிர, பகைவர் பயத்தால் மக்கள் எழுப்பும் அச்ச ஆரவாரம் அந்தச் சேர நாட்டில் இல்லை என்பதைப் புலப்படுத்துகிறார்.

நஞ்சு பூசிய வேலேந்திய சேர மன்னனது நாட்டின் வளத்தையும் பெருமிதத்தையும் நகைச்சுவை அமைய இப்பாடல் விளக்குகிறது.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வெள்ளம் தீப்பட்டதென அஞ்சியது......**

   அ. கோதை　ஆ. புள்　இ. பார்ப்பு

2. **'கோக்கோதை நாடு' எனக் குறிப்பிடப்பட்டது........**

   அ. சோழ நாடு　ஆ. பாண்டிய நாடு

   இ. சேர நாடு

3. **'நச்சிலை' என்னும் சொல்லை.......... எனப் பிரித்தல் சரி.**

   அ. ந + சிலை　ஆ. நச்சு + இலை

   இ. நச்சு + சிலை

4. **புள்ளினம் ஆரவாரம் செய்தலைக் கூறுகின்ற கவிஞர் அதன் மூலம் உணர்த்தும் கருத்து .........**

அ. பார்ப்புகளைக் காப்பாற்றப் புள்ளினம் ஆரவாரம் செய்தது

ஆ. தண்ணீரில் நெருப்பைக் கண்டு ஆரவாரம் செய்தது

இ. நாட்டில் அமைதி நிலவுவதைக் குறித்தது

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. பறவை அஞ்சிய காரணத்தைக் கூறுக.

6. கோக்கோதை நாடு ஆரவாரம் உடையதாக இருக்கக் காரணம் என்ன?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

7. சேர நாட்டின் இயற்கை வளத்தை முத்தொள்ளாயிரம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

**V. மொழித்திறன் வளர் பயிற்சி**

இச்செய்யுளில் வந்துள்ள 'வெரீஇ' என்னும் சொல்லை 'வெரீ', 'இ' எனப் பிரித்துப் படித்தல் கூடாது. 'வெரீ' என்பதை நீட்டி, 'வெரீஇ' என மூன்று மாத்திரை அளவாக நீட்டிப் படிக்க வேண்டும். கீழ் உள்ள அளவு எடுத்துள்ள சொற்களை வாய்விட்டுப் படிக்கவும்.

1. தழீஇ 2. நசைஇ ' 3. ஓஒதல் 4. தொழாஅர்

## ஆ. திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றால நாதர் உலா வரும்போது அவரைக் கண்டு ஒரு பெண் அவர் மீது அன்பு கொண்டாள். அவளுக்குக் குறி சொல்லத் தொடங்கிய குறத்தி தான் வாழும் நாட்டின் வளத்தைக் கூறும் பகுதி இது.

### நாட்டு வளம்

ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
　　ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
　　வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
　　புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
　　திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே.

- திரிகூடராசப்பக் கவிராயர்

## I. நூல் குறிப்பு

குறவஞ்சி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. 'குறம்' என்பது மலைவாழ் மக்கள் வாழ்க்கை நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுவது. இது 'குறவஞ்சி நாடகம்' எனவும் கூறப்படுகிறது. திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தி தன் நாட்டு வளத்தைப் பாடும் பகுதி பாடமாக அமைந்துள்ளது.

## II. ஆசிரியர் குறிப்பு

திருக்குற்றாலக் குறவஞ்சி நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் மதுரையை ஆண்ட முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கரவர்களால் பாராட்டப் பெற்றவர். இவரது புலமையை வியந்து அரசர் இவருக்குத் 'திருக்குற்றால நாதர் கோயில் வித்துவான்' என்ற சிறப்புப் பட்டம் சூட்டிப் பாராட்டினார். குறவஞ்சிமேடு என்னும் நன்செய் நிலத்தை நன்கொடையாக வழங்கினார். இவரை ஆதரித்துப் போற்றிய மற்றொரு வள்ளல் 'சொக்கம்பட்டிச் சின்னணஞ்சாத் தேவர். இவர் திருக்குற்றால நாதரைப் போற்றிக் குறவஞ்சி நாடகம், தலபுராணம், அந்தாதி, மாலை, உலா, பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

பூம்புனல் - பூ + புனல்; சூலுளை - சூல் + உளை; நல்லறம் - நன்மை + அறம்; மின்னார் - மின் + ஆர்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

ஒடுங்க - அடங்க; மருங்கு - இடை, இடுப்பு; யோகியர் - தவ வலிமை மிக்கவர்; சூல் - கருப்பம்; உளை - வருந்தும்; வித்து - விதை; கிண்கிணி - சதங்கை; கீர்த்தி - புகழ்.

### இ. விளக்கவுரை:

குற்றால நாட்டில் 'ஓடுவது' எனக் கூறுவதன் மூலம் 'அச்சத்தால் எவரும் ஓடார், வெள்ளம் மட்டுமே ஓடும்' என்பதை உணர்த்துகிறார். அடங்கி இருப்பது யோகியர் மனம், வாடி இருப்பது மங்கையரின் இடுப்பு எனக் கூறுவதன் வாயிலாக 'மக்கள் எவரும் அடங்கிக் கிடந்தோ, மெலிந்து வருந்தியோ துன்புறும் நிலையில் இல்லை' என்பதைச் சுட்டுகிறார். வருந்துவன கருவுற்ற சங்குகள் எனக் கூறுவதன் மூலம்

'மக்களுள் எவரும் வருந்தார்' எனச் சுட்டுகிறார். மண்ணில் வீசுவன விதைகள்; பயனற்றவை என ஒதுக்கத்தக்கவை வேறு எவையும் இல்லை. புலம்புபவைபோல் ஒலி எழுப்புபவை கால் சதங்கைகளே; மக்களில் புலம்புவார் எவருமிலர். பிறரைப்போல் பொருளை மட்டுமே தேடாமல், குற்றாலத்தில் வாழும் மக்கள் நல்லறத்தையும் புகழையும் மட்டுமே தேடுவதாகக் குறிப்பிடுகிறார். மக்கள் பக்தி இன்பத்தில் ஆழ்ந்து வளமாக வாழும் நாடே எங்கள் தென்னாரிய நாடாகும் எனக் குறத்தி நாட்டு வளம் கூறுகிறாள்.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. தென்னாரிய நாட்டில் ஒடுங்கி இருப்பதாகக் கவிஞர் குறிப்பிடுவது.......**

அ. மங்கையர் இடுப்பு ஆ. யோகியர் உள்ளம்

இ. ஏழையர் மனம்

**2. திருக்குற்றாலத்தில் புலம்புவதாகக் குறத்தி கூறுவது......**

அ. சூலுற்ற சங்கு ஆ. கிண்கிணிக் கொத்து

இ. வருந்தும் மக்கள்

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

3. குறவஞ்சி எனப்படுவது யாது?
4. 'வருந்தக் காண்பது சூலுளை சங்கு' என்னும் தொடர் உணர்த்தும் பொருளையும் அதனால் பெறப்படும் செய்தியையும் கூறுக.

### இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

5. திருக்குற்றாலக் குறவஞ்சி ஆசிரியரைப் பற்றிக் குறிப்பெழுதுக.
6. தென்னாரிய நாட்டின் சிறப்புகளாகக் குறத்தி கூறுவன யாவை?

## V. மொழித்திறன் வளர் பயிற்சி

### அ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. வெள்ளம் | அ. வருந்துவது |
| 2. உள்ளம் | ஆ. தேடுவது |
| 3. புகழ் | இ. ஓடுவது |
| 4. சங்கு | ஈ. ஒடுங்குவது |
| | உ. போடுவது |

**ஆ. கோடிட்ட இடங்களைச் சரியான சொல்லாலோ, எழுத்தாலோ நிரப்புக.**

1. தென்னாரிய நாட்டில் ஓடக் காண்பது பூம்புனல் ...... (வெல்லம் / வெள்ளம்)
2. குற்றாலத்தில் வருந்தக் காண்பது சூ .... ளை சங்கு. (லு/ழு)
3. தென்னாரிய நாட்டில் தேடக் காண்பது நல்ல ...... ம் கீர்த்தி. (ர/ற)

**VI. திறன்வளர் தொடர் பணி**

உழைப்பால் தேடிச் சேர்க்கத் தக்கன நல்லறமும் புகழும் என்று திருக்குற்றாலக் குறவஞ்சி கூறுகிறது. இந்தப் புண்ணியத்தையும் புகழையும் பெற மக்கள் இந்நாளில் என்ன செய்ய வேண்டுமென நீ கருதுவதை எழுதுக.

# இ. தில்லைக் கலம்பகம்

இந்நூல் தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெருமையைப் போற்றிப் பாடப்பட்டது. கலம்பக உறுப்புகள் பதினெட்டனுள் ஒன்று அம்மானை. ஒருவர் ஒரு செய்தியைக் கூற, அதைத் தொடர்ந்து இன்னொருவர் வினாதொடுக்க, அதற்கு மற்றொருவர் விடை கூறுவதைப் போலத் தொடர்ந்து பாடும் முறையில் இப்பாடல் அமைந்துள்ளது.

தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவுங்காண் அம்மானை!
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே யாமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை!
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை!

**- இரட்டைப் புலவர்**

**I. நூல் குறிப்பு**

தமிழில் வழங்கும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கலம்பகம். புய வகுப்பு, அம்மானை, மறம், குறம் முதலிய பதினெட்டு உறுப்புகள் அமைய, நால்வகைப் பா இனங்களும் கலந்து வர, அந்தாதித் தொடையாக நூறு செய்யுள்களால் பாடப்படுவது கலம்பகம். தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் சிவபெருமான்மீது பாடப்பெற்றமையால் 'தில்லைக் கலம்பகம்' என்னும் பெயரைப் பெற்றது. பாடமாக அமைந்துள்ள பகுதி தில்லைக் கலம்பகத்தில் உள்ள 'அம்மானை' பாடலாகும். 'அம்மானை' என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று. அம்மானை ஆடும்போது மகளிர் பாடும் பாட்டுக்கு 'அம்மானை வரி' என்பது பெயர். அப்பாடலில் ஒருத்தி ஒரு கருத்தைக்

கூறுவாள். இன்னொருத்தி அக்கருத்தை ஒரு வினா எழுப்பி மறுப்பாள். மற்றொருத்தி அவ்விருவருக்கும் பொருந்தும் வகையில் ஒரு செய்தியை விடையாகக் கூறுவாள். இங்ஙனம் பாடிக்கொண்டே பந்துகளை உருட்டி விளையாடுவது அம்மானை விளையாட்டாகும்.

## II. ஆசிரியர் குறிப்பு

தில்லைக் கலம்பகத்தைப் பாடியோர் இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டைப் புலவர்களாவர். இவர்கள் சோழ நாட்டைச் சார்ந்த ஆமிலந்துறை என்னும் ஊரில் பிறந்து வாழ்ந்தவர்கள். பிறவியிலேயே கண் பார்வை இழந்தவர் ஒருவர், நடக்க இயலாத வகையில் கால் ஊனமுற்றவர் மற்றொருவர். இறையருளால் இவ்விருவரும் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கினர். கால் ஊனமுற்றவரைப் பார்வை இழந்தவர் தம் தோளில் தூக்கிக்கொண்டு நடக்க, இருவரும் பல்வேறு தலங்களுக்கும் சென்று இறைவன் அருள்வேண்டிப் பல பாக்களைப் பாடியுள்ளனர். இவர்கள் பாடிய பாடல்களில் முன்னிரண்டு அடிகளை ஒருவர் தொடங்க, பின்னிரண்டு அடிகளை மற்றொருவர் முடிப்பார். எனவே, இவர்களை மக்கள் 'இரட்டைப் புலவர்' எனப் போற்றினர். இவர்கள் வாழ்ந்த காலம் 17 ஆம் நூற்றாண்டாகும்.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

தென்புலியூர் - தெற்கு + புலியூர்; வெம்புலி - வெம்மை + புலி.

### ஆ. அருஞ்சொற்பொருள்:

தென்புலியூர் - சிதம்பரம்; அம்பலவர் - நடராசப் பெருமான்; வெம்புலி - வேங்கைப் புலி, புலிக்கால் முனிவர்; ஆட்டை விட்டு - இரையாகிய ஆட்டை விட்டு, இறைவன் ஆடும் நடனமாகிய ஆட்டத்தை விட்டு.

### இ. விளக்கவுரை:

வியாக்கிரபாதர், மத்தியந்தன முனிவரின் மகன்; இறைவன் சிவபெருமானிடம் பேரன்பு பூண்டவர். தமது சிவபூசைக்குப் பழுது இல்லாத மலர்களை எடுக்க நகங்களில் கண்களையும், மரங்களில் வழுக்காமல் ஏறப் புலிக் கால்களையும் கைகளையும் வேண்டிப் பெற்றவர். எனவே, 'புலிக்கால் முனிவர்' என அழைக்கப்பட்டவர். சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் தரிசனத்திற்காக அம்பலத்தை விட்டு அகலாது, சிவபூசையை மேற்கொண்டவர். பதஞ்சலி முனிவருடன்கூடி நடன தரிசனம் கண்டு பேரின்பம் பெற்றவர்.

**IV. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'அம்மானை' என்பது.......**

அ. இரட்டையர் பாடிய நூல்களுள் ஒன்று

ஆ. மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று

இ. கலம்பக நூல்களுள் ஒன்று

**2. இரட்டையர் பலவேறு தலங்களுக்குச் சென்றபோது.......**

அ. கால் ஊனமுற்றவர் கண் பார்வையற்றவரைத் தூக்கிச் சென்றார்

ஆ. கால் ஊனமுற்றவரும் கண்பார்வையற்றவரும் சேர்ந்தே சென்றனர்

இ. கண் பார்வையற்றவர் கால் ஊனமுற்றவரைத் தூக்கிச் சென்றார்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. கலம்பகம் பற்றிக் கூறுக.

4. அம்மானை பற்றி எழுதுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. இரட்டைப் புலவர் பற்றிக் குறிப்பெழுதுக.

6. தில்லைக் கலம்பகச் செய்யுள் உணர்த்தும் செய்தியை எழுதுக.

## ஈ. வள்ளலார் பிள்ளைத் தமிழ்

### தாலப் பருவம்

கன்னலெ னத்தகும் இன்னமு தத்தமிழ்
கடவுள்த ருந்தமிழே!
கற்றிட வுற்றிட நற்றவர் பெற்றருள்
கண்டது செந்தமிழே!

தென்னக மன்னவ ரன்னவ ரெல்லாந்
தேர்ந்தது பைந்தமிழே!
தேடுத லற்றுயர் பாடல்வ ழுத்திடச்
செய்வது வண்டமிழே!

முன்னிய வெல்லா மின்னிய லேதரும்
மொய்ம்புள துந்தமிழே!
மூவுல குந்தொழு நாவல ருந்தொழ
மூத்தது முத்தமிழே!

என்னவி ரித்துரை சொன்னத மிழ்க்கடல்
எந்தாய்! தாலேலோ!
எங்க ளருட்பிர காசப் பெருமலை
இறைவா! தாலேலோ!

**- புலவர் மா. க. காமாட்சிநாதன்**

## I. நூல் குறிப்பு

'பிள்ளைத் தமிழ்' என்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது கடவுளரையும் மக்களுள் சிறந்தவரையும் முதன்மையாகக் கொண்டு பாடப்பெறும். பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாக உருவகித்துக் காப்புப் பருவம் முதலிய பத்துப் பருவங்களால் பாடப்பெறும். இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பத்துப் பருவங்களில் பாடப்பெறும். பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு இறுதியிலுள்ள மூன்று பருவங்கள் அம்மானை, நீராடல், ஊசல் என அமையும். இந்தப் பாடல், 'வள்ளலார் பிள்ளைத் தமிழ்', தாலப் பருவத்தில் உள்ளது. 'தால்' என்பது நாக்கு. நாவை அசைத்துக் குழந்தைக்குப் பாடும் பாட்டு 'தாலாட்டு' எனப்படும்.

## II. ஆசிரியர் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் புலவர் மா.க.காமாட்சிநாதன். இவர் மதுரை மாடக்குளத்தில் 18.7.1930 ஆம் நாளில் திரு.கலிங்கவஸ்தாத் - கருப்பாயி அம்மாள் ஆகியவர்கட்கு மகனாகப் பிறந்தவர். இவர் சென்னை மாநகராட்சி உயர்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்; திருவருட் பிரகாச வள்ளலார் அருள்பெற்று 'வள்ளலாரின் ஞான விருந்து, திருவருட்பா விளக்கவுரை, மகாபாரத நாடகம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

'திருவருட் பிரகாச வள்ளலார்' என்னும் இராமலிங்க அடிகள் மீது பாடப்பட்ட 'வள்ளலார் பிள்ளைத் தமிழ்' இனிய இலக்கிய நூல் ஆகும். இந்நூலில் வள்ளலாரின் வரலாறு, திருவருட்பா நுட்பம், வேதாந்த சித்தாந்த விளக்கம், ஞானவுணர்வு, தெய்வபக்தி, தமிழ்ப்பற்று ஆகியவை மிளிர்கின்றன.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

கன்னலெனத் தரும் - கன்னல் + எனத் தரும்; இன்னமுதத் தமிழ் - இனிமை + அமுதம் + தமிழ்; பெற்றருள் - பெற்று + அருள்; செந்தமிழ் - செம்மை + தமிழ்; மன்னவரன்னவரெல்லாம் - மன்னவர் + அன்னவர் + எல்லாம்; பைந்தமிழே - பசுமை + தமிழே; தேடுதலற்றுயர் - தேடுதல் + அற்று + உயர்; வண்டமிழே - வண்மை + தமிழே; முன்னிய வெல்லாம் - முன்னிய + எல்லாம்; மொய்ம்புளது - மொய்ம்பு + உளது; மூவுலகு - மூன்று + உலகு; முத்தமிழே - மூன்று + தமிழே; விரித்துரை - விரித்து + உரை; எந்தாய் - எம் + தந்தாய்; எங்களருட்பிரகாச - எங்கள் + அருள் + பிரகாச.

### ஆ. அருஞ்சொற்பொருள்:

கன்னல் - கரும்பு; நற்றவர் - நல்ல தவமுடையவர்; முன்னிய - நினைத்த; மின்னியல் - மின்னலின் தன்மைபோல், ஒரு நொடிக்குள்; மொய்ம்பு - வலிமை; மூவுலகும் - மூன்று உலகமும்; தொழு - வணங்கும்; நாவலர் - பேச்சு வன்மையுள்ளவர்; முத்தமிழ் - தமிழின் இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவு; எந்தாய் - எம் தந்தையே; தாலேலோ - நாவை அசைத்து ஒலி எழுப்புக.

### இ. விளக்கவுரை:

வள்ளல் பெருமானின் சிறப்புகளைப் பேசுவதன் வாயிலாகத் தமிழ் மொழியின் சிறப்புகளும் பெருமைகளும் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன. தமிழின் சுவை கரும்புக்கு ஒப்பிடப்பட்டது. நல்ல தவத்தைச் செய்தோர் பல செய்திகளைக் கற்று அறியவும், அதனால் உணர்ந்தவற்றைச் சிந்தித்து உயர்வு பெறவும் முடிந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னாட்டில் வாழ்ந்த மன்னர்கள் தமிழைத் தேர்ந்து ஆய்ந்த நிலை கூறப்பட்டுள்ளது. நினைத்ததை எல்லாம் மின்னல்போல் உள்ளத்தில் தோன்றச் செய்யும் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 'உலகில் முந்தித் தோன்றிய மொழி தமிழ்' என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அருட்பிரகாச வள்ளலாரை 'எந்தை' என்றும் 'தமிழ்க் கடல்' என்றும் 'தத்துவப் பெருமலை' என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. மக்கள் ......... 'அருட்பிரகாசர்' என அழைத்தனர்.

2. பிள்ளைத் தமிழில் மூன்றாவது பருவம் .......... பருவம்.

3. பிள்ளைத் தமிழ்ப் பருவங்களின் எண்ணிக்கை ............

4. பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் .......... பாடல்களைக் கொண்டதாகப் பிள்ளைத் தமிழ் அமையும்.

**ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**5. 'தால்' என்பதற்கு .... என்பது பொருள்.**

அ. தலை ஆ. கை இ. நாக்கு

**6. 'தாலப் பருவம்' என்பது............**

அ. கைகளை முன்னால் ஊன்றி, தலையை அசைத்து ஆடுமாறு கூறுவது

ஆ. கைகளைக்கொட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தக் கூறுவது

இ. நாக்கை அசைத்து ஒலி எழுப்புமாறு கூறுவது

**7. 'பைந்தமிழ்' என்னும் சொல் பிரிக்கப்பட வேண்டிய முறை.......**

அ. பைந் + தமிழ் ஆ. பச்சை + தமிழ் இ. பசுமை + தமிழ்

**இ. பொருத்துக.**

**கீழுள்ள தமிழ் வகைகளைப் பாடலில் கூறப்பட்டுள்ள உரிய செயல்களோடு இணைக்க.**

| **தமிழ் வகைகள்** | **பாடல் கூறும் செயல்கள்** |
|---|---|
| 8. அமுதத் தமிழ் | - அ. நற்றவர் பெற்றருள் கண்டது |
| 9. பைந்தமிழ் | - ஆ. தேடுதலற்றுயர் பாடல் வழுத்திடச் செய்வது |
| 10. செந்தமிழ் | - இ.மூவுலகும் நாவலருந் தொழ மூத்தது |
| 11. வண்டமிழ் | - ஈ. மின்னியலே தரும் மொய்ம்புளது |
| 12. முத்தமிழ் | - உ. கடவுள் தருந் தமிழ் |
| | - ஊ. தென்னக மன்னவர் தேர்ந்தது |

**ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

13. பிள்ளைத் தமிழ் இலக்கணம் யாது?

14. பெண்பால் பிள்ளைத் தமிழுக்கு உரிய பருவங்கள் யாவை?

15. தாலப் பருவம் என்பது யாது?

16. ஆசிரியர் காமாட்சிநாதன் வள்ளலாரை எவ்வெவ்வாறு விளித்துத் தாலாட்டச் சொல்கிறார்?

**உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

17. தமிழின் சிறப்புகளாகத் தாலப் பருவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள செய்திகளை எழுதுக.

## உ. முக்கூடற் பள்ளு

## (மழைக் குறி)

ஆற்று வெள்ளம் நாளை வரத்தோற்று தேகுறி - மலை
யாளமின்னல் ஈழ மின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்து ஏற்றடைக்குதே - மழை
தேடி ஒருகோடி வானம்பாடி ஆடுதே
போற்று திருமால் அழகர்க்கு ஏற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே!

### I. நூல் குறிப்பு

பள்ளமான நீர் நிறைந்த சேற்று நிலத்தில் (நன்செய் நிலத்தில்) உழவுத்தொழில் செய்துவாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரித்துக் கூறுவதாக அமைந்த நூல் 'பள்ளு'. திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல். இதற்கு 'ஆசூர் வடகரை நாடு' என்ற பெயரும் உண்டு. தென்பால் உள்ள பகுதி 'சீவலமங்கைத் தென்கரை நாடு' என்று வழங்கப் பெறுகின்றது. தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர், மருதூர். முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி. மருதூர்ப் பள்ளி இளைய மனைவி. இருவரை மணந்து திண்டாடும் பள்ளன் வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பது போலப் பாடப்பட்ட இப்பள்ளு நூல், முக்கூடற்பள்ளு என்று பெயர் பெற்றது.

### II. ஆசிரியர் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் எவர் எனத் தெரிந்திலது. ஆயினும் நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் 'என்னயினாப் புலவர்' எனச் சிலர் கூறுவர். சந்த நயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

## III. சொற்களஞ்சியம்

### அ. அருஞ்சொற்பொருள் :

கேணி - கிணறு; வானம்பாடி - சிட்டுக் குருவி போன்ற பறவை: பண்ணை - வயல்; சேரி -மக்கள் சேர்ந்து வாழும் இடம்.

### ஆ. விளக்கவுரை :

மழை வருவதற்கான அறிகுறிகளைப் பற்றி இப்பாடல் கூறுகிறது. மரத்தின் கொம்புகள் காற்றில் சுழன்று ஆடுதல், கிணற்றுத் தவளைகள் ஒலி எழுப்புதல், நண்டுகள் சேற்றால் தம் வளைகளுக்குக் கரை அமைத்தல், வானம்பாடிப் பறவைகள் விண்ணில் பறந்தெழுந்து மகிழ்ச்சியால் ஒலி எழுப்புதல், வானம் இடி இடித்து மின்னல் மின்னுதல் ஆகிய இவை எல்லாம் மழை வருவதற்கான அறிகுறிகளாகும். திருமாலழகர் கோயில் கொண்டுள்ள வயல் வளம்மிக்க சேரிப்பகுதியில் வாழும் பள்ளர்கள், இந்த நிகழ்ச்சிகளால், மறுநாள் நிச்சயமாக மழை வரும் என்ற நம்பிக்கையில் ஆடிப்பாடி மகிழ்கிறார்கள்.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1. வானம் பாடியும் நண்டும் மழை வரப்போவதை எவ்வெவ்வாறு வெளிப்படுத்தியுள்ளன?
2. பள்ளர்கள் தங்கள் மகிழ்ச்சியை எவ்வாறு வெளிப்படுத்தினர்?

### ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

3. மறுநாள் மழை வரும் என்பதை உணர்த்திய அறிகுறிகளை எழுதுக.

## V. மொழித்திறன் வளர் பயிற்சி

கீழ் உள்ள பேச்சு வழக்குகளையும் எழுத்து வழக்குகளையும் அறிக.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| 1. காற்றடிக்கும் | - காற்று வீசும் |
| 2. தவளை கூப்பிடும் | - தவளை கத்தும் |
| 3. வானம்பாடி ஆடும் | - வானம்பாடி பறக்கும் |

## VI. திறன்வளர் தொடர் பணி

1. தவளையின் வகைகளை அறிந்து கொள்க.

நீர்த்தவளை, தேரை, பச்சைத் தவளை, சொறித் தவளை

2. தவளையின் வாழ்க்கை முறையையும் அது சுற்றுச் சூழல் தூய்மை காக்கப் பயன்படும் முறையையும் அறிக.

3. எலிக்குப் பகை பூனை, நண்டுக்குப் பகை நரியும் கொக்கும், தவளைக்குப் பகை பாம்பும் பருந்தும் என்பதை அறிக.

## ஊ. கலைசைச் சிலேடை வெண்பா

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே - மேவும்
அரிவையம்பா கத்தா னரனொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தா னகம்.

**- தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்**

### I. நூல் குறிப்பு

கலைசை, கலசாபுரி, கோவிந்தபுரம் என்னும் பெயர்களால் அழைக்கப்பெறும் இவ்வூர் தொண்டை நாட்டில் உள்ள ஒரு சிற்றூர். இது சென்னை ஆவடியை அடுத்துள்ள சிற்றூராகும். இங்கு மாடுகள் இருந்ததால் பசுத்தொழுவத்தில் கழுநீர்த் தொட்டிகள் அமைத்து வளர்த்திருக்கின்றனர். அதனால் இவ்வூர் தொட்டிக்கலை என்று அழைக்கப்பெற்றது. கலைசை நகரில் வாழ்ந்த தமிழ்ப் புலவரின் புலமைத் திறனும் பக்திச் சுவையும் வெளிப்படுமாறும் இருபொருள் படுமாறும் நயமாக வெண்பாக்களால் பாடப்பட்ட நூல் கலைசைச் சிலேடை வெண்பா.

'சிலேடை' என்பது இரட்டுற மொழிதல். ஒரு சொல்லோ, தொடரோ இருபொருள் தருவது, செம்மொழிச் சிலேடை. ஒரு சொல்லோ, தொடரோ பிரியாமலும் பிரிந்தும் இருவகையாகப் பொருள் தருவது பிரிமொழிச் சிலேடை. ஒரு தொடர் இருமுறை மடங்கி வந்து, வெவ்வேறு பொருள் தருவது மடக்கு. இப்பாடலின் இறுதி, இரு அடிகளும் ஒரே மாதிரி வந்து, இருவேறு பொருள் தருவதால் மடக்கு ஆகும்.

### II. ஆசிரியர் குறிப்பு

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் திருவாவடுதுறை ஆதீனப் புலவராகச் சில காலம் இருந்துள்ளார். இவர் சைவ சமயப் பற்றுடையவர். கலைசைக் கோவை, கலைசைச் சிலேடை வெண்பா, கலைசைச் சிதம்பரேசர் பரணி, திருவாவடுதுறைக் கோவை, சிவஞானமுனிவர்துதி, கீர்த்தனை போன்றவற்றை எழுதியுள்ளார். இவரது காலம் இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் என்று ஆய்வாளர் கருதுகின்றனர்.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

வண்டினம் - வண்டு + இனம்; காவலரை - கா + அலரை; அரிவையம் பாகத்தான் - அரிவை + அம் + பாகத்தான், அரி + வை + அம்பு + ஆகத்தான்; அரணொரு - அரண் + ஒரு; மூன்றெய்தோன் - மூன்று + எய்தோன்.

### ஆ. அருஞ்சொற்பொருள்:

ஆவலுடன் - ஆசையுடன்; பாவலரும் - புலவர்களும்; காவலரை - அரசரை, சோலை மலர்களை; சூழும் - சுற்றி இருக்கிற; வண்டு இனம் - வண்டுக் கூட்டம்; மேவும் - விரும்பும்; அரிவை - உமா தேவி, பார்வதி; அம் பாகத்தான் - அழகிய இடப் பக்கத்தில் பெற்றவன்; அரி - திருமால்; வை - கூர்மை; அரண் ஒரு மூன்று - ஒப்பற்ற மதில்களைப் பெற்ற திரிபுரம்; எய்தோன் - அழித்தவன் (சிவபெருமான்); அகம் - இடம்.

### இ. விளக்கவுரை:

'காவலரை ஆவலுடன் பாவலரும், கா அலரை ஆறுகால் வண்டினமும் சூழும் கலைசை; அரிவை அம் பாகத்தான், அரி வை அம்பு ஆகத் தான் - அரண் ஒரு மூன்று எய்தோன் மேவும் அகம்' என்று சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

ஆறு கால்களையுடையன வண்டுகள் என்ற செய்தி சிந்திக்கத்தக்கது. சோலைகளிலுள்ள செடி கொடிகளில் பூத்த மலர்களில் தேன் குடிக்க வண்டுகள் சூழ்ந்திருக்கும்.

வண்டுகள் சோலையுள் புகுந்து 'இம்மலர் உண்ணும் தேனைப் பெற்றுள்ளது' என்றும் 'இம்மலர் உண்ணாத் தேனைப் பெற்றுள்ளது' என்றும் ஆராய்வதை **'கா அலரைச் சூழும்'** என்னும் தொடர் உணர்த்துகிறது. பார்வதியைச் சிவபெருமான் இடப் பாகத்தில் பெற்றுள்ள செய்தியை **'அரிவை அம் பாகத்தான்'** என்னும் தொடர் தெரிவிக்கிறது.

தவம் செய்து சிவன் அருள் பெற்ற அசுரர் மூவர், பறக்கும் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளில் சென்று தேவர்களையும் பிறரையும் துன்புறுத்தி வந்தனர். செருக்குற்ற அசுரர்களை அழிக்கச் சிவபெருமானே ஆயத்தமானார். போருக்குப் புறப்பட்ட சிவபெருமான், மேரு மலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் பிரம்மனைச் சாரதியாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு புறப்பட்டார். தான் அம்பாகி அசுரர்களை அழிக்கப் போவதை எண்ணித் திருமால் இறுமாப்பு உற்றார். இதை அறிந்த சிவபெருமான் சிரித்து, அச்சிரிப்பில் வெளிப்பட்ட

தீச் சுடரொளியில் திரிபுரத்தை எரித்தார். இந்தச் செய்திகளையே 'அரி வை அம்பாகத் தான் அரண் ஒரு மூன்று எய்தோன்' என்னும் தொடர் குறிக்கிறது.

**IV. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'காவலரை' என்னும் சொல் 'சோலையில் மலர்ந்த பூக்கள்' என்னும் பொருளைத் தரும்போது ...... எனப் பிரியும்.**

   அ. காவலர் + ஐ   ஆ. கா + அலரை   இ. கா + வலரை

2. **'அரிவையம் பாகத்தான்' இத்தொடரில் சிவபெருமான் பார்வதியை 'இடப் பாகத்தில் பெற்றவன்' என்பதைக் குறிக்கும் சொல்......**

   அ. அரிவை   ஆ. வையம்பு   இ. பாகத்தான்

3. **'அரிவையம் பாகத்தான்' என்பதில் 'அரிவை' என்னும் தொடர் குறிப்பது....**

   அ. பெண்ணை   ஆ. பார்வதியை   இ. திருமாலை

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

4. செம்மொழிச் சிலேடை என்பது யாது?
5. பிரிமொழிச் சிலேடை என்பது யாது?
6. ஆறுகால் வண்டினம் காவலரைச் சூழும் கலைசை - பொருள் எழுதுக.
7. அரிவையம் பாகத்தான் - இருவகையாகப் பிரித்துப் பொருள் எழுதுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. கலைசைச் சிலேடை வெண்பா - குறிப்பெழுதுக.
9. தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பற்றிக் குறிப்பெழுதுக.
10. கலைசைச் சிலேடை வெண்பா உணர்த்தும் செய்தி யாது?

## எ. நாட்டுப் பாடல்

### ஏற்றப் பாட்டு

நாட்டுப் புறங்களில் வாழும் மக்கள் சிறந்த உழைப்பாளிகள். உழைப்பின் கடுமையை உணராமல் தெம்பூட்டுவதற்கு அவர்கள் செய்யும் தொழிலுக்கேற்பப் பாடல்களைப் பாடுவது வழக்கம். அவை இசை நயத்தோடு கருத்தாழம் மிக்கவையாகவும் இருக்கும். இது ஏற்றம் இறைக்கும்போது பாடுகின்ற ஒருவகைப் பாட்டாகும்.

வடக்கே மழைபெய்ய வருங்கிழக்கே வெள்ளம்!
தெற்கே மழைபெய்யத் திரும்பிவரும் வெள்ளம்!
வெள்ளங்கண்ட நாரை வெளிச்சிகொண்டு போகும்!
தண்ணிகண்ட நாரை தவளைகொண்டு போகும்!
ஆற்றைக்கண்ட நாரை அயிரைகொண்டு போகும்!
குளத்தைக்கண்ட நாரை குறவைகொண்டு போகும்!

**I. சொற்களஞ்சியம்**

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

ஏற்றப்பாட்டு - ஏற்றம் + பாட்டு; வருங்கிழக்கே - வரும் + கிழக்கே; வெள்ளங்கண்ட - வெள்ளம் + கண்ட; ஆற்றைக் கண்ட - ஆற்றை + கண்ட; குளத்தைக் கண்ட - குளத்தை + கண்ட.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

வெள்ளம் - நீர்ப்பெருக்கு; வெளிச்சி - ஒருவகை மீன்; நாரை - கொக்கு வகை; குறவை - ஒரு வகை மீன்.

**இ. விளக்கவுரை :**

தமிழகத்திற்கு வடகிழக்குப் பருவக் காற்றின் மூலமாகவும், தென்மேற்குப் பருவக் காற்றின் மூலமாகவும் மழை கிடைக்கின்றது. நீர்ப்பெருக்கு பள்ளத்தை நோக்கிப் பாயும். தமிழ்நாட்டு நிலப்பரப்பு மேற்கே மலைப் பகுதியாகவும் கிழக்கே சமவெளியாகவும் இருப்பதால் வெள்ளம் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. நீர்ப்பெருக்கில் மீன்கள் வெள்ளத்தை எதிர்த்துச் செல்லும். நாரை அவற்றைக் கொத்திச் செல்லும். தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் உள்ள தவளைகளை நாரை எடுத்துச் செல்லும். ஆற்று வெள்ளத்தில் வரும் அயிரை மீன்களை நாரை கொத்தித் தின்னும். குளங்களில் உள்ள குறவை மீன்களை நாரை கவ்வித் தின்னும்.

**II. பொருளுணர் திறன்**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வெள்ளம் திரும்பி வரக் காரணம் ........**

அ. வடக்கே மழைபெய்தமை
ஆ. கிழக்கே மழை பெய்தமை
இ. தெற்கே மழை பெய்தமை

**ஆ. நாரை கண்டதையும் கொண்டுபோனதையும் பொருத்தி எழுதுக.**

| நாரை கண்டது | நாரை கொண்டு போனது |
|---|---|
| 2. வெள்ளம் | - அ. அயிரை மீன் |
| 3. தண்ணீர் | - ஆ. குறவை மீன் |
| 4. ஆறு | - இ. தவளை |
| 5. குளம் | - ஈ. கெண்டை மீன் |
| | - உ. வெளிச்சி மீன் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. தமிழகத்திற்கு மழை தரும் பருவக் காற்றுகள் எவை?
7. வெள்ளத்தில் வரும் மீன்கள் யாவை?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. மழை பெய்தபோது நிகழ்ந்த நிகழ்வுகளை ஏற்றப்பாட்டு எவ்வாறு எடுத்துரைக்கிறது?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு அறிந்து வாக்கியங்களில் அமைத்தெழுதுக.**

1. மழை - மலை
2. தவலை - தவளை
3. வெள்ளம் - வெல்லம்
4. குலம் - குளம்

## IV. திறன்வளர்தொடர் பணி

**அ. 'ஆறு' என்றதன் இரு பொருள் அறிக.**

1. ஆறு - எண்ணிக்கை
2. ஆறு - நீர் ஓடும் வழி

இது போன்று இரு பொருள் தரும் சொற்கள் மூன்றை எழுதிப் பொருள் வேறுபாட்டைக் குறிக்க.

1. ........... 2. ............. 3. ............

**ஆ. கீழே கொடுக்கப்பட்டுள்ள நீர் நிலைகளின் பெயர்களை அறிக.**

1. கேணி
2. குளம்
3. குட்டை
4. ஏரி
5. ஊருணி
6. பொய்கை
7. தடாகம்

# 5. மறுமலர்ச்சிப் பாடல்கள்

பழமைப் பண்பாட்டின் அடிப்படையை முழுமையும் புறக்கணிக்காமல், எதிர்காலச் சிந்தனையைச் சீராக வளர்க்கும் முறையில் புதுமையை வரவேற்று இயற்றப்படும் பாடல்களே மறுமலர்ச்சிப் பாடல்களாகும்.

## அ. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

- தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்

### I. ஆசிரியர் குறிப்பு

சுப்பிரமணியன் தூத்துக்குடி மாவட்டத்து எட்டயபுரத்தில் பிறந்தவர். தந்தையார் சின்னசாமி ஐயர். தாய் இலக்குமி அம்மையார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்தமையால் சான்றோர்கள் 'பாரதி' எனப் பட்டம் அளித்தார்கள். அது முதல் 'சுப்பிரமணிய பாரதி' என அனைவராலும் அழைக்கப்பட்டார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பாரதியார் இனிய, எளிய தமிழ்ப் பாடல்களைப் பாடி மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டினார். 'தேசியக் கவி' எனப் பாராட்டப்பட்டார். இவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; எட்டயபுர மன்னரின் அவைப் புலவராக விளங்கினார். 'சுதேசமித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியராக அமர்ந்து அந்நிய ஆட்சியை எதிர்த்துக் கட்டுரைகளைத் தீட்டினார். 'இந்தியா' இதழின் ஆசிரியராகச் செயல்பட்டார். சுதேச கீதங்கள், பாப்பாப் பாட்டு, முரசு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், தனிப்பாடல்கள் முதலியன இவர் இயற்றியவை. இவை 'பாரதியார்

கவிதைகள்' என்னும் தொகுப்பாக மக்களிடையே வழங்கி வருகிறது. ஞானரதம், சந்திரிகையின் கதை ஆகிய நூல்களையும் பல கட்டுரைகளையும் உரை நடையில் எழுதியுள்ளார்.

## II. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

யாமறிந்த - யாம் + அறிந்த; இனிதாவதெங்கும் - இனிது + ஆவது + எங்கும்; உலகனைத்தும் - உலகு + அனைத்தும்; நாமமது - நாமம் + அது; தமிழரென - தமிழர் + என; கொண்டிங்கு - கொண்டு + இங்கு; தேமதுரம் - தேன் + மதுரம்; தமிழோசை - தமிழ் + ஓசை; உலகமெலாம் - உலகம் + எலாம்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

காணோம் - பார்க்கவில்லை; பாமரர் - ஏதும் அறியாதவர்; இகழ்ச்சிசொல - தாழ்த்திப் பேச, பழித்துப் பேச; பான்மை - சிறப்புத் தன்மை, பெருமை; நாமம் - பெயர்; சொல்லீர் - கூறுவீர், தேமதுரம் - தேன் போன்ற இனிமை.

### இ. விளக்கவுரை :

'ஓர் இனம் வளரவேண்டுமானால், அவர் பேசும் மொழி வளர்ந்து உயர்வு பெறவேண்டும்' என்பது உலகு அறிந்த உண்மை. தமிழ் இனம் தன் பெருமையை மீண்டும் பெறவேண்டுமானால், தமிழ் மொழி உலகில் பெருமை பெறவேண்டும் என்பதைப் பாரதி உணர்ந்து வலியுறுத்தியுள்ளார். தமிழ் இனத்திற்கு வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமானால் முதலில் தமிழ்மொழிக்கு ஒரு மலர்ச்சி ஏற்பட வேண்டும். பிரெஞ்சு, ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி எனப் பல மொழிகளைப் பேசவும் படிக்கவும் அறிந்தவராகிய பாரதியார், அம்மொழிகளின் இலக்கியச் சுவைகளையும் நுகர்ந்தவர். ஆதலால் தமிழின் சிறப்பையும், அம்மொழி பேசிய மக்களின் இக்கால நிலையையும் இக்கவிதையில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். தமிழர் இனம் பெருமை குன்றி, உலகோர் பழிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளதைக் கண்டு மனம் நொந்து பேசுகிறார். எனினும் தமிழ் இனம் உயர்வதற்கான வழிமுறைகளையும் கூறுகிறார்.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' - எனப் பாடியவர் .......**

   அ. புரட்சிக் கவி ஆ. கவிமணி இ. தேசியக்கவி

2. **உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு வாழ்பவர்.......**

அ. பாமரர் ஆ. தமிழர் இ. சொல்வோர்

3. **'பெயரளவுக்கு' என்னும் பொருளைத் தரும் சொல்........**

அ. பாமரராய் ஆ. நாமமது இ. தேமதுரம்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

4. பாரதியார் ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக.

5. பாரதியாரின் படைப்புகள் பற்றி எழுதுக.

6. தமிழின் சிறப்பாகவும் தமிழர் நிலையாகவும் பாரதியார் கூறியுள்ளதை எழுதுக.

7. தமிழர் எவ்வாறு வாழ்வதாகவும் என்ன செய்ய வேண்டுமெனவும் பாரதியார் கூறுகிறார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. பாரதியாரைப் பற்றிக் குறிப்பெழுதுக.

9. பாரதியார் தமிழ்மொழி, தமிழர் வாழ்வு பற்றிக் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.

**IV. திறன் வளர் தொடர் பணி**

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'

எனப் பாடிய பாரதியார், அதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்பதனையும் கூறியுள்ளார். அதனைப் படித்து அறிக.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்

## ஆ. பெண் கல்வி

பெண்களால் முன்னேறக் கூடும் - நம்
வண்தமிழ் நாடும் எந்நாடும்
கண்களால் வழிகாண முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போலே
பெண்களால் முன்னேறக் கூடும்.
படியாத பெண்ணினால் தீமை - என்ன
பயன்விளைப் பாளந்த ஊமை
நெடுந்தமிழ் நாடெனும் செல்வி - நல்ல
நிலைகாண வைத்திடும் பெண்களின் கல்வி
பெண்களால் முன்னேறக் கூடும்.

**- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**

### I. ஆசிரியர் குறிப்பு

இருபதாம் நூற்றாண்டில் புரட்சிமிகு புதுமைக் கருத்துகளைக் கவிதைகளாகப் பாடிப் புகழ் பெற்றவர் பாரதிதாசன். இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். இவர் புதுவையில் வாழ்ந்த கனகசபை, இலக்குமி இணையருக்கு மகனாக 29.8.1891 அன்று பிறந்தவர். பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம் பயின்றவர். புதுவையில் பாரதியாருடன் நெருங்கிப் பழகி, அவர் அன்பையும் பாராட்டையும் பெற்றவர். கனக சுப்புரத்தினம் முதன் முதலில் பாடிய 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' எனத் தொடங்கும் பாடலின் மூலம் பாரதியின் கவிதா மண்டலத்துள் இணைந்தவர். தம் பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டவர். இவர் தமிழாசிரியராகவும் இதழாசிரியராகவும் பணிபுரிந்தவர். பாரதிதாசன் கவிதைகள் (4 தொகுப்பு), இருண்ட வீடு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு முதலான கவிதைத் தொகுப்புகளைப் படைத்தவர். இவரியற்றிய 'பாண்டியன் பரிசு' காப்பிய வகையுள் அடங்கும். இவர் நாடகங்கள் பல எழுதியுள்ளார். இவரைப் 'புரட்சிக் கவி', 'பாவேந்தர்' எனத் தமிழ் உலகம் போற்றியது. பாடமாக அமைந்த பகுதி இவரது 'இசையமுது' தொகுப்பிலிருந்து தேர்வு செய்யப் பெற்றுள்ளது.

### II. சொற்களஞ்சியம்

#### அ. சொற்களைப் பிரித்தறிக.

வண்தமிழ் - வண்மை + தமிழ்; பயன் விளைப்பாளந்த - பயன் விளைப்பாள் + அந்த; நெடுந்தமிழ் - நெடுமை + தமிழ்.

#### ஆ. விளக்கவுரை :

நாடு முன்னேறப் பெண்களுக்குக் கல்வி இன்றியமையாதது என்பதை இக்கவிதையில் பாரதிதாசன் வலியுறுத்துகிறார். கல்வி பெறாத

பெண்களால் நலன் விளையாது. கல்வி பெறாத பெண்கள் ஊமையராவர். 'கண்களால் வழிகாண முடிவதைப்போல', 'கால்களால் முன்னேற முடிவதைப் போல' என்னும் உவமைகளைக் கூறி, பெண்கள் பெறும் கல்வி அறிவால் மட்டுமே நாடு முன்னேற முடியும் என்பதை உறுதிபடச் சொல்கிறார்.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. படிப்பறிவு இல்லாதவளைப் பாரதிதாசன் ..... எனக் குறிப்பிடுகிறார்.**

அ. செல்வி  ஆ. பெண்  இ. ஊமை

**2. 'கண்களால் வழிகாண முடிவதைப் போல' என்னும் உவமை எதனை விளக்க வந்தது?**

அ. கண்களால் சரியான வழியைக் கண்டு முன்னேற முடியும்

ஆ. பெண்களால் சரியான முன்னேற்றம் ஏற்படும்

இ. கண்கள் சரியான வழியைக் காண உதவும்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. கண்களையும் கால்களையும் உவமை கூறிப் பாரதிதாசன் உணர்த்தும் செய்தியை எழுதுக.

4. பெண் கல்வி நல்லநிலை காண உதவும் என்பதைப் பாரதிதாசன் எவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பெழுதுக.

6. பெண் கல்வி குறித்துப் பாரதிதாசன் கூறியுள்ளவற்றை எழுதுக.

## IV. மொழித்திறன் வளர் பயிற்சி

எடுத்துக்காட்டைப் படித்தறிக. பின்னர் அட்டவணையை நிரப்புக.

| | எதிர்மறை | உடன்பாடு |
|---|---|---|
| எ-டு : | படியாத பெண் | படித்த பெண் |
| | 1. எழுதாத பாடம் | ........................... |
| | 2. ........................... | கண்ட காட்சி |
| | 3. வரையாத படம் | ........................... |
| | 4. ........................... | பேசிய பேச்சு |

## இ. கையறுநிலை

சீரிய நெற்றி எங்கே?
சிவந்தநல் இதழ்கள் எங்கே?
கூரிய விழிகள் எங்கே?
குறுநகை போன தெங்கே?
நேரிய பார்வை எங்கே?
நிமிர்ந்தநன் னடைதான் எங்கே?
நிலமெல்லாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் வீழ்ந்த திங்கே!

சாவே உனக்கொரு நாள்
சாவுவந்து சேராதோ!
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ!
தீயே உனக்கொருநாள்
தீமூட்டிப் பாரோமோ!
தெய்வமே உன்னையும் நாம்
தேம்பியழ வைப்போமோ!

– **கவியரசு கண்ணதாசன்**

### I. ஆசிரியர் குறிப்பு

'கவியரசு' கண்ணதாசன் 24.6.1927 அன்று சிறுகூடல் பட்டியில் பிறந்தவர். தந்தை சாத்தப்பன்; தாய் விசாலாட்சி. இவர் இயற்பெயர் முத்தையா. காரை முத்துப் புலவர், வணங்காமுடி, கமகப் பிரியன் முதலிய புனை பெயர்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வந்தவர். 'கண்ணதாசன்' என்னும் பெயர் இயற்பெயர்போல் நிலைத்துவிட்டது. தென்றல், தென்றல் திரை, சண்டமாருதம், முல்லை, கண்ணதாசன் முதலிய பாத்திரிகைகளை நடத்தியவர். எண்ணற்ற திரைப்படப் பாடல்களை இயற்றியவர். சிறுகதைகள், புதினங்கள் பல படைத்தவர். 'அர்த்தமுள்ள இந்து மதம்' எழுதியவர். இறுதிக் காலத்தில் படைத்தது 'இயேசு காவியம்'. தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். அமெரிக்கா சென்றிருந்தபோது 17.10.1981 அன்று இயற்கை எய்தினார்.

### II. சொற்களஞ்சியம்

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

குறுநகை – குறுமை + நகை; நன்னடை – நன்மை + நடை; நிலமெல்லாம் – நிலம் + எல்லாம்; வீழ்ந்ததிங்கே – வீழ்ந்தது + இங்கே; உனக்கொருநாள் – உனக்கு + ஒருநாள்; தேம்பியழ – தேம்பி + அழ.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

குறுநகை - புன்முறுவல், மென்மையான சிரிப்பு; சஞ்சலம் - மனக்கவலை.

**இ. விளக்கவுரை :**

அன்பான தலைவன் இறந்த வேளையில், அவன் பிரிவாற்றாது மனத்துயரை வெளிப்படுத்திப் பாடுவது 'கையறுநிலை' எனப்படும். பாடமாக அமைந்த பகுதி, பாரத நாட்டின் முதல் பிரதமராக விளங்கிய 'மனிதருள் மாணிக்கம்' நேரு மரணமடைந்தபோது கண்ணதாசன் கையற்றுப் பாடிய கவிதையின் ஒரு பகுதி.

நேருவின் பரந்த நெற்றி 'சீரிய நெற்றி' எனப்பட்டது. சிவந்த அழகிய உதடுகள் 'சிவந்த நல் இதழ்கள்' எனப்பட்டன. காண்பவரை ஊடுருவும் பார்வையுடைய கண்கள் 'கூரிய விழிகள்' எனப்பட்டன. உலக மக்களின் மனத்தைக் கவர்ந்த புன்சிரிப்பு 'குறுநகை' எனப்பட்டது. அவர் தோற்றம் உலக மக்களை எல்லாம் பணியச் செய்தது என்பது 'நிலமெல்லாம் வணங்கும் தோற்றம்' எனக் குறிப்பிடப்பட்டது. இங்கு 'நிலம்' என்பது பூமியைக் குறிக்காமல் 'மக்களை'க் குறித்தமை அறிக.

நேருவின் மரணப் பிரிவை ஏற்க இயலாததால் கவிஞர் 'சாவுக்குச் சாவு வர வேண்டும்' என்றும், 'கவலைக்குக் கவலை தோன்ற வேண்டு'மென்றும், 'தீயினுக்குத் தீ மூட்டிப் பார்க்க வேண்டு'மென்றும், 'தெய்வத்தைத் தேம்பி அழச் செய்ய வேண்டு'மென்றும் பாடித் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**III. பொருளுணர் திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'நெருப்பினில் வீழ்ந்தது இங்கே' எனக் கண்ணதாசன் குறிப்பிட்டது.......**

   அ. நிமிர்ந்த நன்னடை ஆ. சிவந்த நல்லிதழ்கள்

   இ. நிலமெல்லாம் வணங்கும் தோற்றம்

2. **கண்ணதாசன் தேம்பி அழவைக்க விரும்புவதாகக் குறிப்பிடுவது....**

   அ. சஞ்சலத்தை ஆ. தெய்வத்தை இ. சாவை

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. கையறு நிலையாவது யாது?
4. நிலமெல்லாம் வணங்கும் நேருவின் தோற்றமாகக் கண்ணதாசன் கூறுவனவற்றை எழுதுக.
5. சஞ்சலமும் தெய்வமும் எத்தகைய துயரத்தை அடைய வேண்டுமெனக் கண்ணதாசன் கூறியுள்ளார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. கண்ணதாசனைக் குறித்து நீவிர் அறிந்தவற்றைச் சுருக்கி எழுதுக.

7. நேருவின் பிரிவைப் பொறுக்க முடியாமல் கண்ணதாசன் வருந்திக் கூறியுள்ளவற்றை எழுதுக.

## ஈ. பெண்மை வெல்க

கல்வி வளரஒரு கலைமகளை, கைநிறையச்
செல்வம் பெருகஒரு திருமகளை நாடியவன் 1

நதிகளையும் தான்பிறந்த நாட்டினையும் பெண்பாலாய்
மதித்துப் பெயர்சூட்டி மனமுருகிப் பாடியவன் 2

அன்புக் கடங்குவதில் ஆத்ம சுகமடையும்
பெண்ணை உணராமல் பெரும்பாடு படுத்துகிறான் 3

எல்லையிலாக் கொடுமைகளை எத்தனைநாள் தாங்குவது
ஆர்த்தெழுவோம் பார்த்திடுவோம் இனியார்கை ஓங்குவது 4

கொல்லட்டும் எனத்தலையைக் கொடுத்ததெலாம் போதுமினி
வெல்லட்டும் பெண்மைஎன விளித்தகுரல் கேட்கிறது! 5

- **திருமதி சௌந்தரா கைலாசம்**

**I. ஆசிரியர் குறிப்பு**

இக்கவிதையைப் பாடியவர் திருமதி சௌந்தரா கைலாசம், 28.2.1927இல் பிறந்தவர். முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.கைலாசம் அவர்களின் துணைவியார்; சிறந்த பேச்சாளர்; சுவை மிகுந்த இனிய கவிதைகள் பாடுவதில் வல்லவர். கருத்துச் செறிந்த சிறுகதைகள் பல எழுதியுள்ளார். மாநாடுகள், கருத்தரங்குகள், கவியரங்குகள் இவர் வருகையால் பொலிவு பெறும்.

**II. சொற்களஞ்சியம்**

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

மனமுருகி - மனம் + உருகி; அன்புக்கடங்குவதில் - அன்புக்கு + அடங்குவதில்; சுகமடையும் - சுகம் + அடையும்; ஆர்த்தெழுவோம் - ஆர்த்து + எழுவோம்; கொடுத்ததெலாம் - கொடுத்தது + எலாம்; போதுமினி - போதும் + இனி.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

கலைமகள் - கலைகளின் தலைவி, சரசுவதி; திருமகள் - செல்வங்களின் தலைவி, இலக்குமி; நாடியவன் - விரும்பித் தேடிய

மனிதன்; பெண்பாலாய் - பெண்ணாக; அன்புக்கு அடங்குவதில் - அன்புக்குக் கட்டுப்படுவதில்; ஆத்ம சுகம் - மன மகிழ்ச்சி; பெரும்பாடு - பெருந்துன்பம்; ஆர்த்து எழுவோம் - பேரொலியுடன் புறப்படுவோம்; வெல்லட்டும் - வெற்றி பெறட்டும்; விளித்த -அழைத்த.

**இ. விளக்கவுரை :**

பெண்மைக்குச் சிறப்பளித்துச் செல்வத்திற்கும் கலைகளுக்கும் உரிமையுடைய தலைமக்களாகவும் தெய்வங்களாகவும் வைத்துப் போற்றியுள்ளனர். கங்கை, காவிரி, யமுனை எனப் பெண்களின் பெயர்களை நதிகளுக்குச் சூட்டித் தாய்மையின் பெருமையைப் போற்றியுள்ளனர். நாட்டைத் 'தாய் நாடு' எனக் குறிப்பிட்டுள்ளனர். பெண்மைக்குத் தாய்மைச் சிறப்பு அனைத்துத் துறைகளிலும் ஒரு காலத்தில் அளிக்கப் பெற்றது. அன்புக்கு அடங்கித் துன்பங்களை எல்லாம் ஏற்று வாழ்வதில் இன்பம் கண்டவர்கள் பெண்கள். அப்பெண்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படும்நிலை நடைமுறையில் காணப்படுகிறது. அதனால் பொங்கி எழுந்த பெண்மையின் இயல்பு இதில் விளக்கப்பட்டுள்ளது.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மதித்து மனமுருகிப் பாடியது.......**

   அ. கலைமகளை ஆ. திருமகளை இ. பிறந்த நாட்டை

2. **பெண்கள் ஆத்ம சுகம் அடைவது.......**

   அ. நாட்டைப் பெண்பாலாய் மதித்ததில்

   ஆ. அன்புக்கு அடங்குவதில்

   இ. எல்லையிலாக் கொடுமைகளைத் தாங்குவதில்

3. **'விளித்த குரல் கேட்கிறது' - இதில் 'விளித்த குரல்' என்று குறிப்பிடப்பட்டது.....**

   அ. அன்புக்கடங்கு ஆ. வெல்லட்டும் பெண்மை

   இ. கொடுமைகளை எத்தனை நாள் தாங்குவது

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 4. | நாடியது | - அ. கொடுமைகளை |
| 5. | பாடியது | - ஆ. கலைகளை |
| 6. | தாங்கியது | - இ. நாட்டினை |
| 7. | கொடுத்தது | - ஈ. திருமகளை |
| | | - உ. தலைமை |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. மனிதன் எவ்வெவற்றை நாடினான்?
9. மனிதன் எவ்வெவற்றை எவ்வாறு மதித்துப் பாடினான்?
10. பெண்மை சுகம் கண்டது எதில்?
11. பெண்மை விளித்த குரல் எது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

12. திருமதி சௌந்தரா கைலாசம் குறித்துக் குறிப்பெழுதுக.
13. மனிதன் பெண்மையை எவ்வெவ்வாறு நாடியும் மதித்தும் போற்றினான்?
14. பெண்மை ஆர்த்தெழுந்த காரணத்தை எழுதுக.
15. பெண்மை விளித்துக் கொடுத்த குரல் யாது?

**IV. திறன்வளர் தொடர் பணி**

'ஆர்த்தெழுவோம் பார்த்திடுவோம் - இனி யார் கை ஓங்குவது'

- இத்தொடரில் 'கை ஓங்குவது' என்னும் தொடர் 'மேம்பட்டுச் செயல்படுவது' என்று பொருள் தருகிறது. இது மரபுத்தொடர். இது போன்று கீழுள்ள மரபுத்தொடர் தரும் பொருளை எழுதுக.

1. கை நழுவியது
2. கை கழுவினான்
3. கை விட்டான்
4. கை கொடுத்தான்

## உ. முன்னேற்றம் முடக்குவது

நனிபாய்ந்து வரும் வெள்ளம் நலனழித்துச் செல்வதுபோல்
பொலிகின்ற மரத்தினிலே புல்லுருவி பாய்வதுபோல்
பாதியிலே வந்திங்கே பக்குவமாய்க் கலந்துவிட்ட
சாதிவெறி மக்களின் முன்னேற்றம் முடக்குவதோ? 1

மண்டுமிருள் குணத்தவரேன் மடமைதன்னை வளர்க்கின்றார்?
நல்லபுனல் குளத்தினிலேன் நஞ்சுதனைக் கலக்கின்றார்?
பாரதத்தாய் பெற்றெடுத்த பண்பிலுயர் புத்திரர்கள்
ஒன்றுபட்டு இணைந்திட்டால் உலகினில்யார் நிகராவார்? 3

**- கவிஞர் அரசு. மணிமேகலை**

## I. ஆசிரியர் குறிப்பு

திருமதி அரசு. மணிமேகலை 6.9.1945 அன்று காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் கவிதை, கட்டுரை, நாவல், குறுநாவல், நாடகம், சிறுகதை, குழந்தை இலக்கியம் முதலிய துறைகளில் 31 நூல்கள் எழுதியுள்ளார். இவர் சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

## II. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

நலனழித்து - நலன் + அழித்து; வந்திங்கே - வந்து + இங்கே; மண்டுமிருள் - மண்டும் + இருள்; குணத்தவரேன் - குணத்தவர் + ஏன்; குளத்தினிலேன் - குளத்தினில் + ஏன்; பெற்றெடுத்த - பெற்று + எடுத்த; பண்பிலுயர் - பண்பில் + உயர்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

நனி – மிகுதி; நலனழித்து - நன்மைகளைக் கெடுத்து; பொலிகின்ற – விளங்குகின்ற; புல்லுருவி – தாவர வகைகளில் படர்ந்து அவற்றின் சாற்றை உறிஞ்சி வாழும் கொடி போன்ற தாவரம்; முடக்குவது - தடை செய்வது; மண்டும் – நெருங்கிய; இருள் - அறியாமை; மடமை - மூடத்தனம்; புனல் - தண்ணீர்; புத்திரர்கள் - பிள்ளைகள், மக்கள்; நிகராவார் - ஒப்பாவார்.

### இ. விளக்கவுரை :

மரம், செடி, கொடிகளின் மேல் படர்ந்து, வேர் பற்றி வளர்ந்து அவற்றின் சாற்றை உறிஞ்சி உயிர் வாழும் மெல்லிய கொடி போன்ற தாவர வகை 'புல்லுருவி' எனப்படும். இது தான் படர்ந்த மரத்தை விரைவில் அழித்து விடும். சமுதாயத்தின் நலனைக் கெடுப்பவராக இருப்பவரைப் 'புல்லுருவி' எனக் குறிப்பிடுவது உண்டு. சாதி வெறி சமுதாயத்தை அழிப்பதை இச்சொல்லைக் கொண்டு தெளிவாகப் புரிய வைத்துள்ளார். பாரத நாட்டு மக்களின் முன்னேற்றத்தைக் கெடுப்பது எது என்பதைத் தெளிவாக இப்பாடல் சுட்டுகிறது. பாரதத்தின் புத்திரர்கள் உலகில் உயர்வு அடைவதற்கு வழியையும் காட்டுகிறது.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'நலனழித்துச் செல்வது' என அரசு மணிமேகலை குறிப்பிடுவது ............**

அ. புல்லுருவி ஆ.பாய்ந்து வரும் வெள்ளம்

இ. சாதி வெறி

2. **'பொலிகின்ற மரத்தினிலே புல்லுருவி பாய்வது போல' என்ற உவமை எதனை விளக்குகிறது?**

அ. மரத்தில் வேறு செடி வளர்தல்

ஆ. மதம் மக்கள் ஒற்றுமையைச் சீரழித்தல்

இ. மக்களின் முன்னேற்றத்தைச் சாதிவெறி தடுத்தல்

3. **மடமைதன்மை வளர்க்கின்றவர்..........**

அ. நஞ்சுதனைக் கலக்கின்றவர்

ஆ. பண்பிலுயர் புத்திரர்கள்

இ. அறியாமைக் குணத்தைப் பெற்றவர்

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 4. | நலனழித்துச் செல்வது | - அ. பொலிகின்ற மரம் |
| 5. | முன்னேற்றம் முடக்குவது | - ஆ. நஞ்சுதனைக் கலப்பது |
| 6. | புல்லுருவி பாய்வது | - இ. அறியாமைக் குணம் |
| 7. | மடமைத் தனம் வளர்ப்பது | - ஈ. கலந்து விட்ட சாதி வெறி |
| | | - உ. பாய்ந்து வரும வெள்ளம் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. மக்களின் முன்னேற்றம் முடக்குவதாக அரசு மணிமேகலை குறிப்பிட்டுள்ளது எது?

9. பாரதத் தாயின் புத்திரர் நிகரற்று விளங்க என்ன செய்ய வேண்டும்?

10. அறியாமைக் குணம் படைத்தவர் மடமையை எவ்வாறு வளர்க்கின்றனர்?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

11. கவிஞர் அரசு. மணிமேகலை பற்றிக் குறிப்பெழுதுக.

12. சாதிவெறி மக்கள் முன்னேற்றத்தை முடக்குவதை அரசு. மணிமேகலை எவ்வாறு விளக்கியுள்ளார்?

13. பாரதத்தின் நிலையையும் அது உயர்வதற்குரிய வழியையும் அரசு. மணிமேகலை எவ்வாறு விளக்குகிறார்?

## ஊ. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்

மரம் வளர்ப்போம் மரம் வளர்ப்போம்
குழந்தைகளே வாருங்கள்!
மரத்தால் விளையும் நன்மைகளை
சொல்வேன் கொஞ்சம் கேளுங்கள்!

கைத்தடியும் கூடைகளும்
கைப்பிடியும் தந்திடும்
கட்டும் வீட்டில் கதவு சன்னல்
அத்தனையும் வழங்கிடும்

ஆடும் மயிலும் பாடுங்குயிலும்
அழகிய கிளியும் தங்கிடும்
மருளும் மானும் பிளிறும் களிறும்
குதிக்கும் குரங்கும் வாழ்ந்திடும்

காட்டு மரங்கள் குறைவதினால்
இயற்கைச் சூழல் கெட்டிடும்
வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்
இயற்கை வாழ்வை மீட்போமே!

**- கோ. பெரியண்ணன்**

### I. ஆசிரியர் குறிப்பு

கோ. பெரியண்ணன், விழுப்புரம் மாவட்டம் நல்லாமூரில் பிறந்தவர். பெற்றோர் கோவிந்தசாமி - தனலட்சுமி அம்மாள். இவர் நாட்டுப்புறப் பாடல் பற்றி ஆய்வு மேற்கொண்டு 'முனைவர்' பட்டம் பெற்றவர். அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும் தலைமையாசிரியராகவும் பணியாற்றியவர். தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர். இவர் சிறந்த சாரணர். சாரண இயக்கம் தொடர்பான நூல்கள் எழுதியுள்ளார். சிறுவர் இன்னிசைப் பாடல்கள், அடிப்படைத் தமிழ் இலக்கணம், தென் தமிழகம் தந்த தியாக தீபங்கள் முதலான நூல்களை எழுதியுள்ளார்.

### II. சொற்களஞ்சியம்

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

கைத்தடி - கை + தடி; பாடுங்குயில் - பாடும் + குயில்; காட்டு மரங்கள் - காடு + மரங்கள்; இயற்கைச் சூழல் - இயற்கை + சூழல்.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

மீட்போம் - திரும்பப் பெறுவோம்.

**ஐ. விளக்கவுரை :**

மரங்களை வளர்க்க வேண்டியதன் முக்கியத்தை விளக்கியுள்ளார். மரங்களின் பயன்பாட்டைக் கூறியுள்ளார். மரங்கள் நிறைந்த பகுதி காடு. காடுகளில் வாழும் பறவைகள், விலங்குகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மரங்களை வெட்டுவதால் இயற்கைச் சூழல் கெடுவது பற்றிக் கூறியுள்ளார். இயற்கைச் சூழலை மீட்க நாம் செயல்பட வேண்டிய முறையை வலியுறுத்தியுள்ளார். மரங்களின் பயன்கள், மரங்கள் சுற்றுச்சூழல் தூய்மைக்கு உதவும் பாங்கு, இயற்கைச் சமநிலையைக் காக்கும் நிலை ஆகியவை குறித்தும் அறிக.

**III. பொருளுணர் திறன் பயிற்சி**

**அ. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. 'ஆடும், பாடும், மருளும், பிளிறும், குதிக்கும்' என்பன எச்சவினைகள். இவை உணர்த்தும் செயல்கள் 'ஆடுதல், பாடுதல், மருளுதல், பிளிறுதல், குதித்தல்' என்பன. கீழே உள்ளவற்றுடன் தொடர்புடைய செயல்களை எழுதுக.

எ-டு : மயில் **ஆடுதல்.**

1. குயில் ........ 3. மான் ........
2. குரங்கு ........ 4. களிறு ........

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

2. மரங்கள் என்னென்ன பொருள்களைத் தருமெனக் கவிஞர் கூறுகிறார்?
3. காடுகளில் எவ்வெவை வாழ்வதாகக் கவிஞர் கூறுகிறார்?
4. இயற்கை குறித்துக் கவிஞர் கூறியுள்ளதென்ன?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் கவிதை உணர்த்தும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**IV. மொழித்திறன் வளர் பயிற்சி**

எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழுள்ள சொற்களோடு வேற்றுமை உருபுகளைச் சேர்ந்தெழுதுக.

| | ஐ | கு | இல் |
|---|---|---|---|
| எ-டு : காடு | காட்டை | காட்டுக்கு | காட்டில் |
| 1. வீடு | ............... | ..................... | .................... |
| 2. சேறு | ............... | ..................... | .................... |
| 3. ஆறு | ............... | ..................... | .................... |
| 4. சோறு | ............... | ..................... | .................... |

## எ. பாட்டெழுது

களரைத் திருத்தப் பாட்டெழுது!
        கனிவு மிகுந்த பாட்டெழுது!
விளைவைக் குறித்த பாட்டெழுது!
        விடிவும் கூறிப் பாட்டெழுது!
களைகள் நீங்கப் பாட்டெழுது!
        கருத்து நிறைந்த பாட்டெழுது!
உளையில் சேற்றில் உழலாமல்
        ஒளிசேர் தமிழிற் பாட்டெழுது!

- மு.வே. கங்காதரன்

### I. ஆசிரியர் குறிப்பு

மு.வே. கங்காதரன், மதுராந்தகத்தை அடுத்த மொறப்பாக்கத்தில் பிறந்தவர். தந்தை வேதாசலம். தாய் நவநீதம்மாள். 'பைந்தமிழ்ப் பாவலர்' என்னும் பட்டம் பெற்ற இவர், ஒரு தனித்தமிழ்ப் பாவலர். பல்வகைப்பட்ட யாப்பு வடிவங்களில் பாட்டெழுதுவதில் இணையற்றவர். அரசுப் பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, கல்வித்துறைத் துணை ஆய்வாளராகவும், பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

### II. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

பாட்டெழுது - பாட்டு + எழுது.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

களர் - பயிரிட உதவாத நிலம், பண்பட்டுப் பயன்பட வாழாத மனம் படைத்த மக்கள்; கனிவு - இரக்கம், முதிர்ச்சி; விடிவு - துன்பம் நீங்கி இன்பம் பெறுதல்; களை - பயிருடன் வளரும் வேண்டாத புல் பூண்டு; கருத்து - (சமுதாயத்திற்குப் பயன்படும்) செய்தி; உளை - வருத்தம்; உழலாமல் - சிக்கித் தவிக்காமல்.

### இ. விளக்கவுரை :

சமுதாயத்தில் உள்ள நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகக் கூறிப் பலர் பாட்டு எழுதுகின்றனர். தம் பாடல்கள் சமுதாய அவலங்களைப் பற்றி விளக்குவதாகக் கூறுகின்றனர். ஆனால் அந்த அவலங்களை நீக்குவதற்கு உரிய வழிமுறைகளைக் கூறுவதில்லை. 'பாட்டு' என்பது திருக்குறள்போல, சிலப்பதிகாரம்போலச் சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியனவாக இருத்தல் வேண்டும். அவை

காலத்தால் அழியாதன; மக்களுக்கு நல்வழி காட்டுவன. எனவே கண்டதை எல்லாம் குறித்துப் பாட்டெழுதாமல், பயனுள்ள பாடல்களை எழுதுமாறு கூறுகிறார். களர் நிலத்தைத் திருத்துதல், கனிவு மிகுதல், செயலுக்குரிய விளைவு, துன்பத்தை நீக்குதல் முதலான செய்திகளைக் குறித்துப் பாட்டெழுதி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கூறுகிறார்.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'விடிவும் கூறிப் பாட்டெழுது' - இத்தொடரில் 'விடிவு' என்பது உணர்த்தும் செய்தி ......**

அ. பொழுது விடிவது ஆ. துன்பம் நீங்குதல்

இ. துன்பம் நீங்கி இன்பம் வருகை

**2. 'ஒளிசேர் தமிழிற் பாட்டெழுது' - இத்தொடரில் 'ஒளி சேர்' என்னும் அடைமொழியைப் பெறும் சொல் ......**

அ. பாட்டு ஆ. எழுது இ. தமிழ்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. 'கனிவு மிகுந்த பாட்டு' என்பதை விவரித்து எழுதுக.

4. 'கருத்து நிறைந்த பாட்டு' என்பதைத் தெளிவுபடுத்தி எழுதுக.

5. 'களரைத் திருத்தப் பாட்டு' என்பதன் உட்பொருளை எழுதுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. 'பாட்டெழுது' என்னும் கவிதை எத்தகைய பாடல்களை எழுதுமாறு தூண்டுகிறது?

## IV. மொழித்திறன் வளர் பயிற்சி

விளை - விலை, களை - கலை, ஒளி - ஒலி

- இச்சொற்களின் பொருள் வேறுபாடு தோன்றும்வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

# 6. வழிபாட்டுப் பாடல்கள்

நம் முன்னோர்கள் போற்றிய முறைகளைப் பின்பற்றி வாழ்வதே வழிபாடாகும். இயற்கையையும் இறைவனையும் வாழ்த்தி, நற்பேறு வேண்டிப் பாடுவதே வழிபாட்டுப் பாடல்களாகும். இந்தியப் பெருநாட்டில் பல்வேறு சமயங்களும் பண்பாடுகளும் நிறைந்து காணப் பெறுகின்றன. தமிழ் இலக்கியம் பல்வேறு சமயம் சார்ந்து வளர்ந்து வளம் பெற்றுள்ளது. தமிழ்ச் சான்றோர் கடவுளரை வணங்கியும் வாழ்த்தியும் பல பாடல்களைப் பாடியுள்ளனர். சைவம், வைணவம், கிறிஸ்தவம், இசுலாமியம் ஆகிய சமயங்களைச் சார்ந்த இறைவனையோ, இறையருள் பெற்றவரையோ வழிபட்டுப் பாடிய பாடல்கள் இங்கு இடம் பெற்றுள்ளன.

## அ. சிவபெருமான்

**மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை யூன்றிச்**
**சினமெனும் சரக்கை யேற்றிச் செறிகடல் ஓடும் போது**
**மனனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா(து)**
**உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே!**

**- திருநாவுக்கரசர்**

### I. நூல் குறிப்பு

சிவபெருமானை முழுமுதற் பொருளாக வழிபடுவோர் சைவ சமயத்தவராவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழும் மூவர் தேவாரமாகும். முதல் மூன்று திருஞான சம்பந்தர் பாடியன. அடுத்த மூன்று திருநாவுக்கரசர் பாடியன. இன்னொன்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியது. பாடமாக இடம்பெற்றுள்ள பாடல் நான்காம் திருமுறையில் உள்ளது. 'தேவாரம்' என்னும் சொல்லைத் 'தே + வாரம்' எனப் பிரித்துத் 'தெய்வத் தன்மைமையுடைய இசைப் பாடல்கள்' எனக் கூறுவர். 'தே + ஆரம்' எனப் பிரித்துத் 'தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பா மாலை' எனவும் கூறுவர்.

### II. ஆசிரியர் குறிப்பு

விழுப்புரம் மாவட்டத்துத் திருவாமூரில் பிறந்தவர் திருநாவுக்கரசர். இவருக்குத் தந்தை புகழனார்; தாய் மாதினியார்; தமக்கை திலகவதியார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'மருள்

நீக்கியார்'. இவரை 'அப்பர்' எனவும் 'வாகீசர்' எனவும் அழைத்தனர். இவர் இளமையிலேயே சைவ சமய நூல்களைக் கற்றுச் சிறந்ததோடு பிற சமயங்களைப் பற்றியும் அறிந்திருந்தார். இவர் சிறிது காலம் சமண சமயத்தைத் தழுவித் 'தருமசேனர்' என்ற பட்டம் பெற்றுச் சிறப்புடன் விளங்கினார். தமக்கை திலகவதியாரின் வேண்டுதலால், சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, மீண்டும் சைவ சமயத்திற்கே திரும்பினார். இவர் சைவ சமயம் தழைக்கப் பெரும்பணியாற்றினார். இவரது காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

மனமெனும் - மனம் + எனும்; மதியெனும் - மதி + எனும்; கோலையூன்றி - கோலை + ஊன்றி; சினமெனும் - சினம் + எனும்; போதறிய - போது + அறிய.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

தோணி - படகு; மதி - அறிவு; கோல் - படகைச் செலுத்த உதவும் துடுப்பு; சினம் - கோபம்; சரக்கு - பண்டம், பொருள்; செறிகடல் - நீர் நிறைந்த கடல்; மனன்(மதன்) - அகங்காரம், செருக்கு; மறியும் - சிதைந்து அழியும்; உனும் (உன்னும்) - நினைக்கும்; உணர்வு - எண்ணம்; நல்காய் - அருள்வாயாக; ஒற்றியூர் - திருவொற்றியூர், இத்தலம் சென்னைக்கு வடக்கே உள்ளது; கோ - இறைவன், சிவபெருமான்.

### இ. விளக்கவுரை :

உள்ளத்தைப் படகு ஆகவும், அறிவைக் கோலாகவும், கோபத்தைப் பொருளாகவும், அகங்காரத்தைப் பாறையாகவும் உருவகம் செய்துள்ளார். உலக வாழ்க்கையாகிய கடலை நீந்திக் கரையேற முயல்வதைச் 'செறிகடல் ஓடும்போது' என்னும் தொடர் குறிக்கிறது.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **படகில் ஏற்றப்பட்ட சரக்கு.....**

   அ. சினம்  ஆ. மனம்  இ. மதி

2. **கீழ் உள்ள தொடர்களுள் எது உருவகத் தொடர் இல்லை?**

   அ. மனமெனும் தோணி  ஆ. சினச் சரக்கு

   இ. செறிகடல்

3. **'ஒற்றியூர் உடைய கோவே' - இத்தொடரில் 'கோ' என்ற சொல் உணர்த்தும் பொருள்.....**

   அ. பசு  ஆ. அரசன்  இ. சிவபெருமான்

4. **ஏழாம் திருமுறையைப் பாடியவர்......**

அ. திருஞான சம்பந்தர் ஆ. சுந்தர மூர்த்தி நாயனார்

இ. திருநாவுக்கரசர்

**ஆ. பொருத்துக.**

**செய்யுளின் பொருளைத் தெளிவாக உணர்ந்தபின், கீழ் உள்ளவற்றைப் பொருத்தி எழுதுக.**

5. அறிவு - அ. கப்பல்
6. ஆசை - ஆ. துடுப்பு
7. சினம் - இ. தோணி
8. மனம் - ஈ. சரக்கு

- உ. பாறை

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. திருமுறைகள் எத்தனை?
10. 'தேவாரம்' என்ற சொல்லின் பொருள் கூறுக.
11. திருநாவுக்கரசுக்குரிய வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

12. திருநாவுக்கரசர் குறித்து எழுதுக.
13. ஒற்றியூர் இறைவனிடம் திருநாவுக்கரசர் வேண்டுவது யாது?

**V. மொழித்திறன் வளர் பயிற்சி**

**அ. கீழ் உள்ள எடுத்துக்காட்டை உற்றுநோக்குக. பின்னர் அதன் கீழுள்ள உருவகத் தொடர்களை உவமைத் தொடர்களாக மாற்றுக.**

| உருவகத் தொடர் | உவமைத் தொடர் |
|---|---|
| எ-டு: அறிவு எனும் துடுப்பு | துடுப்பு போன்ற அறிவு |
| 1. மதி எனும் கோல் | ...................................... |
| 2. மனம் எனும் தோணி | ...................................... |
| 3. சினம் எனும் சரக்கு | ...................................... |
| 4. மனன் எனும் பாறை | ...................................... |

ஆ. பற்றி, ஊன்றி, ஏற்றி, ஓடும், தாக்கி - **இவை வினையெச்சச் சொற்கள். இவை உணர்த்தும் தொழில்கள் :** பற்றல், ஊன்றல், ஏற்றல், ஓடல், தாக்கல். **எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் தொழில்களைப் பொருள்களுடன் பொருத்தி எழுதுக.**

| | பொருள்கள் | தொழில்கள் |
|---|---|---|
| எ-டு: | மனம் | பற்றல் |
| 1. | சரக்கு | ................................... |
| 2. | கோல் | ................................... |
| 3. | பாறை | ................................... |
| 4. | தோணி | ................................... |

## VI. திறன்வளர் தொடர்பணி

'செறிகடல் ஓடும் போது' என்னும் தொடர் 'கடலில் செல்லும் போது' எனப் பொருள்படும். 'ஓடும்', 'ஓடாது' என்பவை 'செல்லும்', 'செல்லாது' எனும் பொருளில் அமைந்துள்ள குறளையும், பொருளையும் அறிக.

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

'உறுதியான சக்கரங்களை உடைய தேர்கள் கடலில் ஓடா. (நிலத்தில் மட்டுமே ஓடும்). கடலில் ஓடும் கப்பல்கள் நிலத்தில் ஓடா' என்பது பொருள். இதன் மூலம் அவரவர் தன்மைக்கும் வலிமைக்கும் ஏற்ற இடம் நோக்கிச் செயல்பட்டு வெற்றிபெற வேண்டும் என்பதை உணர்ந்து, வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதை அறிகிறோம்.

# ஆ. திருமால்

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே.

**- குலசேகராழ்வார்**

## I. நூல் குறிப்பு

திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபட்ட அடியவர் பன்னிருவர். இவர்கள் 'ஆழ்வார்கள்' எனப்பட்டனர். அதாவது 'பக்தியில் ஆழ்ந்தவர்கள்' எனப் போற்றப் பெற்றனர். இவர்கள் திருமாலைப் போற்றிப் பாடிய பாசுரங்கள் 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' எனத் தொகுக்கப் பெற்றுள்ளன. இதனைத் தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார். இந்நூல் முதலாயிரம், திரு இயற்பா, பெரிய திருமொழி, திருவாய்மொழி என்னும் நான்கு பகுதிகளைப் பெற்றுள்ளது. குலசேகர ஆழ்வார் பாடிய 105 பாக்கள் 'பெருமாள் திருமொழி' என வழங்கப் பெறுகிறது.

## II. ஆசிரியர் குறிப்பு

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் குலசேகரப் பெருமான். இவர் கேரள மாநிலத்துத் திருவஞ்சைக் களம் என்னும் ஊரில் அரசர் குடியில் பிறந்தவர். இவர் தந்தையார் திடவிரதர். இவரைச் 'சேரர் கோன்' எனவும் கூறுவர். இவர் திருமாலின் பெருமைகளை உணர்ந்து அடியார் திருப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். இவர் பாடிய பக்திப் பாக்கள் பெருமாள் திருமொழி என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளன. பாடமாக அமைந்த பாடல் ஐந்தாம் திருமொழியின் முதற் பாடலாகும். இப்பாடல் திருவித்துவக்கோட்டில் எழுந்தருளியுள்ள திருமாலின்மீது பாடப்பெற்றதாகும். இவரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு.

## III. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

சரணல்லால் - சரண் + அல்லால்; சரணில்லை - சரண் + இல்லை; மற்றவள்தன் - மற்று + அவள்தன்; போன்றிருந்தேனே - போன்று + இருந்தேனே.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

துயரம் - துன்பம்; தடாயேல் - தடுக்காவிட்டால்; சரண் - அடைக்கலம்; விரை - மணம்; பொழில் - சோலை; வித்துவக்கோடு - (சேரநாட்டில் உள்ள) திருவித்துவக் கோடு என்னும் ஊர்; அம்மானே - தாய் போன்றவனே; அரிசினம் - மிகுந்த கோபம்; ஈன்ற - பெற்றெடுத்த; அகற்றிடினும் - விலக்கினாலும்; அருள் - கருணை; குழவி - குழந்தை.

### இ. விளக்கவுரை :

பெற்ற தாய், கோபத்தால் குழந்தையை வெறுத்து விலக்கி ஒதுக்கினாலும் அக்குழந்தை தன் தாயின் பாசத்தைப் பெற விரும்பி அழும். அதுபோலத் தாம் வழிபடும் இறைவனாகிய திருமால் எத்துணை துன்பங்களைத் தந்தாலும், அவர் கருணையையே விரும்பி, அவரிடமே மீண்டும் மீண்டும் சரண் புகுவர் என்பது கருத்து.

## IV. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. திருமாலடியவர்களின் தொகை .......**

அ. பத்து ஆ. பன்னிரண்டு இ. அறுபத்து மூன்று

**2. 'உன் சரணல்லால் சரணில்லை' என்னும் தொடரில் 'சரண்' என்ற சொல் உணர்த்தும் பொருள் ......**

அ. வணங்குதல் ஆ. பணிதல்

இ. அடைக்கலம் வேண்டல்

3. **குலசேகராழ்வார் பாடிய பாசுரம் ..........**

அ. பெருமாள் திருமொழி ஆ. திருவியற் பா

இ. பெரிய திருமொழி

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

4. திருமால் அடியவரைக் குறிக்கும் பெயர் யாது? ஏன் அவ்வாறு கூறுகின்றனர்?
5. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள நான்கு பகுதிகளைக் குறிப்பிடுக.
6. தாய் - சேய் இயல்பாகக் குலசேகராழ்வார் கூறுவது யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

7. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பற்றிக் குறிப்பு எழுதுக.
8. வித்துவக்கோட்டு அம்மானிடம் குலசேகராழ்வார் வேண்டுவன யாவை?

**V. மொழித்திறன் வளர் பயிற்சி**

**எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் சேர்த்து எழுதுக.**

எ-டு: சரண் + அல்லால் - சரணல்லால்

1. சரண் + இல்லை -
2. திறன் + இலர் -
3. அரண் + இல்லை -

**VI. திறன்வளர் தொடர் பணி**

**எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் பிரித்து எழுதுக.**

எ-டு: அழுங்குழவி - அழும் + குழவி

1. தொழுங்கைகள் -
2. விழுங்கனி -
3. எழுங்கதிர் -

## இ. இயேசு நாதர்

சத்துருவை நேசிக்கும் தன்மை காட்டித்
தனிநிலையாம் இறையருளின் தயவைக் காட்டிச்
சுத்தமிலா அற்பர்களைத் தூர ஓட்டித்
தூய்மையதே இறையென்று துளங்கக் காட்டி
வித்தகமாய்ச் சீடருக்கு விளைவு காட்டி
விண்ணிடத்தும் மண்ணிடத்தும் விழிப்புக் காட்டி
எத்திசையும் இறையருளே காட்டிக் காட்டி
இன்பநிலை எய்திட்ட இயேசு வாழி!

**- பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்**

## I. ஆசிரியர் குறிப்பு

அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் மதுரை தியாகராசர் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். மேனிலைப் பள்ளியையும் கல்லூரியையும் நடத்த வள்ளியம்மாள் பெயரில் அறக் கட்டளை நிறுவியவர். பல கவிதை நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் எழுதியுள்ளார். அண்மைக் காலத்தில் புகழோடு வாழ்ந்து மறைந்தவர்.

## II. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

இறையருள் - இறை + அருள்; இறையென்று - இறை + என்று; மண்ணிடத்து - மண் + இடத்து; விண்ணிடத்து - விண் + இடத்து; சுத்தமிலா - சுத்தம் + இலா; இன்பநிலை - இன்பம் + நிலை.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

சத்துரு - பகைவன்; நேசிக்கும் - அன்பு செலுத்தும்; தனி நிலை - ஒப்பற்ற நிலை; தயவு - இரக்கம்; சுத்தம் - தூய்மை; அற்பர் - கீழானவர்; தூரம் - தொலைவு; துளங்க - விளக்கமாக; வித்தகம் - கல்வித் திறம்; சீடர் - மாணாக்கர்; விழிப்பு - எச்சரிக்கை.

### இ. விளக்கவுரை :

பகைவனையும் நேசித்து, இறைவனின் ஒப்பற்ற அருள் குணத்தைக் காட்டி, ஒழுக்கத் தூய்மை இல்லாதவர்களின் கீழ்மைக் குணத்தை விலக்கிய இறைவனது தூய தன்மையைத் தம் சீடர்களுக்கு உணர்த்தியவர் இயேசுநாதர். விண்ணிலும் மண்ணிலும் எச்சரிக்கையுடன் இருந்து, இறைவன் அருளைப் பெற்று இன்பநிலை அடையவேண்டுமென்று சாமர்த்தியமாக வழிகாட்டியவர் இயேசு நாதர் என்பதை விவரித்துள்ளார்.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. இயேசு நாதர் 'தூர ஓட்டி'யதாக ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது ........................**

அ. சத்துரு ஆ. அற்பர் இ. சீடர்

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

2. வழிபாட்டுப் பாடலில் இயேசு நாதரைப் பாடியவர் யார்?
3. சத்துருவை நேசிக்கும் இறையருள் எத்தகையது?
4. இயேசுநாதர் சீடருக்குக் காட்டியதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளது என்ன?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. அ.மு.ப. இயேசுநாதரின் இயல்புகளாகக் கூறியுள்ளவற்றை எழுதுக.

**IV. திறன் வளர் தொடர் பணி**

1. இயேசுநாதரின் வாழ்க்கையைக் கொண்டு ஒருவன் இன்பநிலை அடைய என்னென்ன செயல்களைச் செய்ய வேண்டுமெனக் கூறுக.

## ஈ. முகம்மது நபி

அரபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த மகம்மது நபியே போற்றி
தரையினில் பொதுமை மல்கிச் சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி! போற்றி!

**- திரு. வி.கலியாணசுந்தரனார்**

**I. ஆசிரியர் குறிப்பு :**

இப்பாடலைப் பாடியவர் 'தமிழ்த் தென்றல்' என அழைக்கப் பெறும் திரு.வி.கலியாணசுந்தரனார். இவர் சைதாப்பேட்டையை அடுத்த 'துள்ளம்' என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் விருத்தாசலம். தாயார் சின்னம்மாள். சுருக்கமாக இவரைத் திரு.வி.க.என அழைத்தனர். இவர் முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை முதலான உரைநடை நூல்களையும், பொதுமை வேட்டல், கிறிஸ்துவின் அருள் வேட்டல் முதலான செய்யுள் நூல்களையும் எழுதியுள்ளார். இவர் தொழிற்சங்கத் தலைவராகவும் செயல்பட்டார். நாட்டு விடுதலைக்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், மகளிர் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடு பட்டார். இவர் வாழ்ந்த காலம் 26.8.1883 - 17.9.1953.

**II. சொற்களஞ்சியம்**

**அ. சொற்களைப் பிரித்தறிக.**

கரவிலா - கரவு + இ(ல்)லா.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

ஆண்டவன் - இறைவன்; மரபு - பழைய வழக்கம்; போற்றி - புகழ்ந்து; பொதுமை - பொதுத் தன்மை; மல்கி - பெருகி; நேயம் - அன்பு; கரவு இலா - வஞ்சனை இல்லாத; மறை - வேதம்; கருணை - அருள் தன்மை.

**இ. விளக்கவுரை :**

அரபிய நாட்டில் தோன்றிய முகம்மது நபி 'இறைவன் ஒருவனே' என்பதை நிலைநாட்டியவர். உலகில் அனைவரும் சமம் என்பதை நிலைநிறுத்த வஞ்சனை இல்லாத வேதத்தைத் (குர் ஆன்) தந்தவர்.

## III. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'ஆண்டவன் ஒருவன்' என்னும் கொள்கையை நிலை நாட்டியவர் ............**

அ. இயேசுபிரான் ஆ. முகம்மது நபி

இ. புத்தபிரான்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

2. 'திரு.வி.க' என்னும் சுருக்கத்தை விரித்து எழுதுக.
3. திரு.வி.க. இயற்றிய நூல்கள் மூன்று கூறுக.
4. முகம்மது நபி எத்தகைய மரபினை வாழச் செய்தார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. முகம்மது நபியைத் திரு.வி.க. எவ்வாறு போற்றியுள்ளார்?
6. திரு.வி.க.பற்றி நீவிர் அறிவன யாவை?

## IV. மொழித்திறன் வளர் பயிற்சி

**எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் அடுக்குத் தொடர் மூன்று கூறுக.**

எ-டு: போற்றி போற்றி

1. ................ 2. ................ 3. ................

## V. திறன்வளர் தொடர் பணி

அ. இப்பாடலில் இறைவனைக் குறிக்க 'ஆண்டவன்' என்ற மதச் சார்பற்ற சொல் அமைந்துள்ளது. இதுபோல இறைவனைக் குறிக்கும் வேறு மூன்று சொற்களை எழுதுக.

1. ................ 2. ................ 3. ................

ஆ. 'தரையினில் பொதுமை மல்க' - இத்தொடரில் 'தரை' என்பது உலகத்தைக் குறிக்கிறது. இப்படி உலகைக் குறிக்கும் வேறு ஐந்து சொற்களைத் தெரிந்து எழுதுக.

1. ................ 3. ................ 5. ................

2. ................ 4. ................

# உரைநடைப் பகுதி

## 1. உலக உத்தமர் காந்தியடிகள்

**(பேரறிஞர் அண்ணா)**

இன்று உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள். நாடெங்கும் இந்நாள் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அவரவர் விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தம் அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்; அவரது திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ்பற்றிய பாடல்களை இசைத்தும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

'அவர் தூயவர்; நம் மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகனார்' என்பாரும், 'அவர் விடுதலை வீரர்; நம் நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர்' என்பாரும், 'அவர் வேதாந்தி; பழைய தத்துவங்கள் பலவற்றிற்குப் புதிய விளக்கம் அளித்தவர்,' என்பாரும், 'அவர் கிராம ராச்சியம் அமைத்திட முனைந்தவர்,' என்பாருமாய்ப் பலர் பலவாறு அவர் புகழ் பாடுகின்றனர். அவரிடம் அவரவர் கண்டவற்றைக்கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவர். அவர் காலத்தின் சின்னம்! ஓர் எழுச்சியின் அடையாளம்! ஒரு மறுமலர்ச்சியின் உருவம்!

அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றிபெற்று, மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்லர் அவர்; எல்லாத் துறைகளிலும் தம் முத்திரையைப் பொறித்துச் சென்றவர். எல்லாத் துறையினரும் 'எமக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார்; எமக்காகவே பணிபுரிந்தார்,' என்று சொந்தம் பாராட்டத்தக்க முறையிலே

அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருக்கின்றன. இன்று அவர் பிறந்த நாள், எல்லாத் துறையிலேயும் உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே.

மகான்கள், மாவீரர்கள் ஆகியவர்களின் பிறந்த நாள்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதில், பூசைகள் நடத்துவதில் வல்லவர்கள் நாம். ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ, எவருடைய திருநாமத்தைப் பாடுகிறோமோ, எவருடைய ஆற்றலைப் புகழ்ந்து பேசுகிறோமோ அவர் காட்டிய நெறியிலே நடக்கின்றோமா என்றால், 'இல்லை' என்ற விடையையே ஏக்கத்துடன் பெற இயல்கிறது.

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும் பிற நாள்களிலும், நம் எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். இந்நாள், அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமன்றி, அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட, உறுதி பூணும் நாளாகும். மாலையின் மாண்பு மணத்தில் இருக்கிறது! விளக்கின் பயன் ஒளியில் இருக்கிறது! அதுபோல, விழாக்களின் பயன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பிலேயே இருக்கிறது.

காந்தியடிகளின் பிறந்த நாள் நாமெல்லாரும் நற்கருத்தும் சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும். மகான்களையும் மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம். அவர்களைக் குறித்த அற்புதங்களை, மகிமைகளை - கதைகளாய் - கவிதைகளாய்ச் செய்து மகிழ்வதிலும் நாம் மிகமிக வல்லவர்கள்.

அவர் பிறந்த நாளன்று அவர் மகிமையை - அற்புதத்தைப் பேசுவது போதும் என்றும் இருந்துவிடாமல், அவர் காண விரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக்காட்டிய இலட்சியம், அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றை நினைவிலே கொண்டு அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேச வைத்தார்; உரிமை முழக்கமிடச் செய்தார்; 'படை பல வந்திடினும் தடை பல நேரிடினும், அஞ்சாதீர்!' என்றுரைத்தார்! அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாவப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார்; சிட்டுக் குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்; 'நம்மால் என்ன ஆகும்!' என்ற ஏக்கத்தை விரட்டினார்.

'நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்' என்ற உறுதி எழச் செய்தார்; போர் முகாம் அமைத்தன்று - எளிய குடில் அமைத்து; ஆத்திரம் ஊட்டி அன்று - அன்பினை ஊட்டி! மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்லர் அவர். காந்தியடிகள் நடத்திய அற்புதத்தை நாம் நம் கண்களாற் கண்டோம். அந்த அரையாடை மனிதர், கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட அற்புதம் வேறு என்ன இருக்க முடியும்? 'இவரா இந்தியாவின் தலைவர்?' என்று எள்ளி நகையாடியவர், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு, 'இவரல்லரோ தலைவர்!' என்று புகழ்ந்தனர். இந்நாட்டுக்கு மட்டுமன்றி, அடிமைத் தளையை உடைத்திட விரும்பும் எந்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று இன்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது 'இந்தியா என்றொரு நாடுண்டு! அஃது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக் காடு' என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டது. விடிவெள்ளி தோன்றுவதுபோலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது. ஆயினும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே "இந்தியா என்றொரு நாடுண்டு; அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு" என்று உலகம் அறிந்து கொள்ள வழிபிறந்தது. காந்தியடிகளின்

புகழொளி மூலமே உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற - விளைவுபற்றிய கவலையற்ற - போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளாலேதான் உண்டாக்க முடிந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய விதமாய் இல்லை. ஆனால், அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக் கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

அவரது பொதுப்பணியிலே கடுமையான ஒரு சொல், நேர்மையற்ற ஒரு செயல், ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை. அவரது சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு, இந்தியாவின் ஒளியையும் ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக் கூடிய அளவிற்குப் பரவிற்று. அவரது மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தார்கள். காந்தியடிகளோ, மண் குடிசையிலே தங்கினார். அது மதிப்பளிக்கக்கூடியது என்று எண்ணரினர் மன்னர் மன்னர்.

‘சுய ராச்சியம் ஓர் இலட்சியத்திற்கு வாய்ப்பு’ என்றே அவர் கருதினார். கேடுகளற்ற ஒரு தூய நாட்டையே அவர் காண விரும்பினார். கொலையும் களவும், சூதும் குடியும் நிரம்பிய இடம் நாடு அன்று; காடும் அன்று. காந்தியடிகள் இந்தியாவை மாண்புமிகு நாடாக்கிட விரும்பினார்; சூதற்ற - சுரண்டலற்ற - வகுப்பு பேதமற்ற - நாடாக்க விரும்பினார்.

‘காந்தியடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார்; நம்முள் இருக்கிறார்; நம்முடன் கலந்துவிட்டார்’ என்று எண்ணுதல் வேண்டும். ‘அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை; அவற்றை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம்’ என்று உறுதி பிறந்திட வேண்டும்.

மறைந்த காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடு வதன் பொருள் இதுவாகவே இருக்கவேண்டும். அவர் இறவாப்

புகழ் பெற்றார் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமன்று இது. 'அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள்; எனவே, அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணி புரிவோம்!' என்ற உறுதிபெற உரமூட்டும் நாள் இது. அவருடைய நாள்களில் அவர் குரல் கேட்டு, அயல் அரசு வெருண்டோடிற்று; ஆனால், இன்னும் ஓட்டப்பட வேண்டுபவை பல இருக்கின்றன.

பொய்ம்மையும் கயமையும் கல்லாமையும் இல்லாமையும் வகுப்புப் பித்தமும் வகுப்பு மாச்சரியமும் வெருண்டோட வேண்டும்; அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும் அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும் நம்முள் இன்று பிறந்திட வேண்டும். அதற்கே இன்று காந்தியடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். இதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கின்றன என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பது இருக்கக்கூடாது. எல்லாச் சமூகத்தினரும் இணைந்து வாழவேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்."

இதுவே உலக உத்தமர் காந்தியடிகளின் இலட்சியம் என்று பண்டித நேரு அவர்கள் கூறியதை இங்கு நினைவுபடுத்துகிறேன்.

**ஆசிரியர் :** சி.என். அண்ணாதுரை தமிழ்நாட்டில் முதலமைச்சராகத் திகழ்ந்தவர். இவரை மக்களனைவரும் 'அண்ணா' என்று அன்புடன் அழைத்தனர். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் இணையற்ற பேச்சாளர்; எழுத்தாளர்; மாற்றுக் கருத்துடையோரையும் மதித்திட்ட மாபெருந்தலைவர்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

நன்னாள் - நன்மை + நாள்; திருவுருவம் - திரு + உருவம்; உடைத்தெறிந்த - உடைத்து + எறிந்த; காட்டினாரில்லை - காட்டினார் + இல்லை; நமதென்பதறிந்தோம் - நமது + என்பது + அறிந்தோம்; நாடுண்டு - நாடு + உண்டு; புகழொளி - புகழ் + ஒளி; வெருண்டோட - வெருண்டு + ஓட.

**ஆ. அருஞ்சொற்பொருள் :**

காணிக்கை - வேண்டுதலின்படி விரும்பி அளிக்கும் பொருள்; மார்க்கம் - வழி; மாசு - குற்றம்; தளை - விலங்கு; சின்னம் - அடையாளம்; மாண்பு - பெருமை; இழைந்திடும் - கலந்திடும்; வல்லூறு - இராசாளி என்னும் பறவை; ஏக்கம் - ஒன்றை அடைய வேண்டுமென்ற பேராசை நிறை வேறாமை; முகாம் - செல்வழியில் கூடாரம் அடித்துத் தங்கும் இடம்; எள்ளி - இகழ்ந்து; விடிவெள்ளி - விடியற் காலையில் தோன்றும் விண்மீன்; மனோபாவம் - எண்ணம்.

**இ. சொல்லாட்சித்திறன் :**

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| வியந்து பாராட்ட | முத்திரை | அற்புதம் |
| புகழொளி | முழக்கம் | மனோபாவம் |

**II. பொருளுணர் திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **காந்தியடிகள் உடைத்தெறிந்தது ......**

அ. மார்க்கத்தின் மாசு ஆ. அடிமைத் தளை

இ. பழைய தத்துவம்

2. **எல்லாத் துறைகளிலும் முத்திரை பதித்த காந்தியடிகள் அரும்பெரும் வெற்றி பெற்றது ......**

அ. வாழ்க்கையில் ஆ. தொண்டில்

இ. அரசியலில்

3. **'விழாக்களின் பயன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பிலேயே இருக்கிறது' என்பதை விளக்க அண்ணா கையாண்டுள்ள உவமைகளில் ஒன்று .......**

அ. மணத்தின் மாண்பு மாலையில் இருப்பதுபோல

ஆ. ஒளியின் பயன் விளக்கில் இருப்பதுபோல்

இ. விளக்கின் பயன் ஒளியில் இருப்பதுபோல

4. **அண்ணாவின் கூற்றுப்படி நாம் எல்லாரும் நற்கருத்தையும் சீரிய செயலையும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைய உதவுவது ........**

அ. மகான்களின் அற்புதங்களைப் பேசுவது

ஆ. காந்தியடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடுவது

இ. மாவீரர்களின் மகிமைகளைப் பாடுவது

5. **காந்தியடிகள் மக்கள் மனத்தில் ஏற்படுத்திய எண்ணமாக அண்ணா குறிப்பது .......**

அ. படைவந்தால் தடைவரும்

ஆ. நாமிருக்கும் நாடு நமது

இ. சிட்டுக் குருவியால் வல்லூற்றை எதிர்க்க முடியும்

6. **'இவரல்லரோ தலைவர்' என்று புகழ்ந்தவர்கள் காந்தியடிகளை எவ்வாறு எள்ளி நகையாடியதாக அண்ணா குறிப்பிடுகிறார்?**

அ. அரையாடை மனிதர் ஆ. சிட்டுக்குருவி போன்றவர்

இ. இவரா இந்தியாவின் தலைவர்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

7. காந்தியடிகளை அண்ணா என்னென்னவாகக் குறிப்பிடுகிறார்?

8. நம்மைப் பற்றியும் நம் நாட்டைப் பற்றியும் அண்ணா கூறியுள்ளதென்ன?

9. 'இல்லை' என்ற விடையை ஏக்கத்துடன் பெறுவதற்கான காரணங்களாக அண்ணா குறிப்பிடுவன யாவை?

10. நாம் எவ்வெவற்றில் வல்லவர்கள் என அண்ணா கூறியுள்ளார்?

11. உலகம் இந்தியாவை இழித்தும் பழித்தும் பேசியது ஏன்? எவ்வாறு?

12. காந்தியடிகளின் அறப்போர் முறை குறித்து ஆய்வாளர் கூறியுள்ள கருத்து யாது?

13. மண் குடிசையில் தங்கியிருந்தாலும் காந்தியடிகளை உலகம் எவ்வாறு மதித்தது?

14. எவ்வுறுதியைப் பெற்று உரமூட்டும் நாளாகக் காந்தியடிகளின் பிறந்தநாள் விழா அமைதல் வேண்டும்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

15. காந்தியடிகள் பிறந்தநாளை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

16. காந்தியடிகளின் புகழை எவ்வெவ்வாறு பலரும் பாராட்டி வருவதாக அண்ணா கூறுகிறார்?

17. காந்தியடிகளின் பிறந்தநாளை எல்லாத் துறையினரும் கொண்டாடக் காரணம் என்ன?

18. காந்தியடிகளின் பிறந்தநாள் எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என அண்ணா கூறியுள்ளார்?

19. காந்தியடிகள் புரிந்த அற்புதங்களாக அண்ணா கூறியுள்ளவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

20. காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடும் மக்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டுமென அண்ணா கேட்டுக் கொள்கிறார்?

21. காந்தியடிகள் காணாத அற்புதமாகவும் நாம் கண்ட அற்புதமாகவும் அண்ணா கூறியுள்ளவற்றை எழுதுக.

22. காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபின் ஏற்பட்ட மாற்றங்களாக அண்ணா குறிப்பிட்டுள்ளன யாவை?

23. காந்தியடிகளின் பொதுப்பணி மற்றும் சேவையின் செல்வாக்கு குறித்து அண்ணா கூறியுள்ளவற்றை எழுதுக.

24. காந்தியடிகள் எத்தகைய இந்தியாவை உருவாக்க விரும்பினார்?

25. காந்தியடிகளின் பிறந்த நாளில் நாம் எத்தகைய உறுதியைப் பெற வேண்டுமென அண்ணா கூறுகிறார்?

26. காந்தியடிகளின் பிறந்தநாளைக் கொண்டாடுவதனால் நாம் அடைய வேண்டிய பயன்களாக அண்ணா கூறியுள்ளன யாவை?

27. காந்தியடிகளின் இலட்சியமாக மாமனிதர் நேரு கூறியுள்ள செய்தி யாது?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

### 1. கீழ் உள்ள தொடர்களைப் படிக்க.

அ. எல்லாத் துறையினரும் **காந்தியடிகள் எமக்காகவே வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார்** என்று சொந்தம் பாராட்டினர்.

நாம் அவர் **புகழ்பாடுவதில், பூசைகள் நடத்துவதில்** வல்லவர்கள்.

- இத்தொடர்களில் கருத்து, இரண்டு அடுக்குகளாகச் சொல்லப் பட்டுள்ளது.

ஆ. அவர் **காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவம்.**

- இத்தொடரில் கருத்து மூன்று அடுக்குகளாகக் கூறப்பட்டுள்ளது.

இவைபோன்று கீழ்உள்ள கருத்தை வலியுறுத்த இரண்டு அல்லது மூன்று அடுக்குகளாகத் தொடர்கள் அமைத்து எழுதுக.

1. மாணவர் நிலை குறித்து
2. நம் நாட்டு மக்கள் சிறப்பு குறித்து
3. மகாபலிபுரம் சிற்பம் குறித்து

2. **கீழுள்ள தொடர்களைப் படிக்க.**

'படை **பல** வந்திடினும் தடை **பல** நேரிடினும் அஞ்சாதீர்.

அவர் கட்டுரையில் **பல** பிழைகள் காணப்பட்டன.

மக்கள் **பலர்** போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

'பல, சில' என்னும் சொற்கள், அஃறிணைச் சொற்களோடு முன்னும் பின்னும் அமையலாம். ஆனால் உயர்திணைச் சொற்களோடு வரும்பொழுது, அச்சொற்களுக்குப் பின்னர் 'பலர், சிலர்' என அமைதல் வேண்டும் என்பதனை அறிக.

'பல, சில, பலர், சிலர்' என்னும் சொற்களைப் பயன்படுத்திக் கீழுள்ள தொடர்களை எழுதுக.

1. புத்தகங்கள் அழகாயிருந்தன.
2. மாணவர் பரிசு பெற்றனர்.
3. பழங்கள் சுவையாயிருந்தன.
4. வீரர் புண்பட்டனர்.

## IV. பிழைநீக்கி எழுதுக.

தமிழில் 'ல,' 'ள' ஒலிகள் ஏறத்தாழ ஒரே மாதிரியாக ஒலிக்கப்படுகின்றன. இவ்வாறு ஒலித்தல் தவறு. சரியாக ஒலித்தல் வேண்டும். எழுதும் பொழுது 'ள'வுக்கு 'ல' எழுதுவதால் பொருள் வேறுபடும். எனவே இவற்றைச் சரியாக ஒலிக்கவும், பொருள் அறிந்து பயன்படுத்தவும் அறிதல் வேண்டும்.

**அ. கீழ் உள்ள தொடர்களை ஒலித்துப் பழகுக.**

1. மீன்பிடிக்க உதவுவது **வலை.**
2. எலி வாழும் இடம் **வளை.**
3. ஆற்றில் வருவது **வெள்ளம்.**
4. ஆசையாய்த் தின்பது **வெல்லம்.**

**ஆ. கீழ் உள்ள சொற்களைச் சரியாக ஒலித்துப் பழகுக.**

| | |
|---|---|
| 1. தலை - தளை | 3. கலை - களை |
| 2. பல்லி - பள்ளி | 4. வலம் - வளம் |

**இவற்றைப் பொருள் வேறுபாடு விளங்கும்வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

## V. வல்லினம் மிகும் இடம் அறிந்து எழுதுக.

**வலிமிகுமிடம் - மிகாவிடம்**

வேலனைக் கண்டேன்.

கடைக்குச் சென்றேன்.

தேடித் தந்தான்.

தேடப் போனான்.

இத்தொடர்களை வாய்விட்டுப் படிக்கவும். 'க, ச, த, ப' மெய்யெழுத்துகள் (க், ச், த், ப்) இத்தொடர்களில் இயல்பாக மிகுந்து ஒலிப்பதை அறிக. இவ்வாறு மிகுந்து ஒலிப்பதை 'வலி மிகுதல்' என்பர். சில இடங்களில் இவை மிகுவது இல்லை.

அவன் நாடி துடிக்கிறது.

அவரை நாடிச் சென்றேன்.

இவ்விரு தொடர்களை வாய்விட்டுப் படிக்கும்போது முதல் தொடரில் (வலி) மிகாமையையும் இரண்டாம் தொடரில் (வலி) மிகுவதையும் அறியலாம். எனவே, இவற்றை அறிந்து பயன்படுத்த வேண்டும். அறியாது பயன்படுத்தினால் பொருள் வேறுபாடு ஏற்படலாம்.

இது ஒரு **தந்தப் பெட்டி.**

எனக்கு நண்பன் **தந்த பெட்டி.**

முதல் தொடரில் (தந்தப் பெட்டி) 'தந்தத்தால் ஆன பெட்டி' எனவும், இரண்டாம் தொடரில் (தந்த பெட்டி) 'கொடுத்த பெட்டி' எனவும் பொருள் தருவதை அறிக.

எனவே, நூல் வல்லார் 'வல்லினம் மிகுமிடம் - மிகாவிடம்' அறிந்து விதிகளை வகுத்துள்ளனர். அவ்விதிகளைத் தெரிந்து பயன்படுத்த வேண்டும்.

பெயர்ச்சொல்லோடு 'ஐ' உருபு சேர்ந்து வருகிறபொழுது வல்லினம் மிகும்.

எ-டு: **கண்ணன் + கண்டேன் - கண்ணனைக் கண்டேன்.**

இதே போன்று கீழுள்ள பெயர்களுடன் 'ஐ' உருபு சேர்த்துத் தொடர் அமைக்க.

1. நண்பன் + சந்தித்தேன்
2. கண் + திறந்தான்
3. அமைச்சர் + கண்டேன்
4. பரிசு + பெற்றான்

## VI. அகராதி காணும் பயிற்சி

### 1. உயிரெழுத்து வரிசை அறிக.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

**கீழுள்ள சொற்களை அகர வரிசையில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுக.**

ஈதல், உவப்பு, அன்பு, ஊசல், எருது, ஆலயம், ஐவர், ஏற்றம், ஒன்பது, இரவு, ஓசை, ஔடதம்.

2. **மெய்யெழுத்து வரிசை அறிக.**

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

**கீழுள்ள சொற்களை இரண்டாம் எழுத்து மெய்யெழுத்து வரிசையில் அமையும்படி ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுக.**

பம்பரம், பள்ளம், பற்று, பந்து, பச்சை, பட்டம், பக்கம், பண்பு, பங்கு, பஞ்சு, பத்தி, பப்பாளி, பல்லி, பன்னீர்.

## VII. திறன்வளர் தொடர்பணி

அ. காந்தியடிகள் மேற்கொண்ட பிற நாட்டுத் துணி வாங்காமை, உப்பு காய்ச்சுதல் போராட்டம் பற்றி ஐந்து ஐந்து வரிகள் எழுதுக.

ஆ. தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவினை யொட்டி 1.10.1967 அன்று வானொலியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்குப் பாடமாக அமைந்துள்ளது. இவ்வுரை முழுமையான நூலாகவும் வெளிவந்துள்ளது. பள்ளி நூலகத்திலோ, பொது நூலகத்திலோ, தனியார் நூலகத்திலோ அந்த நூலைத் தேடி எடுத்துப் படித்து உங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக் கொள்க.

## 2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக!

**(பத்மஸ்ரீ திரு.நெ.து.சுந்தரவடிவேலு)**

அன்பிற்குரிய தம்பிகளே! தங்கைகளே!

'மனம் சேர்ந்ததன் வண்ணமாகும்' என்று பெரியோர் சொல்கின்றனர். அது உண்மைதான் என்பதனை இன்று அனுபவத்தால் அறிகிறேன். இளமையும் எழிலும், ஊக்கமும் உறுதியும், வலிமையும் வாய்ப்பும் கொண்ட இளைஞர்களாகிய உங்களைக் கண்டு நானும் அத்தகைய நிலைகளை அடைந்துள்ள எண்ணத்தில் மகிழ்கிறேன்.

உங்கள் தேசிய இராணுவப்படை அணிவகுப்பைக் கண்டு உளம் மகிழ்ந்தேன். பெண்களுடைய உதவிப் படையும் அணிவகுத்து, ஆண்மைபெற்று நின்றதைக் கண்டேன். அப்போது "ஏறுபோல் நடையினராய்" வாழ வேண்டும் என்று பாரதி கண்ட கனவு செயலானதைக் கண்டு உளம் பூரித்தேன். எதிர்காலத்தில் அமையப்போகும் சமுதாயத்தில் எனக்குப் பெரியதொரு நம்பிக்கையும் ஏற்பட்டது. நம்பிக்கையால் விளைவது இன்பம் அல்லவா?

அணிவகுப்பிலே, கச்சிதமாக உடுத்தி, மிடுக்காக நடந்து, ஒழுங்காகச் செயலாற்றினீர்கள். இந்தக் கச்சிதமும் மிடுக்கும் ஒழுங்கும் அமைதியும் என்றும் உங்களிடம் இருக்கவேண்டும். ஆண்கள் போன்று, ஏறுபோன்ற நடையினைப் பெண்களும் பெற வேண்டும். இதனைப் பாரதியார்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

என்று அறிவுறுத்திச் சென்றுள்ளார். பெண்கள் நல்ல அறிவு பெற்று, நேரிய நெறி பெற்று, நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் பெற்று ஒழுகுவதால் எத்தகைய தவறும்

வராது என்பது உண்மை. இதனை உணர்ந்து நம் நாட்டுப் பெண்மணிகள் நல்வாழ்வு, உரிமை பெற்ற வாழ்வு, மனமொத்த வாழ்வு வாழ வேண்டும்.

உங்கள் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டேன். பலரும் பரிசு பெற்றிருக்கிறீர்கள். வெற்றி பெற்றதற்குரியதான பல கோப்பைகளைக் காணுகின்றேன். பாடுபட்டால் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுவார்கள். சில நேரத்தில், போட்டி போடுவதன் மூலம் பொறாமைக் காய்ச்சலும் அவதூறும் ஏற்படுவதுண்டு. அது விரும்பத்தகாத போட்டி; தாழ்வான போட்டி. ஆனால், உயர்வுக்குப் போடும் போட்டியில் காய்ச்சலுக்கு இடம் இல்லை. திறமையின் வளர்ச்சிக்குத்தான் இடம் உண்டு. வளர்ச்சிக்கு ஏற்படும் நல்ல போட்டி வேண்டும்.

ஒரு விளையாட்டு விழாவில் ஒரு மாணவன் கோலூன்றி உயரத் தாண்டலில் 9' 4'' தாண்டினான். 'அவனோடு யாரால் போட்டி போடமுடியும்' எனச் சளைத்துவிடவில்லை; பலர் போட்டி போட்டார்கள். அவனும் விடா முயற்சியோடு போட்டி போட்டான். இறுதியில் 9' 10'' தாண்டி வெற்றி பெற்றான். அவனோடு போட்டிபோட யாரும் முன்வந்திராவிடில் 'நானே ராசா' என்று இறுமாந்து அமர்ந்திருப்பான். 9' 4'' தாண்டிய அவனே, அடுத்த ஆண்டு 9' 2'' தாண்டும் நிலைக்கு வந்திருந்தாலும் வந்திருப்பான். இப்படியே தேய்ந்து கொண்டு போனாலும் போவான். போட்டி இருப்பது நல்லது. நல்லமுறையிலே, ஒழுங்கானமுறையிலே போட்டியிருந்தால் மனிதனுடைய ஆற்றல்கள் வளர்வதற்குத் தூண்டுகோலாக இருக்கும்.

வெற்றி பெற்றுவிட்டோம் என்று மட்டும் ஏமாந்து இருந்து விடாதீர்கள். 'வெற்றி' என்ற சொல்லிலே இடையிலிருக்கும் வல்லினமெய் போய்விட்டால் என்னவாகும்? 'வெறி'யாக மாறிவிடும். ஏமாந்து தன்னடக்கம் விட்டு, நிதானத்தை இழந்துவிட்டால் மனிதன் வெறிகொண்டவனாகி விடுகிறான். அந்த வெறி அவனுக்குத் தோல்வியை உண்டாக்கும்.

நீங்கள் பள்ளிக் கூடத்திலே பெறுகிற வெற்றி வாழ்க்கை முழுவதற்கும் வெற்றியாகவே இருக்கவேண்டும். உங்கட்கு வெற்றி ஏற்பட ஏற்பட அமைதியும் அடக்கமும் வளர வேண்டும்.

நாற்று நடும்போது 'நெற்பயிர் நிமிர்ந்து நிற்க வேண்டும், குத்திட்டு வளர வேண்டும்' என்று எதிர்பார்க்கிறோம். குத்திட்டு நிமிர்ந்து வளரவில்லையானால் 'நல்ல வளர்ச்சி யில்லையே' என்று கவல்கின்றான் உழவன். அதே பயிர் வளர்ந்து, பால்கட்டி, நல்ல கதிர்விட்ட பிறகு, பழுத்துப் படுக்கவேண்டும். நன்றாக விளைந்த கதிர்களையுடைய பயிர், நிறைய மணிபிடித்த கதிர்களையுடைய நெற்பயிர் அப்படித்தான் படுக்கும். அதன்படியேதான் நம் வாழ்வும், அறிவு வளரவளர, வெற்றி வரவர அடக்கமும் அமைதியும் தாழ்வும் பணிவும் ஏற்பட வேண்டும்.

தேர்ந்த கல்வி பெற்றவர்க்கு அடக்கம் இயற்கையானதுதான். அடக்கம் ஏற்படவில்லை யென்றால் அறிவு பெற்றும் பயனில்லை; வெற்றி பெற்றும் பயனில்லை. செருக்குக்கு இடம் கொடுத்தால் இறுதியில் அறியாமையும் தோல்வியுமே ஏற்படும் என்பதனை உங்கட்கு நினைவூட்டுகிறேன். வள்ளுவரும் இதனையேதான்,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்று தம் குறட்பாவிற் கூறி வலியுறுத்துகிறார். ஒழுக்கமும் கட்டுப்பாடும் தமிழரின் தனிச்சொத்து. அதனைப் போற்றிப் பாதுகாத்துப் பெருமை தாருங்கள். அப்போதுதான் கல்வியின் பயன் பெருகும்.

நமது அரசியலார் நம்முடைய கல்வி வளர்ச்சிக்குப் போதிய ஆதரவு கொடுத்துவருகிறார்கள். எல்லோரும் நல்ல கல்விபெற்று, ஆழ்ந்த கல்விபெற்று, முழுக் கல்விபெற்று, இந்நாட்டு மன்னர்களாக வளர வேண்டும். அப்போதுதான் அரசியலாரின் முயற்சி பயனளித்ததாகும்.

பள்ளிக்கூடங்கள் பல துறைக் கல்விக்கு இடமளிக்க வேண்டும். வரப்போகும் ஒன்றை முன்கூட்டியே அறியும் அறிவு பெற்றவர்கள் கவிஞர்கள். அவர்களுள் ஒருவரே பாரதியார். அவர்,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்று கூறிச் சென்றார். பள்ளிகளில் பலதுறைக் கல்வி மட்டும்

தந்தால் போதாது. கல்வி கற்கும் குழந்தைகளின் வயிற்றுக் கவலை போகச் சோறிட வேண்டும் என்கிறார். ஏன்? சோற்றுக் கவலை வந்துவிட்டால் எதனையும் செய்ய முடியாது. ஆகவே, சோறிட்டுப் பலகல்வி தரவேண்டும் என்கிறார்.

பிள்ளைகளின் ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ற கல்வி தர வேண்டும். ஏட்டுப் படிப்பு மட்டும் படிப்பாகாது. தொழிற் படிப்பும் படிப்பாகும். ஏட்டுப் படிப்புக்கு எவ்வளவு அறிவு வேண்டுமோ, அவ்வளவு அறிவு தொழிற் படிப்புக்கும் வேண்டும். அந்த அறிவையும் திறனையும் ஐம்பதில் பெறமுடியாது. இளமையிலேதான் பெறமுடியும். ஐந்திலேயே குழந்தைகள் அறிவுக்கும், ஊக்கத்திற்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற கல்வியைக் கற்க வேண்டும். இங்கே ''உழுகிற காலத்திலே ஊர் சுற்றிவிட்டு, அறுவடைக் காலத்தில் அரிவாள் கொண்டு வந்தால் என்ன கிடைக்கும்?'' என்ற பெரியவர்கள் பழமொழியை எண்ணிப்பார்த்தால், 'பருவத்தே பயிர் செய்யும்' பண்பு ஏற்பட்டு விடும். எதிர்காலத்தில் நல்ல செல்வம் உடையதாக இந்திய நாட்டை அமைக்க ஏட்டுப் படிப்பும் வேண்டும்; தொழிற்படிப்பும் வேண்டும். இவற்றைத்தான் பாரதியார் பலகல்வி என்று பாடுகிறார்.

பலதுறைக் கல்வி கற்றால்தான் எல்லோரும் தங்கள் கைகளையே நம்பிச் செயலாற்ற முடியும். அவர்களை அம்முறையிலே பயிற்றுவிக்கப் பெற்றோரும் மற்றோரும் ஆசிரியரும் பாடுபட வேண்டும். அதற்கு வேண்டுவது உள்ளத்தே உறுதிதான்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்னும் வள்ளுவர் வாக்கை நோக்குங்கள். நல்ல முறையில் நல்லனவற்றை எண்ணுங்கள்; எண்ணம் செயலாக வேண்டும் என்னும் உறுதிப்பாட்டினைக் கைக் கொள்ளுங்கள்; வெற்றி கிடைக்கும். எண்ணிச் செயலாற்றும் உறுதி பெற்று, இடன் அறிந்து, உரிய அறிவையும் காலத்தில் முயற்சியையும் செலுத்தினால், உலகத்தையே பெறவேண்டும் என்னும் எண்ணம் கொண்டாலும் வெற்றி பெறலாம். இதனைத்தான் நம் செந்நாப்போதார்,

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

என்று கூறினார்.

கற்ற கல்வியால் நல்ல பண்பாடு வந்தடைய வேண்டும். இல்லையென்றால் கல்வியால் பயனில்லை. பண்பற்ற கல்வி கல்வியாகாது. பண்பில்லாத அறிவு அறிவும் ஆகாது. படித்தவனிடம் வேற்றுமை தோன்றாது. 'இவன் தாழ்ந்தவன்; இவன் உயர்ந்தவன்' என்னும் எண்ணமும் வராது. பிறர்வாழத் தான்வாழ வேண்டும். தான் பெற்ற பொருளால் பிறரை வாழச் செய்ய வேண்டும். பிறர் துன்பம் கண்டவிடத்து அவர்கள் துன்பம் போக்கப் பாடுபட வேண்டும்.

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை."

என்னும் பொய்யாமொழிகள் மேற்கூறிய கருத்துகளை வலியுறுத்தும்.

**ஆசிரியர்** : நெ.து.சுந்தரவடிவேலு தமிழ்நாட்டின் பொதுக் கல்வி இயக்குநராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் விளங்கியவர். கல்வித் துறையில் பெரும்பணியாற்றியவர். சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

பகுத்துண்டு - பகுத்து + உண்டு; பல்லுயிர் - பல + உயிர்; ஆரிருள் - அருமை + இருள்; சாந்துணை - சாகும் + துணை.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

ஓம்புக - பாதுகாக்க; எழில் - அழகு; ஆண்மை - வீரம்; பூரித்தேன் - மகிழ்ந்தேன்; கச்சிதமாக - பொருத்தமாக; ஏறு - சிங்கம், காளை; நெறி - வழி; திறம்புவதில்லை - மாறுவதில்லை; அவதூறு - பழிச்சொல்; இறுமாந்து - செருக்குற்று; கவல்கின்றான் - வருந்துகின்றான்; அமரர் -

என்றும் வாழ்பவர்; உய்க்கும் - செலுத்தும்; திண்ணியர் - உறுதியுடையவர்; செந்நாப்போதார் - வள்ளுவர்; ஞாலம் - உலகம்.

**இ. சொல்லாட்சித்திறன் :**

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| மனமொத்து | முன்னேறு | போட்டி |
| வளரவளர | நினைவூட்டு | முயற்சி |

**II. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

**1. மனம் என்பது ....**

அ. சேர்ந்ததன் வண்ணமாகும்

ஆ. நம்பிக்கையின் விளைவு

இ. ஒழுங்கும் அமைதியும் உடையது

**2. வெற்றி பெற்றதற்குரிய அடையாளம் ......**

அ. போட்டியில் கலந்து கொள்ளுதல்

ஆ. பரிசுப் பொருள்களைப் பெறுதல்

இ. போட்டி போட்டு முன்னேறுவது

**3. நல்ல போட்டி என்பது .....**

அ. பரிசு பெற உதவுவது

ஆ. திறமையின் வளர்ச்சிக்கு உதவுவது

இ. அவதூறுக்கு இடமளிக்காதது

**4. அடக்கம் ஏற்படவில்லையென்றால் ....**

அ. அறிவும் வெற்றியும் பெற்றுப் பயனில்லை

ஆ. அறியாமையும் தோல்வியும் ஏற்படும்

இ. ஒழுக்கமும் கட்டுப்பாடும் சிதையும்

**5. வரக்கூடியதை முன்னரே அறியும் அறிவு பெற்றவர் என நெ. து. சுந்தரவடிவேலு குறிப்பிடுபவர்........**

அ. அரசியலார் ஆ. சோதிடர்

இ. கவிஞர்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகள் குறித்து நெ.து.சுந்தரவடிவேலு கூறியுள்ளன யாவை?

7. நம் நாட்டுப் பெண்கள் எத்தகைய வாழ்வு வாழ வேண்டுமென நெ.து சுந்தரவடிவேலு கூறியுள்ளார்?

8. எவற்றைப் பாதுகாத்தால் பயன் பெருகுமென மாணவர்களுக்கு நெ.து.சுந்தரவடிவேலு அறிவுரை கூறுகிறார்?

9. பலகல்வி பெறப் பெற்றோரும் மற்றோரும் ஏன் பாடுபட வேண்டும்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

10. இளைஞர்களைக் கண்டதால் தாம் பெற்ற மகிழ்ச்சி குறித்து நெ. து.சுந்தரவடிவேலு கூறியுள்ளது என்ன?

11. பாரதியின் கனவாகவும் அது செயலாவதாகவும் கூறியுள்ள நிகழ்ச்சி பற்றி எழுதுக.

12. பாரதி மகளிருக்கு அறிவுறுத்தியுள்ள செய்தி யாது?

13. போட்டியின் தேவை குறித்து நெ.து.சுந்தரவடிவேலு கூறியுள்ளது என்ன?

14. நல்ல போட்டி, முன்னேற உதவும் என்பதை நெ.து.சுந்தரவடிவேலு எவ்வாறு சான்றுடன் விளக்கியுள்ளார்?

15. 'வெறி' மனிதனுக்குத் தோல்வியைத் தரும் என்பதை நெ.து.சுந்தரவடிவேலு எவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்?

16. நெற் பயிரைச் சான்று காட்டி நெ.து.சுந்தரவடிவேலு விளக்கும் செய்தியை எழுதுக.

17. கல்வியின் பயன் பெருக அடக்கமே துணைபுரியும் என்பதை நெ.து.சுந்தரவடிவேலு எவ்வாறு விளக்கியுள்ளார்?

18. அரசியலார் முயற்சி குறித்து நெ.து.சு. கூறியுள்ளதென்ன?

19. இந்தப் பாரை உயர்த்தப் பாரதிகூறும் செய்தியாக நெ.து.சு. கூறியுள்ளது என்ன?

20. பல கல்வி குறித்து நெ.து.சு. அளித்துள்ள விளக்கம் யாது?

21. எண்ணமும், எண்ணிச் செயலாற்றும் முறையுமே வெற்றி பெற உதவும் என்பதை நெ.து. சுந்தரவடிவேலு எவ்வாறு விளக்கியுள்ளார்?

22. கல்வி கற்றதால் பெற வேண்டிய பயன்களாக நெ.து.சுந்தர வடிவேலு வலியுறுத்திக் கூறியுள்ளவற்றை எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**அ. கீழ் உள்ள எடுத்துக்காட்டுகளைப்போல் சொற்களைப் பிரித்து எழுதுக.**

எ-டு: பகுத்துண்டு - பகுத்து + உண்டு

திறம்புவதில்லை - திறம்புவது + இல்லை

1. உலகெலாம்
2. தொண்டாற்றி
3. என்றுரைத்தார்
4. இறுமாந்திருத்தல்

## IV. பிழைநீக்கி எழுத அறிக.

'ள', 'ழ' ஒலிகள் ஏறத்தாழ ஒரே மாதிரியாக ஒலிக்கப்படுகின்றன. அவ்வாறு ஒலித்தல் தவறு. சரியாக ஒலித்தல் வேண்டும். எழுதும்பொழுது 'ள'வுக்குப் பதில் 'ழ' எழுதுவதால் பொருள் வேறுபடும். எனவே, இவற்றைச் சரியாக ஒலிக்கவும், பொருள் அறிந்து பயன்படுத்தவும் அறிதல் வேண்டும்.

**அ. கீழுள்ள தொடர்களை ஒலித்துப் பழகுக.**

1. வேண்டாத செடி **களை.**
2. மூங்கிலைக் குறிப்பது **கழை.**
3. **அளித்தல்** என்றால் கொடுத்தல்.
4. **அழித்தல்** என்றால் இல்லாமற் செய்தல்.

**ஆ. கீழுள்ள சொற்களைச் சரியாக ஒலித்துப் பழகுக.**

1. விழை - விளை
2. இழை - இளை
3. கழி - களி
4. உழவு - உளவு

**இவற்றைப் பொருள் வேறுபாடு விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

## V. வல்லினம் மிகும் இடம் அறிந்து எழுதுக.

பெயர்ச்சொல்லோடு 'கு' உருபு சேர்ந்து வருகிறபொழுது வல்லினம் மிகும்.

எ-டு : கடை + போனேன் - கடைக்குப் போனேன்.

இதேபோன்று கீழுள்ள பெயர்களுடன் ‘கு’ உருபு சேர்த்துத் தொடர் அமைக்க.

1. கந்தன் + கொடுத்தேன் 3. செலவு + பணம்

2. கடை + சென்றான் 4. வேலன் + தந்தான்

## VI. அகராதி காணும் பயிற்சி

மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய்யெழுத்துகளை அறிக.

‘க் ங் ச் ஞ் த் ந் ப் ம் ய் வ்’ ஆகியவற்றுள் சில, பன்னிரண்டு உயிர்களோடும், சில குறிப்பிட்ட உயிர்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். இவை தவிர இப்போது வழக்கில் சில சொற்களில் ‘ர’, ‘ல’ வருக்கங்களை முதல் எழுத்தாகப் பயன்படுத்துகின்றனர்.

எ-கா : ரகசியம், ரசம், ராகம், ரூபாய், ரொட்டி. லட்டு, லாபம், லிங்கம், லீலை, லுங்கி.

‘ங்’ என்னும் எழுத்து அகரத்தோடு சேர்ந்து ‘ஙனம்’ என வரும், ‘ஙனம்’ தனியாக வராமல் ‘அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்’ எனச் சில எழுத்துகளோடு சேர்ந்து வரும்.

கீழ் உள்ள சொற்களை உயிர்மெய்யெழுத்து வரிசையில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுக.

மழை, வழங்கு, யவனர், சங்கு, நன்மை, கடல், தமிழ், ஞானம், பழம்.

## VII. திறன்வளர் தொடர்பணி.

‘வெற்றி’ என்பதில் நடுவெழுத்து நீக்க ‘வெறி’ என்னும் சொல் அமைகிறது. இதுபோன்று மூன்றெழுத்துச் சொற்கள் நான்கு எழுதி நடு எழுத்து நீக்கிப் புதுச்சொல்லாக்குக. அச்சொற்களை வாக்கியங்களில் அமைக்க.

1. .................. 2.................. 3.................. 4. ..................

# 3. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்

(பாவலர் ஆ.முத்துராமலிங்கம்)

**பாவாணர்**

'அடிகளார்' என்றால் தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளாரைக் குறிக்கும்; 'தமிழ்த் தென்றல்' என்றால் கொஞ்சும் தமிழால் நம்மை எழுச்சியூட்டிய தமிழ் முனிவர் திரு.வி. கலியாணசுந்தரனாரைக் குறிக்கும்; 'பாவேந்தர்' என்றால் புரட்சிப் பாக்களால் மக்களைத் தட்டியெழுப்பிய பாரதிதாசனைக் குறிக்கும். அதுபோலப் 'பாவாணர்' என்றால் 'உலகின் முதன் மொழி தமிழே' என்ற கருத்தை அழகுற நிலை நாட்டிய மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரையே குறிக்கும்.

**பெற்றோர்**

தேவநேயப் பாவாணர் ஆசிரியப் பணியில் சிறந்து விளங்கிய ஞானமுத்தருக்கும், பரிபூரணம் அம்மையாருக்கும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன் கோவிலில் பிறந்தார். இவர் 7.2.1902 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிறந்தார். இவர்தம் பெற்றோருக்கு மகளிர் அறுவர்; ஆடவர் நால்வர். அவருள் பத்தாம் மகவாகவும் நான்காம் மகனாகவும் பிறந்தவரே நம் தேவநேயர். இவர்தம் பெற்றோர் இவருக்கிட்ட பெயர் 'தேவநேசன்' என்பதாகும். இவர்தம் பெற்றோர் இவருடைய ஐந்தாம் அகவையிலேயே இயற்கையெய்தினர். இளமையில் வறுமையால் வாடிய பாவாணர் தம் தமக்கையார் அரவணைப்பில் வளர்ந்தார்.

**கல்வி**

முறம்பிலுள்ள சமயப் பரப்புத்துறை சார்ந்த பள்ளியில் இவர் தொடக்கக் கல்வி பயின்றார். தமக்கையாருடன் ஆம்பூர் சென்று அங்கிருந்த மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் சமயப் பரப்புத் துறை சார்ந்த நடுநிலைப் பள்ளியில் இவர் எட்டாம் வகுப்புவரை தேர்ச்சி பெற்றார். 'எங்கு' என்னும் துரைமகனாரின் கடனுதவி

பெற்றுப் பாளையங்கோட்டை திருச்சபை கழக உயர்நிலைப் பள்ளியில் இவர் பதினோராம் வகுப்புவரை பயின்று தேறினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதத் தேர்விலும், திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கப் புலவர் தேர்விலும், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்விலும் பாவாணர் வெற்றி பெற்றுச் சிறப்புற்றார். தனியே தேர்வெழுதிக் கீழைக்கலை இலக்கியத் தேர்வும், முதுகலைப் பட்டமும் இவர் பெற்றார். பாளையங்கோட்டை பள்ளியில் பயின்றபோது இவரது பாட்டெழுதும் ஆற்றலைக் கண்டு வியந்த இவர்தம் ஆசிரியர் மாசிலாமணி என்பார் 'தேவநேசக் கவிவாணர்' என்று இவருக்குப் பெயர் சூட்டினார். இவர் தூய தமிழில் 'தேவநேயப் பாவாணர்' என மாற்றிக் கொண்டார்.

**பணிகள்**

தாம் பயின்ற சீயோன்மலை எனப்படும் முறம்பிலுள்ள நடுநிலைப் பள்ளியில் இவர் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார், ஆம்பூர், திருவல்லிக்கேணி, பெரம்பூர், மன்னார்குடி, திருச்சி, மண்ணடி முதலான இடங்களில் இவர் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் சேலம் நகராட்சிக் கல்லூரியில் பன்னிரண்டு ஆண்டுக் காலம் இவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிப் பெருமை சேர்த்தார். இறுதியாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் 'திராவிடமொழி ஆராய்ச்சித்துறை' வாசகராக இவர் பணியமர்த்தம் பெற்றுத் தமிழில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்தார்.

**கொள்கைகள்**

'மாந்தன் பிறந்தகம் மறைந்த குமரிக் கண்டமே, அவர் பேசிய மொழி தமிழே, தமிழே உலக முதன் மொழி, தமிழே திராவிடத்திற்குத் தாய், தமிழே வடமொழிக்கு மூலம்' என்ற கொள்கைகளைக் கொண்ட பாவாணர் தம் வாணாள் முழுதும் பல்வேறு நூல்கள் எழுதியும் பேசியும் வந்தார். புரூட்சாலட் என்பதைப் 'பழக்கூட்டு' என்றும், ஐஸ்கிரீம் என்பதைப் 'பனிக்கூழ்' என்றும் சொல்லாக்கம் செய்தார். சாதகம் (ஜாதகம்) என்பதைப் 'பிறப்பியம்' என்பார்; பஞ்சாங்கம் என்பதை 'ஐந்திறம்' என்பார். இவ்வாறு ஏராளமான சொற்களை அழகு தமிழில்

வழங்கியவர் பாவாணர். 23 மொழிகளில் வேர்ச் சொல் காணும் பன்மொழி அறிஞராக விளங்கினார் இவர்.

**படைப்பாற்றல்**

தமிழே உயர்தனிச் செம்மொழி, தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் தமிழ் மரபுரை என 43 நூல்களும், தோராயமாக 200 கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

**செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி**

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநராக. இவர் 8.5.74 ஆம் நாள் பணியமர்த்தப் பெற்றார். சொற்கள் பிறக்கும் முறையை விளக்கும் சொற் பிறப்பியல் அகர முதலி தமிழக அரசின் உதவியோடு இவரால் தொடங்கப்பெற்று இன்று சில பகுதிகள் வெளிவந்துள்ளன. இதுவே பாவாணரின் பெருமைக்குக் கிடைத்த மிகப் பெரிய சான்றாகும்.

**வாழ்க்கை நிகழ்ச்சி**

ஒருமுறை பாவாணர் பால் வாங்கிக்கொண்டு தெருவில் வந்துகொண்டிருந்தார். எதிரே வந்த மிதிவண்டியோட்டி ஒருவர் இவர்மீது மோதியபோது பாலும் சிந்தியது. கால் கைகளில் சிறு காயங்களும் ஏற்பட்டன. மிதிவண்டியோட்டி ''ஐயா மன்னித்துக் கொள்க'' என்றார். ''மன்னிப்பு உருதுச் சொல். 'பொறுத்துக் கொள்க' என்று தமிழில் சொல்லுங்கள்'' என்றார். அவரும் அவ்வாறே சொன்னார். ''போம்! பொறுத்தோம்'' என்றார் பாவாணர். இடர்ப்பட்ட போதிலும் சொல்லாய்வை இமைப்பொழுதிலும் மறக்காத விந்தை மாந்தரே பாவாணர்.

**பண்பு வளம்**

''எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு'' என்று கூறிய தன்மானம்மிக்க பாவாணரின் உறுதியுரை நம்மை வியக்க வைக்கிறதல்லவா? வறுமையில் வாடினாலும் கையில் பணம் கிடைத்தால் நூல்களே வாங்குவார். புலமைச் செருக்கில்லாமல் மிகவும் எளிமையான

வாழ்வு வாழ்ந்தவர். அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றியுணர்வு மிக்கவர். 'வேலாயுதம் தந்த 442 உருபா எனக்குப் புதையலாகத் தோன்றியது' எனப் போற்றுவார். சிறுசிறு உதவிகள் செய்தோரையும் போற்றிப் போற்றிப் புகழும் இயல்பினர்; இசையில் மிகுந்த புலமை மிக்கவர். ஆராய்ச்சியில் இமயத்தின் உச்சி; பழகுவதில் மழலைக் குழந்தை; உளுந்து வடை, இஞ்சி முரப்பு உண்பதில் இவருக்கு விருப்பம் மிகுதி; கண்ணொளி குன்றியபோதும், தளர்நடை வந்தபோதும் தமிழாராய்ச்சியை நெகிழவிடாத தமிழின் வடிவம் இவர். "பத்து உருபா இருந்திருந்தால் என் மனைவியை இன்னியங்கியில் கொண்டு சென்று பிழைக்க வைத்திருப்பேன்" என்பதும் "உருபா ஐந்து அனுப்பி வைத்தால் செந்தமிழ்ச் செல்விக்கு ஒரு சிறந்த கட்டுரையை அனுப்பி வைப்பேன்" என்பதும், இவர்தம் வறுமையை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

**பாவாணருக்குப் பட்டங்கள்**

தமிழக அரசு இவருக்கு வழங்கிய 'செந்தமிழ்ச் செல்வர்,' குன்றக்குடி அடிகளார் வழங்கிய 'செந்தமிழ் ஞாயிறு,' மதுரைத் தமிழ்க் காப்புக் கழகம் வழங்கிய 'தமிழ்ப் பெருங்காவலர்,' தென்மொழி வழங்கிய 'மொழி ஞாயிறு' போன்ற பட்டங்களும், 174 சிறப்புப் பெயர்களும் உண்டு.

**பெருமைகள்**

இவர் பெயரால் தேவநேயப் பாவாணர் நூலகம் சென்னை அண்ணாசாலையில் விளங்கி வருகிறது. இவர் படித்த, பணியாற்றிய இராசபாளையத்திற்கு அண்மையிலுள்ள முறம்பில் இவர் நினைவாகப் பாவாணர் கோட்டம், முழுவுருவச் சிலை, நூலகம் ஆகியவை அமைக்கப்பெற்றுப் பாவாணரின் புகழ் பேசும் மையமாக விளங்குவது போற்றத் தக்கதாகும். 5.1.81 ஆம் நாள் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது 'மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்போது நெஞ்சுவலி ஏற்பட்டு மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பெற்றார். பின்னர் இவர் 15.1.81ஆம் நாள் இரவு 12.30 மணியளவில் பேரா இயற்கை எய்தினார்.

**பாவாணரே பேசுகிறார்**

"தமிழர் தொன்மையை உலகிற்கு அளித்தவர் கால்டுவெல் பெருமகனார்; தனித் தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன்" என்பார் பாவாணர். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

**ஆசிரியர் :** ஆ. முத்துராமலிங்கம் கல்விப் பணியில் தமிழாசிரியராக, மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பொறுப்பு வகித்தவர். பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி இயக்ககத்தின் பதிப்பாசிரியர். பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

எழுச்சியூட்டி - எழுச்சி + ஊட்டி; தட்டியெழுப்பிய - தட்டி + எழுப்பிய; இவருக்கிட்ட - இவருக்கு + இட்ட; இயற்கை யெய்தினார் - இயற்கை + எய்தினார்; வண்டியோட்டி - வண்டி + ஓட்டி; சொல்லாய்வை - சொல் + ஆய்வை; வாணாள் - வாழ் + நாள்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

அரவணைப்பு - அன்பான பாதுகாப்பு; பணி - வேலை; அகவை - வயது; வாணாள் - ஆயுள்.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களைப் பொருள் விளங்கும்வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

சான்று ஆராய்ச்சி அரவணைப்பு

அகவை ஆற்றல் செருக்கு

### ஈ. விளக்கவுரை :

பஞ்சாங்கம் - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து பிரிவுகளுடைய காலக் குறிப்பு நூல்.

ஜாதகம் - பிறப்பியம், ஒருவன் பிறந்த நேரத்தில் கோள்களின் திசையைக் கணக்கிட்டு வாழ்நாள் பலன் கூறும் கலை.

**II. பொருளுணர்திறன் பயிற்சி**

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

**1. 'பாவேந்தர்' என்னும் சிறப்புப் பெயர் கொண்டவர்........**

அ. திரு.வி.க.

ஆ. மறைமலையடிகள்

இ. பாரதிதாசன்

**2. பாவாணருடைய தந்தை இவருடைய ஐந்தாம் அகவையிலேயே இயற்கையெய்தினார். இளமையில் வறுமையில் வாடிய பாவாணர் தம் தமக்கையார் அரவணைப்பில் வளர்ந்தார். - இப்பகுதியில் உள்ள மரபுத் தொடர் ................**

அ. ஐந்தாம் அகவை

ஆ. இயற்கையெய்தினார்

இ. இளமையில் வறுமை

**3. பாவாணரின் வாழ்க்கை நிகழ்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எது தவறாக உள்ளது?**

அ. 12ஆம் வகுப்புவரை திருச்சபைப் பள்ளி ஒன்றில் படித்தார்

ஆ. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதத் தேர்வில் தேறினார்

இ. தென்னிந்திய தமிழ்ச் சங்கப் புலவர் தேர்வில் தேறினார்

**4. தேவநேயப் பாவாணர் நினைவாகச் சென்னையில் அமைந்துள்ளது .....**

அ. நூலகம் ஆ. கோட்டம் இ. சிலை

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

5. தேவநேயப் பாவாணரின் பெற்றோர் யார்?
6. பாவாணர் எங்குத் தொடக்கக் கல்வி பயின்றார்?
7. இறுதியாகப் பாவாணர் பணியாற்றிய பல்கலைக் கழகம் எது?
8. தமிழக அரசு பாவாணருக்கு வழங்கிய பட்டங்கள் யாவை?
9. பாவாணர் கோட்டம் எங்குள்ளது?
10. பாவாணர் மறைவு எப்போது எங்கு நிகழ்ந்தது?
11. பாவாணர் எப்போது அகர முதலித் திட்டத்துக்கு இயக்குநரானார்?
12. பாவாணரது இறுதி விருப்பங்கள் இரண்டனை எழுதுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

13. மறைமலையடிகளார், திரு.வி.க., பாரதிதாசன் ஆகியோர் எவ்வாறு போற்றப்படுகின்றனர்?

14. தேவநேயர் எங்கெங்குப் பணியாற்றினார் என்பதனைக் குறிப்பிடுக.

15. பாவாணரின் கொள்கைகள் யாவை?

16. தேவநேயர் எழுதிய நூல்களைப் பற்றிக் குறிப்பிடுக.

17. தேவநேயரின் பண்புகளைப் பற்றி எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

கீழ் உள்ள வினைப் பகுதிகளை, எடுத்துக்காட்டைப் போல் சரியான எச்சங்களாக எழுதித் தொடர்கள் அமைக்க.

| வினைப்பகுதி | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|
| எ-டு: எழுது | **எழுதி** முடித்தார் | **எழுதிய** நூல்கள் |
| 1. ஓடு | ...... சென்றான் | ....... சிறுவன் |
| 2. வா | ...... கண்டேன் | ....... குதிரை |
| 3. படி | ...... முடித்தான் | ....... பாடம் |
| 4. தேடு | ....... பார்த்தான் | ....... பொருள் |

## IV. பிழை நீக்கி எழுத அறிக.

ன, ண, ர, ற - எழுத்துகளைப் பயன்படுத்தும்பொழுது சொல்லின் பொருளுக்கேற்பப் பயன்படுத்த வேண்டும். ஒன்றைப் பயன்படுத்த வேண்டிய இடத்தில் மற்றொன்றைப் பயன்படுத்தினால் பொருள் வேறுபடும்.

**அ. கீழுள்ள தொடர்களை ஒலித்துப் பழகுக.**

1. உள்ளம் என்பது **மனம்.**
2. பூவால் பெறுவது **மணம்.**
3. ஆற்றின் ஓரம் **கரை.**
4. ஆடையில் படிவது **கறை.**

**அ. கீழுள்ள சொற்களைச் சரியாக ஒலித்துப் பழகுக. இவற்றைப் பொருள் விளக்கும்வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. தன்மை - தண்மை
2. கரி - கறி
3. அன்னம் - அண்ணம்
4. ஏரி - ஏறி

## V. வல்லினம் மிகும் இடம் அறிந்து எழுதுக.

அகர ஈற்று வினையெச்சத்தின்பின் வல்லினம் மிகும்.

எ-டு : பேசு - பேச + சென்றான் - பேசச் சென்றான்.

காண் - காண + சென்றான் - காணச் சென்றான்.

**கீழ் உள்ள வினைப் பகுதிகளை அகர ஈற்று வினையெச்சங்களாக்கித் தொடர் அமைக்க.**

1. விளையாடு - விளையாட + சென்றான் ...............
2. வா - வர + கண்டேன் .......................
3. தேடு - தேட + சொல்கிறான் ..................
4. ஓடு - ஓட + பார்த்தான் .................

## VI. அகராதி காணும் பயிற்சி

**க, ச, ஞ, த வருக்கங்களில் தொடங்கும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

குடம், சிங்கம், தொங்கல், ஞெகிழி, சுண்ணம், ஞாலம், திங்கள், ஞாயிறு, சக்கரம், தாவரம், செந்தமிழ், கொம்பு, கிழக்கு, தோற்றம், கேள்வி, ஞமலி.

## VII. திறன்வளர் தொடர் பணி

இப்பாடத்தில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பிறமொழிச் சொல்லுக்குத் தனித்தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதே போன்று கீழுள்ள சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்கள் அறிக.

1. கிரைண்டர் 3. மிக்ஸி 5. டெலிவிஷன்

2. டெலிபோன் 4. செல்போன்

# 4. சிற்றிலக்கியங்கள்

(பேராசிரியர் டாக்டர் இரா.கு.நாகு)

தமிழ்மொழியில் காலங்கள்தோறும் புதுவகையான இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. காலத்தின் தேவைக்கேற்பப் புதுப்புது இலக்கிய வகை தோன்றும்; அவை செல்வாக்குப் பெறும்; அவ்வாறு தோன்றுவதும் செல்வாக்குப் பெறுவதும் இயற்கை நியதியாகும்.

சங்ககாலத்தில் திணைவகை இலக்கியம் தோன்றியது. சங்கம் மருவிய காலத்தில் நீதி இலக்கியம் தோன்றிச் செல்வாக்குப் பெற்றது. அதற்குப் பின்னர், பக்தி இலக்கியவகை வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. அதனைத் தொடர்ந்து சிற்றிலக்கியவகை தோற்றம் பெற்றது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியவகைஇலக்கியம் சோழர் காலத்தில் செல்வாக்கு பெற்றது. இக்காலத்திலும் பல்வகை இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

சிற்றிலக்கியம் என்பதனைப் 'பிரபந்தம்' என்றும் அழைப்பர். கதைத் தலைவனின் வாழ்க்கையின் முழுமையைப் பாடியது காப்பியம். ஒருவரின் வாழ்க்கையின் ஒரு சில பகுதிகளை விரிவாக்கிப் பாடியது சிற்றிலக்கியம். இலக்கியச் சுவையில் காப்பியத்துக்கு இணையாகக் கருதப்பெறுவது சிற்றிலக்கியமாகும்.

சிற்றிலக்கியங்கள் பழங்காலந்தொட்டே பாடப்பெற்று வந்துள்ளன. சங்க காலத்தில் ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கியம் பாடப்பெற்றது. பக்திக் காலத்தில் பதிகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், பரணி, பள்ளு என்னும் சிற்றிலக்கிய வகைகள் பாடப்பெற்றன. பக்திக் காலந் தொடங்கி இன்று வரையிலும் பலவகைச் சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன.

தமிழில் 96 வகைச் சிற்றிலக்கியங்கள் உள்ளன என்பர். தொண்ணூற்று ஆறுக்கும் மேற்பட்டுச் சிற்றிலக்கிய வகைகள்

இன்று உள்ளன. பாட்டியல் நூல்களில் சிற்றிலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறும் இலக்கண விதிகள் உள்ளன.

'பதிகம்' என்பது ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள் பாடுவது. 'சதகம்' என்பது ஒரு பொருளைக் குறித்து நூறு செய்யுள் பாடுவது.

'அந்தாதி' என்பதை 'அந்தம் + ஆதி' எனப் பிரிக்கலாம். அந்தம் ஆதியாகத் தொடுப்பது அந்தாதியாகும். அதாவது ஒரு செய்யுளின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதனைத் தொடர்ந்து வரும் செய்யுளின் முதலாக அமையும். அவ்வாறு நூறு வெண்பாக்கள் பாடுவதை அந்தாதி இலக்கியம் என்றனர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் பாடியவை அந்தாதி வகை இலக்கியமாகும். காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி பாடினார். பல புலவர்கள் அந்தாதி இலக்கியம் பாடியுள்ளனர். வெண்பா யாப்பில் அந்தாதி பாட வேண்டும் என்பது விதி. அவ்விதியை மீறிப் பிற்காலத்தில் கலித் துறை, விருத்தம் முதலான பாவினங்களிலும் பாடியுள்ளனர்.

'உலா' என்பது ஒரு வகைச் சிற்றிலக்கியம் ஆகும். ஒரு தலைவன் வீதியில் உலா வருவான். அவனைப் பலரும் பார்த்து மகிழ்வர். உலாவரும் அவனைப் பார்த்த மகளிர் சிலர், அவன் மீது காதல் கொள்வர். அவன் சென்றபின்பு அவனையே நினைந்து அம்மகளிர் காதல் வயப்பட்டு வருந்துவதாகச் செய்யப்பெறும் இலக்கிய வகையை உலாப் பிரபந்தம் என்பர். அவ்வாறு காதல் வயப்பட்டு வருந்துபவர் ஏழு பருவத்துப் பெண்டிராவர்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழு பருவத்தினராவர். ஐந்து வயதுக்கு மேல் ஏழு வயதுவரை உள்ளவர் பேதை; எட்டு முதல் பதினோரு வயது வரை உள்ளவர் 'பெதும்பை'. பன்னிரண்டு பதின்மூன்று வயதுடையவர் மங்கை. பதினான்கு முதல் பத்தொன்பது வயது வரை உள்ளவர் மடந்தை. இருபது முதல் இருபத்தைந்து வயது வரை உள்ளவர் அரிவை. இருபத்தாறு முதல் முப்பத்தொன்று வயதுவரை உள்ளவர் தெரிவை. முப்பத்திரண்டுக்குமேல் நாற்பது வயது வரை உள்ளவர் பேரிளம் பெண். இவ்வாறு ஏழு வகையினராவர்.

உலாவரும் தலைவன் இறைவனாகவோ மன்னனாகவோ ஒப்பற்றதோர் தலைவனாகவோ இருத்தல் வேண்டும். தமிழில் முதன் முதல் 'உலா' இலக்கியத்தைப் பாடியவர் சேரமான் பெருமாள் நாயனார் ஆவார். அவர் எழுதிய நூலுக்கு 'ஆதி உலா' அல்லது 'ஞான உலா' என்பது பெயர். அந்நூலில் உலாவரும் தலைவர் சிவபிரான் ஆவார். 'உலா' இலக்கிய வகையைப் பலர் பாடியிருப்பினும் ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலா சிறப்பானது எனப் புலவர்கள் பாராட்டுகின்றனர்.

தமிழிலுள்ள சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழ் மிகச் சிறந்த ஒன்றாகும். தெய்வத்தையோ அரசனையோ ஒப்பற்ற பெரியார் ஒருவரையோ பிள்ளைப் பருவத்தில் வைத்துப் பாடப்பெறுவது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தமாகும்.

பிள்ளை பிறந்து மூன்றாம் திங்கள் தொடங்கி இருபத்தோராம் திங்கள் முடியவுள்ள காலப் பகுதியைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துப் பாடுவர். பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தங்கள் பாடுவர்.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை என்பன அப்பத்துப் பருவங்கள். மேற்குறித்த பத்துப் பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரியன. சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல், நீராடல் ஆகியவற்றுள் எவையேனும் மூன்றைச் சேர்த்துப் பாடுவது பெண்பாற் பிள்ளைத் தமிழாகும்.

கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய பெரியாழ்வார்தான் இந்த இலக்கிய வகைக்கு வித்தூன்றியவர். ஒட்டக்கூத்தர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் இந்த இலக்கிய வகையின் முதல் நூலாகும். குமரகுருபரர் பாடியுள்ள மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழும் முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத் தமிழும் பகழிக்கூத்தர் பாடியுள்ள திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழும் சிவஞான முனிவரின் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் இவ்வகை இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

பலவகை மலர்களைக் கோத்துக் கதம்பம் கட்டுவது போலப் பலவகைப் பாக்களையும் பாவினங்களையும் கொண்டு செய்யப்பெறும் இலக்கிய வகையைக் கலம்பகம் என்பர்.

கலம்பகத்திற்குப் பதினெட்டு உறுப்புகள் உண்டு. அகப்பொருளும் புறப்பொருளும் அமையப் பதினெட்டு உறுப்புகளால் செய்யப்பெறும் இலக்கிய வடிவந்தான் கலம்பகமாகும். தமிழில் எழுந்த முதல் கலம்பகம், நந்திக் கலம்பகமாகும். குமரகுருபரர் 'காசிக் கலம்பகம்' பாடினார்; இரட்டைப் புலவர்கள் 'தில்லைக் கலம்பகம்' பாடினர். சிவப்பிரகாசர் 'திருவெங்கைக் கலம்பகம்' பாடினார். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திருவரங்கக் கலம்பகம்' பாடினார். இவ்வாறு பலரும் கலம்பகம் பாடியுள்ளனர்.

'பரணி' என்பதும் மிகச்சிறந்த சிற்றிலக்கிய வகையாகும். போர்த் தெய்வமான காளி (கொற்றவை) பேய்களோடு பரணி நாளில் போர்க் களத்தில் கூழ் சமைத்துச் சாப்பிடுவதும் ஆடுவதுமாக அமைக்கப்பெறும் இலக்கிய வகை பரணியாகும்.

போர்க் களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வெற்றி வீரனுக்குத்தான் பரணி பாடப்பெறும். போரில் தோற்றவன் பெயர் நூலுக்குச் சூட்டப்பெறும். கலிங்கப் போரில் முதல் குலோத்துங்கன் பெற்ற வெற்றியைக் குறித்துப் பாடப்பெற்றதுதான் கலிங்கத்துப்பரணி. முதல் பரணி இலக்கியம் கலிங்கத்துப் பரணியாகும். அதனைப் பாடியவர் செயங்கொண்டார். கலித்தாழிசை என்னும் பாவினத்தால் அப்பரணி இலக்கியம் பாடப்பெற்றுள்ளது. தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி, மோகவதைப் பரணி என்னும் பரணி இலக்கியங்கள் பல தமிழில் உள்ளன.

பள்ளமான வயல்வெளிகளில் உழவுத் தொழில் செய்பவரைப் பற்றிய பள்ளும், குறி கூறி வாழ்க்கை நடத்தும் பெண்டிரைச் சார்ந்தோர் பற்றிய குறவஞ்சியும், காதல் வயப்பட்டோர் தம் காதலர்க்குப் பறவை, வண்டு முதலானவற்றைத் தூது விடுவதுபோல் பாடப்பெறும் தூதும் சிறந்த சிற்றிலக்கிய வகைகளுள் அடங்கும். பள்ளு வகைக்கு முக்கூடற் பள்ளையும் குறவஞ்சி வகைக்குத் திருக்குற்றாலக்

குறவஞ்சியையும் தூதுவகைக்குத் தமிழ்விடு தூதையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பது போலச் சிற்றிலக்கியமேயானாலும் அவற்றின் இலக்கியத் தரம் குறையாது எனலாம்.

**ஆசிரியர் :** முனைவர் இரா.கு.நாகு, சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

பாட்டியல் - பாட்டு + இயல்; பாவினங்கள் - பா + இனங்கள்; பரணியாகும் - பரணி + ஆகும்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

இணையாக - ஒத்ததாக; கருதப்பெறுவது - எண்ணப் பெறுவது; திங்கள் - மாதம்; வாராணை - வருகை.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| செல்வாக்கு | இணையாக | பாராட்டு |
| குறிப்பிடத்தக்க | இவ்வாறு | சிறப்பானது |

### ஈ. விளக்கவுரை :

**திணை வகை :** அகத்திணை (அகப் பொருள்), புறத்திணை (புறப் பொருள்) நூல்கள்.

**நீதி இலக்கியம் :** திருக்குறள், நல்வழி, நீதிநெறி விளக்கம் முதலான நூல்கள்.

**பக்தி இலக்கியம் :** தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலான நூல்கள்.

**காப்பிய வகை :** சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான நூல்கள்.

**ஆற்றுப்படை :** பரிசு பெற்றவன் ஒருவன் மற்றொருவனைத் தான் பரிசு பெற்ற வள்ளல் அல்லது மன்னரிடம் செல்ல வழிப்படுத்துவதாகப் பாடப் பெறும் நூல். எ-டு: சிறுபாணாற்றுப்படை.

**பாட்டியல் :** வெண்பா, ஆசிரியப்பா முதலான பாடல் வகைகளின் அமைப்பு இயல்புகளை விரித்துக் கூறும் நூல்.

**காரைக்காலம்மையார் :** சிவனை வணங்கி உயர்நிலை அடைந்த அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் புனிதவதியார்.

**ஆழ்வார் :** திருமாலை வழிபட்டு உயர்நிலை அடைந்தவர். ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர்.

**தாழிசை, துறை, விருத்தம் :** பா இனம் என்று குறிக்கப் பெறும்.

**தூது :** ஒருவரிடம் செய்தி சொல்லுவதற்காக மான், மயில், கிளி முதலானவற்றுள் ஒன்றைத் தூது அனுப்புவதாகப் பாடப்படும் சிற்றலக்கியம்.

## II. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. திருவெங்கைக் கலம்பகம் நூலை இயற்றியவர் ..........
2. கலம்பகத்தில் ........... உறுப்புகள் உண்டு.
3. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் நூலை இயற்றியவர் ........
4. பிள்ளைத் தமிழ் நூல்களில் ................ பருவங்கள் அமைந்திருக்கும்.

**ஆ. பொருத்தமான விடையினைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

**5. கீழுள்ளனவற்றுள் தவறான தொடர் எது?**

அ. பதிகம் என்பது பத்துச் செய்யுள்கள் கொண்டது

ஆ. சதகம் என்பது நூறு செய்யுள்கள் கொண்டது

இ. அந்தாதி என்பது நூற்றுக்கு மேற்பட்ட செய்யுள்கள் கொண்டது

**6. கீழுள்ளனவற்றுள் எது ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கு மட்டுமே உரிய பருவம்?**

அ. சப்பாணி ஆ. சிற்றில்

இ. தால்

**7. பிள்ளைத்தமிழ் இலக்கியம் தோன்ற வழிகாட்டியவராகக் கருதப்படுபவர் .........**

அ. சேரமான் பெருமாள் நாயனார் ஆ. சேக்கிழார்

இ. பெரியாழ்வார்

8. **கீழுள்ளனவற்றுள் எது கதைத் தலைவரின் பெயரைப் பெறாத இலக்கியம்?**

அ. தூது ஆ. உலா இ. பரணி

**இ. பொருத்துக.**

| **நூல்** | **ஆசிரியர்** |
|---|---|
| 9. மூவருலா | அ. செயங்கொண்டார் |
| 10. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | ஆ. திரிகூடராசப்பக் கவிராயர் |
| 11. கலிங்கத்துப் பரணி | இ. ஒட்டக்கூத்தர் |
| 12. திருக்குற்றாலக் குறவஞ்சி | ஈ. பகழிக்கூத்தர் |
| | உ. குமரகுருபரர் |

**ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

13 சிற்றிலக்கியம் என்றால் என்ன?

14. அந்தாதி என்பதன் பொருள் யாது?

15. உலாப் பிரபந்தம் பற்றி எழுதுக.

16. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் பாடியவர் யார்?

17. கலம்பகத்தின் இலக்கணத்தைக் கூறுக.

18. பரணி பாடப் பெறுவதற்குரிய தகுதி யாது?

**உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

19. பிள்ளைத்தமிழ் என்றால் என்ன? விளக்குக.

20. பரணி இலக்கியம் பற்றி நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.

21. உலா யார்மீது பாடப் பெறும்? உலா இலக்கியம் பற்றி நீவிர் அறிவன யாவை?

22. ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் குறித்து எழுதுக.

23. உலா, பிள்ளைத்தமிழ், பரணி ஆகிய இலக்கியங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

**III. மொழித்திறன் வளர் பயிற்சி**

1. **எடுத்துக்காட்டில் சொல்லைப் பிரித்துக் காட்டியுள்ளது போல் கீழ் உள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**

எ-டு : தட்டியெழுப்பிய - தட்டி + எழுப்பிய

1. உறுதியுரை -

2. எழுச்சியூட்டிய -

3. தீயணைப்பு -

4. வறுமையடைதல் -

**2. கீழுள்ள தொடர்களைப் படிக்க.**

குமர குருபரர் காசிக் கலம்பகம் பாடினார்.

இரட்டைப் புலவர்கள் தில்லைக் கலம்பகம் பாடினர்.

குமரகுருபரர் ஆண்பாலாயினும் உயர்வுப் பன்மை ஆதலின் 'பாடினார்' என 'ஆர்' விகுதி பெற்றது. இரட்டைப் புலவர் - பலர்பால் ஆதலின் 'பாடினர்' என 'அர்' விகுதி பெற்றது. இவற்றை அறிந்து கீழுள்ள சொற்களைக்கொண்டு பொருத்தமான விகுதி சேர்த்துத் தொடர்கள் அமைக்க.

1. ஔவையார் ஆத்திசூடி (பாடு) ............

2. மாணவர் நன்கு (விளையாடு) ............

3. வள்ளுவர் குறளை (இயற்று) ............

4. மக்கள் திரளாக (கூடு) ............

**IV. பிழைநீக்கி எழுதுக.**

உயிர்மெய் எழுத்துகளில் எகர, ஏகார, ஒகர, ஓகார எழுத்துகளை எழுதும் பொழுது, பிழைகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

எ-கா: க் + எ - கெ. க் + ஏ - கே. க் + ஒ - கொ. க் + ஓ - கோ.

எகர, ஏகார ஒலிக்கு **இரண்டு** வரிவடிவம் அமைவதையும் ஒகர, ஓகார ஒலிக்கு **மூன்று** வரிவடிவம் அமைவதையும் அறிக. கீழ் உள்ள தொடர்களைப் படிக்க. ஒலிக்கு ஏற்ப வரிவடிவம் அமைந்துள்ளதைக் காண்க.

சென்னைக்குப் போகும்படி சொன்னேன்.

கேசவன் கோவிலுக்குப் போனான்.

**பயிற்சி:** எகர, ஏகார உயிர்மெய்யெழுத்துகளில் தொடங்கும் இரண்டிரண்டு சொற்களையும் ஒகர, ஓகார உயிர்மெய்யெழுத்துகளில் தொடங்கும் இரண்டிரண்டு சொற்களையும் எழுதுக. அவற்றை வாய்விட்டுப் படிக்க. வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

## V. வல்லினம் மிகுமிடம் அறிந்து எழுதுக.

இகர ஈற்று வினையெச்சத்தின்பின் வல்லினம் மிகும். எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழ் உள்ள வினைப் பகுதிகளை இகர ஈற்று வினையெச்சமாக்கித் தொடர் அமைத்திடுக.

எ-டு: தேடு - தேடி + சென்றான் - தேடிச் சென்றான்.

1. பேசு - ............. + பார்த்தான் ..........................
2. சொல் - ........... + கொடுத்தாள் ......................
3. எழுது - ............ + தருகிறேன் ........................
4. வணங்கு - ......... + சொன்னான் ......................

## VI. அகராதி காணும் பயிற்சி

க், ச், த் வருக்க எழுத்துகளின் வரிசையும் அதனையடுத்த மெய்யெழுத்து வரிசையும் அமையும்படி, சொற்களை ஒன்றன் கீழ் ஒன்றாக அகர வரிசைப்படுத்துக.

கட்டம், சோம்பு, கிண்ணம், தம்பி, சந்தை, தேக்கம், செம்பு, கப்பல், திண்ணை, சார்த்து, தாழ்ப்பாள், குள்ளன்.

## VII. திறன்வளர் தொடர்பணி

1. பத்துப் பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்களின் பெயர்களை அறிந்து எழுதுக.
2. ஆடவரது பருவங்களை அறிக.

   பாலன், காளை, குமரன், மைந்தன், ஆடவன், முத்தோன், விருத்தன்.

## 5. தீங்குசெய் தீயைத் தடுப்போம்

(முனைவர் சு. பரமசிவன்)

உலகம் ஐம்பெரும் மூலப் பொருள்களால் ஆனது. அவை நிலம், நீர், தீ, வளி, வெளி என்பன. இவை அனைத்தும் நம் உலக வாழ்க்கைக்குத் தேவை. இவற்றுள் தீயை நாம் நாள்தோறும் வீட்டில் பயன்படுத்துகின்றோம். ஆனால் தீயானது உயிரிழப்பும், பொருள் அழிவும் மிகுதியாக ஏற்படுத்தக்கூடியது. எனவே, நாம் அதனை மிகப் பாதுகாப்பாகக் கையாளவேண்டும்.

நெருப்பு மனித குலம் கண்ட முதல் அறிவியல் கண்டுபிடிப்பு. மிகப் பழங்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர் குளிர் காலத்தில் தீ மூட்டிக் குளிர் காய்ந்தனர். கொடிய விலங்குகளை விரட்டத் தீயைப் பயன்படுத்தினர். வேட்டையாடிய விலங்குகளை அவர்கள் நெருப்பில் சுட்டு உண்டனர். இரவில் ஒளிபெறத் தீயைப் பயன்படுத்தினர். காலம் செல்லச் செல்ல மனிதனின் அறிவு வளர்ச்சி பெற்றது. உலோகங்களைத் தீயில் காய்ச்சிப் பல வடிவங்களில் கருவிகளை அமைத்துப் பயன்படுத்தினர்.

இன்று நாம் தீயைச் சமையல் வேலைக்குப் பயன்படுத்து கின்றோம். அத்துடன் அறிவியலின் வளர்ச்சியால் தீயைப் பல்வேறு வகையாகப் பயன்படுத்துகின்றோம். பெரும்பாலான இயந்திரங்கள் தீயினால் உண்டாகும் வெப்பத்தால் இயங்குகின்றன. கப்பல்கள், விமானங்கள் இயங்கவும், மின்சார உற்பத்தியில் எரிபொருளை எரிக்கவும் தீ பயன்படுகின்றது. உலோகங்களை அவற்றின் தாதுக்களிலிருந்து பிரித்து எடுக்கவும், அவற்றைச் சுத்தப்படுத்தி வேண்டிய உருவத்தில் பொருள்களையும், கருவிகளையும் அமைக்கவும் தீ தேவைப் படுகிறது.

நெருப்பு, இருக்கும் இடத்தைக்கொண்டு மதிக்கப்படுகிறது. விளக்குத் திரியில் அது இருந்தால் மதிக்கவும் துதிக்கவும்படும். அடுப்பு விறகில் இருந்தால் நன்றாகப் பற்ற வேண்டும் என விரும்புகிறோம். அதுவே கூரையில் இருந்தால் பொருள் இழப்பும் உயிர் இழப்பும் ஏற்படும் என அறிவோம். இதனைத்

"திரிஅழல் காணின் தொழுப
எரிஅழல் காணின் இகழ்ப"

என்னும் சான்றோர் வாக்கு நமக்கு உணர்த்துகிறது. எனவே தீயைக் கவனமாகக் கையாளாவிட்டால் அது, சுட்டுவிடும். தீயினால் விபத்து ஏற்பட்டால் பெருஞ்சேதம் விளையலாம். பொருள்கள் அழிந்து கெடுவதோடு உடலுக்கும் தீங்கு ஏற்படலாம். உயிர்கள் பல அழியக்கூடும். எனவே, தீ எப்படி ஏற்படுகிறது என அறிந்து அதனைத் தடுக்க வேண்டும். தடுக்க முடியாத சூழ்நிலையில் தீ ஏற்பட்டால், எவ்வாறு அதனை அணைத்தல் வேண்டும் எனவும் அறிதல் நன்று.

தீ எப்படி உண்டாகிறது? தீ உண்டாவதற்கு மூன்று பொருள்கள் தேவை. அவை எரிபொருள், வெப்பம், காற்று என்பனவாம். இவற்றுள் ஏதேனும் ஒன்றை நீக்கிவிடுவோமானால், தீ இல்லாது போய்விடும். தீயில் சிறிய தீ, பெரிய தீ என்ற பாகுபாடு கூடாது. தீ என்றால் உடனே அதனை அணைத்துவிட வேண்டும்.

எரிபொருள் சார்ந்த தீயினை ஐந்து வகையாகப் பிரிப்பர். முதல்வகை எரிந்து சாம்பலாகக்கூடிய தாள், மரம், வைக்கோல், ஓலை போன்ற பொருள்களைச் சார்ந்தது. இவை சிறிய அளவில் இருந்தால், தண்ணீர் ஊற்றியும் மணலைக்கொட்டியும் அணைக்கலாம். பெரிய அளவில் இருக்குமாயின் முதலில் தீ அணைப்பானைப் பயன்படுத்த வேண்டும். தீ அணைப்பானில் வேதிப் பொருள்கள் உள்ளன. அணைப்பானில் சோடியம் பை கார்பனேட் கரைசல் நிரப்பப்பட்டிருக்கும்; ஒரு சிறுபுட்டியில் கந்தக அமிலம் இருக்கும். தீ அணைப்பானைக் கவிழ்த்தால் இவை இரண்டும் கலந்து வினைப்படும். கார்பன்டை ஆக்ஸைடு வாயு உண்டாகும். இவ்வாயுவின் உயர்ந்த அழுத்தும் சக்தியினால் வாயுவானது 4½ மீட்டர் முதல் 7½ மீட்டர்வரை வேகமாகப் பீறிட்டு அடிக்கும்; தீயை அணைக்கும்.

இரண்டாவது வகை பெட்ரோல் (எண்ணெய்), தாவர எண்ணெய் முதலிய எண்ணெய் வகை சார்ந்தவை. இவ்வகைத் தீயை அணைப்பதற்காகத் தனியான தீ அணைப்பான்கள் உள்ளன. அவை மூலம் கனத்த நுரை வெளியே வந்து, எண்ணெய்மீது படர்ந்து, எண்ணெயுடன் வாயு சேராதபடி மூடித் தீயை அணைத்துவிடும். இவ்வகைத் தீயின்போது தண்ணீர் பயன்படுத்துதல் கூடாது.

மூன்றாவது வகை அலுமினியம், செம்பு, பித்தளை, இரும்பு முதலிய உலோகத் தொடர்பானவை. இவ்வகைத் தீயை அணைப்பதற்கு அதற்கென்று உரிய அணைப்பானைப் பயன்படுத்த வேண்டும். அவை மூலம் ஒருவிதமான வெள்ளை நிறத் தூள் வெளிவந்து, எரிகின்ற உலோகங்களின்மீது தேனடைபோல் ஒட்டிக்கொள்ளும். காற்று சேர முடியாததால் தீ சிறிது சிறிதாக அணைந்துவிடும்.

நான்காவது வகை வாயுத் தொடர்பானது. சமையல் எரிவாயு, இரும்பைப் பற்றவைக்க உதவும் உயிர்வளி (ஆக்ஸிஜன்) கலந்த அசிட்டிலின் வாயு போன்றவையாகும். இதற்கென அமைக்கப்பட்ட தீயணைப்பானிலிருந்து வெளிவரும் கார்பன் டை ஆக்ஸைடு வாயு, எரி வாயுவின்மேல் படும்பொழுது வெளிக்காற்றைத் தடுத்துவிடும். ஆகையால் நெருப்பு உடனே அணைந்துவிடும்.

ஐந்தாவது வகை மின்சாரம் தொடர்புடையதாகும். இவ்வகை நெருப்பு என அறிந்தால் முதலில் மின்சாரம் பாயும் தொடர்பை நிறுத்திவிட வேண்டும். பின்னர்தான் தீயை அணைக்கும் வேலையை மேற்கொள்ள வேண்டும். இதற்கும் முதலில் கார்பன் டை ஆக்ஸைடு அணைப்பானைப் பயன்படுத்த வேண்டும். அதன் பின்னர் DCP எனப்படும் (Dry Chemical Powder) காய்ந்த வேதியியல் தூளைப் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் நீரைப் பயன்படுத்துதல் கூடாது. இவையனைத்தும் தீயின் ஆரம்ப நிலையில் பயன்படுத்தக் கூடியவையே.

இம்மாதிரி எல்லாவகைத் தீயணைப்பான்களையும் வீடுகளில் வைத்துக்கொள்ள முடியுமா? முடியாது. எனவே தீ விபத்து ஏற்பட்டவுடன் தீ அணைப்புப் படையினருக்குத்

தொலைபேசியில் வீட்டு முகவரி கூறிச் செய்தி தெரிவிக்க வேண்டும். செய்திகேட்ட ஒரு சில வினாடிகளில் அவர்கள் தீயணைப்பு வண்டியில் புறப்பட்டுவிடுவார்கள். மணியடித்துக் கொண்டே வண்டி ஓட்டுவார்கள். மணியொலி கேட்டு மக்களும் வாகன ஓட்டுநர்களும் சாலையோரம் செல்வார்கள். தீயணைப்பு வண்டி தாமதமின்றி விபத்து நடந்த இடத்துக்குச் செல்லும்.

தீயணைப்பு வண்டியில் தீயணைப்புக்குரிய தீயணைப்பான்கள் உள்ளன. தண்ணீரை வேகமாகப் பீறிட்டு அடிக்கும் குழாய்கள் உள்ளன. அடுக்கு அடுக்காக அமைந்த பல ஏணிகள் உள்ளன. தீயணைப்புப் படையினர் இவற்றைப் பயன்படுத்தி விரைவில் தீயை அணைப்பதில் பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் முதலுதவி அளிப்பதிலும் வல்லவர்கள். எனவே, இவர்கள் உதவியைப் பெற வேண்டும்.

பெரும்பாலான தீ விபத்துகள் கவனக் குறைவாலேயே ஏற்படுகின்றன. பட்டாசு, வாணங்களைக் கொளுத்தும்பொழுது மிகக் கவனமாக இருக்கவேண்டும். எரியும் தீக்குச்சியை அணைத்த பின்னரே தூக்கி எறிய வேண்டும். அடுப்பிலிருந்து தீப்பொறிகள் பறக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அடுப்புக்கு அருகில் வேலை பார்க்கும்பொழுது நைலான் ஆடை அணியக் கூடாது. தீப்பெட்டி, விளக்கு முதலியவற்றைக் குழந்தைகளுக்கு எட்டாத நிலையில் வைக்க வேண்டும். மின்சாரச் சாதனங்களில் உள்ள மின்சாரக் கம்பி பழுதடைந்தால் அதனை உடனே மாற்றிவிட வேண்டும்.

பொது இடங்களிலும் கேளிக்கை அமைப்புகளிலும் பொதுமக்கள் அதிகமாகச்சென்று புழங்கும் இடங்களிலும் தீயணைப்புக் கருவிகள் வைக்கப்பட வேண்டியது கட்டாயத் தேவை. இதில் விழிப்புணர்வு பெற்று, தீயணைப்புக் கருவிகளை ஆங்காங்கே வைத்துக்கொள்வது மிகச் சிறந்த தற்காப்பு உணர்வாகும். நெருப்பு ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்பதிலும், தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் மக்களிடத்தில் அறியாமையும், மிகுந்த மெத்தனப்போக்கும் காணப்படுகின்றன. தீ விபத்தைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வு மக்கள் இயக்கமாக மாறவேண்டும். இதனை மக்கள் இயக்கமாகக் கொண்டு வருவதற்குரிய ஆற்றலும் திறனும்

பள்ளி மாணவரிடத்தில் உண்டு. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தீ விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பு களையும், பொருள் அழிவையும் தடுக்கலாம்.

**ஆசிரியர் :** முனைவர் சு.பரமசிவன் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர். சிறந்த கல்வியாளர். பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சிறந்த கல்வியாளரான இவர் சீனா, நேபாளம், பிலிப்பைன் முதலான நாடுகளில் நிகழ்ந்த கல்விக் கருத்தரங்குகளில் தமிழ்நாடு கல்வித் துறையின் சார்பில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தெழுதுக.

விடுவோமானால் - விடுவோம் + ஆனால்; எண்ணெய் - எள் + நெய்; தண்ணீர் - தண்மை + நீர்; மணியொலி - மணி + ஒலி; தீயணைப்பான் - தீ + அணைப்பான்.

### ஆ. அருஞ்சொற்பொருள்:

விரட்ட - துரத்த; தாது - மூலப்பொருள், உலோகம்; அழல் - நெருப்பு; மெத்தனம் - தாமதம்.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| தீங்கு | பழங்காலம் | செல்லச் செல்ல |
| கையாளுதல் | பயன்படுத்து | விபத்து |

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. **‘திரியழல் காணின் தொழுப, எரி அழல் காணின் இகழ்ப’ - எனும் சான்றோர் வாக்கு உணர்த்துவது யாதென முனைவர் சு.பரமசிவன் கூறுகிறார்?**

அ. தீயைக் கவனமாகக் கையாளாவிட்டால் தீங்குநேரும்

ஆ. தீ வணக்கத்துக்குரிய அரிய பொருளாகும்

இ. தீ ஏற்படுத்தும் சூழலை அறிய வேண்டும்

2. **எரிபொருள் சார்ந்த தீ எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகிறது?**

அ. 3 ஆ. 4 இ. 5

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. நெருப்பை நாம் எவ்வாறு கையாள வேண்டும்?
4. ஐம்பெரும் மூலப் பொருள்கள் யாவை?
5. தீ எவ்வெவற்றிற்குப் பயன்படுகிறது?
6. தீ உண்டாவதற்குத் தேவையான மூன்று பொருள்களைக் குறிப்பிடுக.
7. தீ சிறிய அளவில் இருந்தால் அதனை எவ்வாறு அணைக்கலாம்?
8. தீயை எப்பொழுது தொழ வேண்டும்? எப்பொழுது இகழ வேண்டும்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

9. ஆதிகாலத்தில் மனிதன் தீயை எவ்வெவற்றிற்குப் பயன் படுத்தினான்?
10. தீயினால் ஏற்படும் தீமைகள் பற்றி எழுதுக.
11. தீயை அணைக்க எப்பொழுதெல்லாம் தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது?
12. சமையல் எரிவாயு விபத்து ஏற்படுவதை எவ்வாறு தடுத்துக் கொள்ளலாம்?
13. தீ விபத்து ஏற்படும்பொழுது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

**III. மொழித்திறன் வளர் பயிற்சி**

**எடுத்துக்காட்டைப்போல் கீழ் உள்ள தொடர்களைச் சேர்த்து எழுதுக.**

எ-டு : தீயைக் கவனமாகக் கையாள வேண்டும். அது சுட்டு விடும்.
தீயைக் கவனமாகக் கையாளாவிட்டால் அது சுட்டு விடும்.

1. மருந்தை முறையாக அருந்த வேண்டும். நோய் நீங்காது.
2. ஓடுவதில் நன்கு பயிற்சி பெறவேண்டும். ஒலிம்பிக் பரிசு பெற இயலாது.
3. தீயணைப்புக் கருவிகளை உடனே பயன்படுத்த வேண்டும். பொருள் இழப்பும் உயிரிழப்பும் ஏற்படும்.
4. பள்ளிக்கு நாள்தோறும் வர வேண்டும். பாட அறிவு முழுமையும் பெறமுடியாது.

**IV. பிழை நீக்கி எழுதுக.**

அ. எகர, உயிர்மெய்யெழுத்துக்கு ஒற்றைக் கொம்புடன் (ெ) இரண்டு

வரி வடிவமும், ஒகர உயிர்மெய்யெழுத்துக்கு, ஒற்றைக் கொம்புடன் (ெ) கால் (ா) என மூன்று வரிவடிவமும் அமையும் என்பதை அறிக.

எ-டு: கெ, செ, தெ, பெ என அமையும்
எகர ஒலி 2 வரி வடிவம் பெறுதல் காண்க.
கொ, சொ, தொ, பொ, மொ என அமையும்
ஒகர ஒலி 3 வரி வடிவம் பெறுதல் காண்க.

ஆ. கீழ் உள்ள சொற்களை வாய்விட்டுப் படித்துப் பொருள் வேறுபாடு அறிக.

1. செல் - சொல்
2. தென்னை - தொன்னை
3. கெடு - கொடு
4. பெறு - பொறு

**மேல் உள்ள சொற்களைப் பொருள் வேறுபாடு தோன்றும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்தெழுதுக.**

## V. வல்லினம் மிகுமிடம் அறிந்து எழுதுக.

எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும்.

எ-டு: எட்டு + தொகை - எட்டுத் தொகை
பத்து + பாட்டு - பத்துப்பாட்டு

எட்டு, பத்து என்னும் சொற்களுடன் 'க, ச, த, ப'வில் தொடங்கும் சொற்களைச் சேர்த்துத் தொடர் அமைக்க.

1. எட்டு + .................... - ........................
2. பத்து +.................... - ........................
3. எட்டு + .................... - ........................
4. பத்து + .................... - ........................

## VI. அகராதி காணும் பயிற்சி

ந, ப, ம, ய, ர, ல, வ - வருக்க எழுத்துகள் வரிசையாக அமையும்படி கீழ் உள்ள சொற்களை ஒன்றன்கீழ் ஒன்றாக அகர வரிசைப்படுத்துக.

நட்பு, வேட்கை, நான்கு, பாக்கு, நீதி, யாழ், லாடம், யாக்கை, மாட்சி, யாப்பு, ரொட்டி, வாழை, ரோசா, லட்டு, வரப்பு, மடப்பம், விட்டம், வெற்றி, நேற்று, பஞ்சு, மீண்டு, பற்று.

## VII. திறன்வளர் தொடர்பணி

நேரில் பார்த்த தீ விபத்து எப்படி ஏற்பட்டது, அதனை எப்படித் தடுத்திருக்கலாம் என்பதனைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

# 6. கொம்பை வெட்டிக் காலை நடு

(திருமதி. சந்திரிகா ராஜ்மோகன்)

வீரராகவர் ஒப்பற்ற கவிஞர். அவர் பிறவியிலேயே பார்வை இழந்தவர். தம் முதுகில் தமிழ் எழுத்துகளை எழுதச் சொல்லித் தமிழ் மொழியைக் கற்றுத் தெளிந்தவர். தமிழ்ப் பாடல்களைப் பிறர் படிக்கக் கேட்டு மனப்பாடம் செய்துகொண்டவர். இவ்விதம் தமிழ் மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றவர். கவி பாடுவதிலும் தலைசிறந்து விளங்கியவர். அவரை 'அந்தகக் கவி' என அனைவரும் போற்றினர்.

அக்காலத்தில் ஒருவர் பாடிய நூல்களைப் புலவர்கள் கூடியிருக்கும் அரங்கத்தில் படித்துக் காட்டி ஒப்புதல் பெறுவது வழக்கம். இம்முறையை 'நூலின் அரங்கேற்றம்' என்பர். அரங்கேற்றத்தின்போது சிலர் சொற்களுக்கு விளக்கம் கேட்பர். வேறு சிலர் சொற்களின் நயத்தைப் பாராட்டிக் கூறுவர். இன்னும் சிலர் பாடலில் சொற்குற்றமோ, பொருட் குற்றமோ இருப்பின் அவற்றைச் சுட்டிக் காட்டுவர். அரங்கத்தில் எழுப்பப்படும் வினாக்களுக்குப் பாடலைப் பாடிய கவிஞர் தக்க முறையில் விளக்கங்கூறி அமைவர். இவ்வகையில் நூல் அரங்கேற்றம் நடைபெறும்.

ஒரு சமயம் வீரராகவர் எழுதிய நூல் ஒன்றுக்கு அரங்கேற்றம் ஏற்பாடு செய்யப் பெற்றது. அரங்கேற்றத்திற்குக் கூடியிருந்த மக்கள் அவையில், மாணவர் ஒருவர் நூலைப் படிக்க, கவிஞர் விளக்கம் கூறி வந்தார். கவிஞர் பாடல் ஒன்றில் பெண் ஒருத்தியை வருணித்துக் கூறும் பகுதியில், அப்பெண் இனிமையானவள் எனக் குறிக்க வந்தவர், அவளைக் 'கரும்பு' என்றார்.

கரும்பு விளைந்த இடத்தை வருணிக்கின்றபோது 'ஏரியிலிருந்து பால் பாய்ந்தது. தேன் மழை பெய்தது. வயலில்

எருவிட வேண்டுமன்றோ? நல்ல பாகும், கற்கண்டும் எருவாக அமைந்தன. முப்பழங்கள் சேறாக அமைந்தன. அந்த வயலோ அமுதவயல்! அத்தகைய வயலில் விளைந்த கரும்பு அவள்' என்றார். அந்தப் பாடல் அடிகள்,

"பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்

டாலே எருவிட முப்பழச் சேற்றின் அமுதவயல்

மேலே முளைத்த கரும்போ ........." என அமைந்தன. கேட்டவர் சிலர் இன்சுவைப் பொருள்கள் அனைத்தும் அதில் ஒருங்கே அமைந்துள்ள பாங்கினைப் பாராட்டினர்.

அவ்வேளையில் புலமை ஆற்றல் நிறைந்த பெண்மணி ஒருவர் எழுந்து பேசத் தொடங்கினார். "கவிஞர் பாடிய பாடல் வரிகளைக் கேட்டேன்! கவிஞருக்குக் கண்தான் கெட்டுவிட்டது. கருத்தும் கெட்டு விட்டதோ?" எனக் கூறினார். பாடல் வரியில் 'என்ன பிழை உள்ளது?' என வெளிப்படச் சுட்டிக்காட்டாமல் இலைமறை காயாகத் தம் கருத்தை அவர் கூறினார். அம்மையார் கேட்ட கேள்வியின் பொருள் விளங்காது அவையோர் அமைதியாக இருந்தனர். ஆனால் வீரராகவரோ, அம்மையார் மறைமுகமாகச் சுட்டிக் காட்டிய பிழையைப் புரிந்துகொண்டார். தம் மாணவனை அழைத்து "தம்பி, கொம்பை வெட்டிக் காலை நடு" என்றார். மாணவனோ, 'அது என்ன கொம்பை வெட்டுவது? காலை நடுவதா - அஃதென்ன?' என்று கேட்கவில்லை. கவிஞர் சுட்டிய குறிப்பினை உணர்ந்தான். உடனே பாடல் வரியை மாற்றினான். 'முப்பழச் சாற்றின் அமுத வயல் மேலே முளைத்த கரும்போ' என்று படித்தான்.

'மூன்று பழங்களிலிருந்து கிடைப்பது சேறாக இராது. அது பழச்சாறாக இருக்கும்' எனப் பெண் கவிஞர் குறிப்பாகக் கூறினார். அக்குறிப்பின் உட்பொருளைக் கவிஞர் உடனே உணர்ந்து கொண்டார். வெளிப்படக் கூறாமல் தம் மாணவனிடம், 'கொம்பை வெட்டிக் காலை நடு' என்றார். மாணவன் கொம்பு, கால் என்னவென்று கேட்கவில்லை. சிறிதும் தயங்காது 'சேறு' என்பதில் உள்ள கொம்பை நீக்கிவிட்டு, 'ச' எழுத்தின் பக்கத்தில்

துணைஎழுத்தாகிய காலை(ா)ச் சேர்த்துப் படித்தான். பாடலில் உள்ள கருத்துப் பிழையைப் பெண் கவிஞர் குறிப்பாகச் சுட்டிக் காட்டினார். அதனை வீரராகவர் மாணவனிடம் மறைமுகமாகக் கூறினார். மாணவனும் அதனை நுட்பமாக உணர்ந்து பாடலைத் திருத்திப் படித்தான். இவை அனைத்தையும் அவையோர் கேட்டனர். அனைவரும் அவரது திறன் குறித்துப் பேசி மகிழ்ந்தனர். நூல் அரங்கேற்றம் செம்மையாக நிறைவேறியது.

இவ்வாறு அக்காலத்தில் நடைபெற்ற அரங்கேற்ற நிகழ்ச்சிகளால் பாடல்கள் சில செம்மையான திருத்தங்களைப் பெற்றன. பாடல் நயம் அனைவர்க்கும் உணர்த்தப் பெற்றது. சிறந்த இலக்கியங்களும் பாடல்களும் கிடைத்தன! மக்கள் அப்பாடல்களைப் பலமுறை படித்துச் சுவைத்தனர்; பாடிப்பாடி மகிழ்ந்தனர்.

**ஆசிரியர் :** திருமதி சந்திரிகா ராஜமோகன், சென்னை மாநிலப் பெண்கள் மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியையாகப் பணியாற்றியவர். இவர் பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

ஒப்பற்ற - ஒப்பு + அற்ற; அரங்கேற்றம் - அரங்கு + ஏற்றம்; முப்பழங்கள் - மூன்று + பழங்கள்; பழச்சாறு - பழம் + சாறு; உட்பொருள் - உள் + பொருள்; என்னவென்று - என்ன + என்று.

### ஆ. அருஞ்சொற்பொருள்:

ஒப்பற்ற - சமம் இல்லாத, நிகரற்ற; அந்தகன் - பிறவியிலேயே பார்வையை இழந்தவன்; எரு - உரம்; இலைமறை காயாக - பசுமையான இலைகளுக்கு இடையே மறைந்திருக்கும் காய்போல, தெரிந்தும் தெரியாமல் உள்ளமை.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

தேர்ச்சி தலைசிறந்த ஏற்பாடு

பாங்கு சுட்டிக்காட்டு வெளிப்பட

## II. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

1. **கீழுள்ளனவற்றுள் எது நூல் அரங்கேற்ற முறையாகுமெனத் திருமதி சந்திரிகா ராஜமோகன் குறிப்பிடுகிறார்?**

   அ. எழுப்பப்படும் வினாக்களுக்கு நூலைப் படைத்த புலவர் விடையளித்தல்

   ஆ. நூலிலுள்ள நயத்தைப் புலவர் எடுத்துக் காட்டுதல்

   இ. நூல் எழுதியோர் அவையோரிடம் கேட்டல்

2. **'தேர்ந்த முப்பழச் சேற்றில் அழுதவயல் மேல்' - இவ்வடியின் எச்சொல்லின் கொம்பை வெட்டிக் காலை இட்டால் கடவுள் பெயர் ஒன்று கிடைக்கும்?**

   அ. தேர்ந்த ஆ. சேற்றில் இ. மேல்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. அந்தகக் கவி வீரராகவர் எவ்வாறு கல்வி கற்றார்?
4. கவிஞர் பாடலைக் கேட்ட பெண்மணி வினவியது யாது?
5. அரங்கேற்றம் என்பது யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. கரும்பு விளைந்த காட்சியை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?
7. 'கொம்பை வெட்டிக் காலை நடு' என்னும் தொடரின் பொருளைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
8. பெண் கவிஞரின் குறிப்பை உணர்ந்துகொண்டு மாணவன் செய்தது யாது?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**அ. எடுத்துக்காட்டைப்போல் கீழ் உள்ள வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.**

எ-டு: மாணவர் நூலைப் படித்தார்; கவிஞர் விளக்கம் கூறினார்.
மாணவர் நூலைப்படிக்க, கவிஞர் விளக்கம் கூறினார்.

1. அமைச்சர் அறையினுள் வந்தார்; அனைவரும் எழுந்தனர்.
2. தலைவர் நகைச்சுவையுடன் பேசினார்; அனைவரும் கரவொலி எழுப்பினர்.

3. கவிஞர் குறிப்பாகக் கூறினார்; அதனை அறிந்து மாணவர் உடனே திருத்தினார்

4. செடிகள் நன்கு வளர்தல் வேண்டும்; அவற்றிற்குத் தகுந்த உரம் வேண்டும்.

**ஆ. தலை சிறந்து - என்னும் மரபுத் தொடருக்குப் 'புகழ்பெற்று' என்று பொருள். இதே போன்று கீழ் உள்ள மரபுத் தொடர்களுக்குப் பொருள் எழுதி, வாக்கியங்களில் அமைக்க.**

தலைமறைவு தலைகுனிவு தலைகீழ்

## IV. பிழை நீக்கி எழுதுக.

உயிர்மெய்யெழுத்துகளில், 'ஏகார' உயிர்மெய்யெழுத்துக்கு இரட்டைக் கொம்புடன் (ே) இரண்டு வரிவடிவமும், ஓகார உயிர்மெய்யெழுத்துக்கு இரட்டைக் கொம்புடன் (ே)கால் (ா) என மூன்று வரிவடிவமும் அமையும் என்பதனை அறிக.

எ-டு: கே, சே, தே, பே, மே என அமையும்

ஏகார ஒலி 2 வரி வடிவம் பெறுதல் காண்க.

கோ, சோ, தோ, போ, மோ என அமையும்

ஓகார ஒலி 3 வரி வடிவம் பெறுதல் காண்க.

**கீழ் உள்ள சொற்களை வாய்விட்டுப் படித்துப் பொருள் வேறுபாடு அறிக.**

1. தேள் - தோள் 3. சேறு - சோறு 5. தேடு - தோடு
2. கேள் - கோள் 4. கேடு - கோடு

**மேல் உள்ள சொற்களைப் பொருள் வேறுபாடு தோன்றும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

எ-டு: தேள் கொட்டியது. தோள் வலித்தது.

## V. வல்லினம் மிகுமிடம் அறிந்து எழுதுக.

இப்படி, அப்படி, எப்படி - என்னும் சொற்களின்பின் வல்லினம் மிகும்.

இப்படி, அப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் 'க, ச, த, ப' வில் தொடங்கும் சொற்களைச் சேர்த்துத் தொடர் அமைக்க.

எ-டு: : அப்படி + சொன்னான் - அப்படிச் சொன்னான்.

1. இப்படி +............. 2. அப்படி +.............. 3. எப்படி +............

**வல்லினம் மிகாவிடம் அறிந்து எழுதுக.**

'படி' என்னும் சொல் வினைச் சொல்லோடு வரும் பொழுது வல்லினம் மிகாது.

கீழ் உள்ள வினைச் சொற்களோடு 'படி' என்னும் சொல் சேர்த்து, அதனோடு 'க, ச, த, ப'வில் தொடங்கும் சொல் சேர்த்துத் தொடர் அமைக்க.

எ-டு: பேசு + படி + சொன்னான் - பேசும்படி சொன்னான்.

வா + படி + கட்டளையிட்டான் - வரும்படி கட்டளையிட்டான்

1. கூறு +  2. முந்து +  3. வீசு +  4. வெல் +

## VI. அகராதி காணும் பயிற்சி

ந, ப, ம, ய, ர, ல, வ வருக்க எழுத்துகள் வரிசையாகவும், அதனையடுத்த மெய்யெழுத்து வரிசையாகவும் அமையும்படி சொற்களை ஒன்றன்கீழ் ஒன்றாக அகர வரிசைப்படுத்துக.

நாக்கு, ரொக்கம், பத்து, நேற்று, மீட்சி, நுட்பம், லாந்தர், வாக்கு, நுங்கு, யாத்தல், யுக்தி, மொட்டு, யுத்தம், பஞ்சு, ருமானி, பந்து, மத்து, ராகம், முந்து, லட்டு, யாப்பு, வெற்றி, வேட்கை

## VII. திறன்வளர் தொடர்பணி

1. **மூன்று சொற்கள் எழுதி அவற்றுடன் துணையெழுத்து ('ா') சேர்த்துப் புதிய சொற்கள் எழுதுக.**

   எ-டு: படு - பாடு;  சேறு - சோறு

   1. ............  2.............  3..............

2. **மூன்று சொற்கள் எழுதி அவற்றுடன் ஒற்றைக் கொம்பு (ெ) சேர்த்துப் புதிய சொற்கள் எழுதுக.**

   எ-டு: காடு - கொடு

   1. ............  2.............  3..............

3. **மூன்று சொற்கள் எழுதி அவற்றுடன் இரட்டைக் கொம்பு (ே) சேர்த்துப் புதிய சொற்கள் எழுதுக.**

   எ-டு : தாண்டு - தோண்டு

   1 ............  2.............  3..............

# 7. சட்டமேதை அண்ணல் அம்பேத்கர்

(திருமதி. மணிமேகலை பாலதண்டாயுதம்)

உலகில் மக்களாய்ப் பிறந்தவருள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் வேறுபாடு இருத்தல் கூடாது. இதனை வற்புறுத்தவே வள்ளுவர் 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறினார். நம் இந்திய நாட்டைப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சாதி அமைப்பு துன்பத்துக்கு உள்ளாக்கியது. அது சிலரை உயர்ந்தவர் என்றும், சிலரைத் தாழ்ந்தவர் என்றும் கூறியது. தாழ்ந்தவருள்ளும் சிலரைத் தீண்டத் தகாதவர் என ஒதுக்கி வைத்தது. பொதுக் குளத்தில் நீர் எடுத்தல்கூடாது, பொது இடங்களில் நுழையக்கூடாது, கோயிலுக்குள் வரக்கூடாது என்று தடைகள் பலவற்றை விதித்து வந்தது. மீறியவர்களைத் தண்டித்தது. இந்த நிலையை மாற்றக் கடந்த நூற்றாண்டில் பலர் போராடினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அம்பேத்கர்.

இராம்ஜி சக்பால் என்பவர் இராணுவப் பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவர் 'சுபேதார் மேஜர்' என்னும் தகுதியையும் பெற்றிருந்தார். அவர் துணைவியார் பீமாபாய். இராம்ஜி சக்பால், பீமாபாய் இணையருக்குப் பதினான்காவது குழந்தையாகப் 'பீமாராவ் இராம்ஜி' பிறந்தார். உரிய பருவத்தில் 'பீமாராவ் இராம்ஜி' பள்ளிக்கு அனுப்பப்பட்டார்.

பள்ளியில் உயர்சாதி மாணவர்கள் மரப் பலகையிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒரு மூலையில் கோணிப் பைகளின் மீதும் அமர்ந்து கல்வி கற்றனர். பிஞ்சு மனம் இக்கொடுமை கண்டு வெதும்பிப் பள்ளிக்குச் செல்வதை வெறுத்தது. சாதிக் கொடுமைக்கு ஆதரவு தந்து வந்த அப்பள்ளியில் 'அம்பேத்கர்' என்னும் பெயருடைய ஆசிரியர் பணியாற்றி வந்தார். அவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர்; அனைத்து உயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராக வாழ்ந்தவர். அவர்

அனைத்து மாணவரிடமும் சமமான அன்பைச் செலுத்திக் கற்பித்து வந்தார். அவர் தாம் கொண்டுவரும் சிற்றுண்டி, உணவு முதலானவற்றைச் சிறுவன் இராம்ஜிக்குப் பரிவுடன் அளித்தார். அப்பரிவு பீமாராவை நன்கு கற்கத் தூண்டியது. அந்த ஆசிரியர்பால் கொண்ட ஈடுபாட்டால், சிறுவன் தன் பெயரை 'பீமாராவ் இராம்ஜி அம்பேத்கர்' என வைத்துக் கொண்டான். காலப்போக்கில் 'அம்பேத்கர்' என்னும் பெயரே அச்சிறுவனின் பெயராக நிலைத்தது.

ஆசிரியர் அம்பேத்கரின் வழிகாட்டுதலால் இராம்ஜி கல்வியில் ஆர்வம் கொண்டார். தான் பிறந்த தாழ்த்தப்பட்ட இனத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டும், பலமுறை அந்த இன்னல்களுக்கு ஆளாகியும் விடாமுயற்சியுடன் கற்றார். பள்ளிப் படிப்பை முடித்ததும் கல்லூரியில் சேர்ந்தார். நல்ல நண்பனாக அமைந்த கிருஷ்ணாஜியின் தூண்டுதலாலும் தம் தந்தையின் அருமுயற்சியாலும் பரோடா மன்னர் சாயாஜியின் பொருளுதவியாலும் 1912 இல் இளங்கலைப் பட்டம் (பி.ஏ) பெற்றார். பரோடா மன்னரிடம் உதவி பெற்று அமெரிக்கா சென்று உயர் கல்வியைத் தொடர்ந்தார். ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரத்தைப் படிப்பில் செலவு செய்தார். பரோடா மன்னர் அளித்த உதவித் தொகையில், தன் செலவைக் குறைத்துக் கொண்டு சிறிதளவைச் சேமித்து இந்தியாவில் தம் குடும்பத்திற்கு அனுப்பினார். கடினமான உழைப்பை மேற்கொண்ட அம்பேத்கர் 1915 இல் முதுகலைப் பட்டமும் (எம்.ஏ) 1916 இல் தத்துவப் பேரறிஞர் (பி.எச்.டி) பட்டமும் பெற்று இந்தியா திரும்பினார்.

1918 முதல் மும்பையில் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார். வருவாயின் ஒரு பகுதியைச் சேமித்தார். நண்பர் நேவல் பதேனா கடனாக அளித்த தொகையுடன் இலண்டன் சென்றார்; கல்வியைத் தொடர்ந்தார். பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சி நிலைய நூலகம் திறக்கும்போது முதல் நபராக உள்ளே நுழைபவர், இரவு மூடப்படும்போது கடைசி நபராக வெளியேறுவார். இப்படி ஓய்வின்றிக் கற்று அறிவியல் முதுகலைப் (எம்.எஸ்.சி) பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றபின் இந்தியா திரும்பினார். வழக்கறிஞர் தொழிலை

மேற்கொண்டதோடு தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்குப் பொருள் பெறாமல் நீதி மன்றங்களில் வாதாடி நீதியைப் பெற்றுத் தந்தார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக ஒரு கழகத்தைத் தொடங்கினார். மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்தினார்; மும்பை நகரில் படிப்பகமும் விளையாட்டுக் கழகமும் நிறுவினார். இந்நிலையில் மும்பை மாநில ஆளுநர் இவரை மும்பை சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமித்தார். அதைப் பாராட்ட நடந்த கூட்டத்தில் அளித்த பண முடிப்பைத் தாழ்த்தப்பட்டோர் கழகத்திற்கு வழங்கினார். 'பள்ளிகள், மருத்துவ மனைகள், அலுவலகங்கள், நீர்நிலைகள் முதலான அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொது. அங்குச் சாதி வேறுபாடுகளுக்கு இடமில்லை' என்னும் ஆணையை மும்பை அரசு 1923ஆம் ஆண்டு பிறப்பிக்க வழிவகுத்தார். இதனால் தாழ்த்தப்பட்டவர் களாகக் கருதப்பட்ட மக்கள் தங்களுக்குரிய உரிமை பெறவழி பிறந்தது.

1924 இல் பரோடா மன்னருடன் இணைந்து அம்பேத்கர் தீண்டாமையை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அதே ஆண்டில் கொலம்பியா பல்கலைக் கழகம் சிறப்பிற்குரிய 'டாக்டர்' பட்டம் வழங்கியது. தாழ்த்தப்பட்டவரும் கோயிலுக்குள் செல்லப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என எல்லாருடைய மனத்திலும் பதிய வைத்தார். சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுத் தொழில் துறையில் பணியாற்றினார்.

நாடு விடுதலை பெற்றபின் 1947 ஆம் ஆண்டு பிரதமர் நேரு அவர்களின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவி ஏற்றார். 'இந்திய அரசியலமைப்பு' சட்டத்தை வரைவதற்கான குழுவின் தலைவராகப் பொறுப்பு ஏற்றார். அக்குழுவின் உறுப்பினர் சிலர் ஒத்துழைக்காத நிலையிலும் தனியொருவராக அப்பொறுப்பை நிறைவேற்றினார். அம்பேத்கர் இயற்றி அளித்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாராட்டாதவர் இலர். இதனால் இவர் திறமையை உலகில் பலரும் அறிந்தனர்.

உஸ்மானியப் பல்கலைக் கழகம் அம்பேத்கருக்கு 'இலக்கியத்தில் டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

பள்ளிப் பருவம் முதல் பல்வேறு வகை 'பேனா'க்களைச் சேகரிப்பதையும், புத்தகங்களைச் சேகரிப்பதையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தார். தம் வாழ்நாள் முழுவதும் ஐந்து இலட்சம் புத்தகங்களைச் சேகரித்து வைத்திருந்தார். ஆங்கிலம், குஜராத்தி, மராட்டி, சமஸ்கிருதம், ஜெர்மனி, பிரெஞ்சு முதலிய பல மொழிகளைக் கற்றறிந்தார். தம் வாழ்நாள் முழுவதையும் தமது தாய்நாட்டுக்காகவும் மக்களின் ஒற்றுமைக்காகவும் உழைத்த அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் நாளில் இயற்கை எய்தினார்.

நாம் பிறப்பினால் பிறரிடம் உயர்வு தாழ்வு பாராட்டாது, ஒன்றுபட்டு வாழ்ந்து காட்டுவதே, ஓயாது உழைத்து, உயர் சிறப்புப் பெற்ற அம்பேத்கருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

**ஆசிரியர்** : திருமதி மணிமேகலை பாலதண்டாயுதம், சென்னை, சூளைமேடு ஜெயகோபால் கரோடியா அரசு மகளிர் மேனிலைப் பள்ளியில் முதுகலைத் தமிழாசிரியர். இவர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்; பாடநூல் குழுவில் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

நூற்றாண்டு - நூறு + ஆண்டு; பெற்றிருந்தார் - பெற்று + இருந்தார்; வெளியேறுவார் - வெளி + ஏறுவார்; தனியொருவர் - தனி + ஒருவர்.

### ஆ. அருஞ்சொற்பொருள்

பிஞ்சுமனம் - இளம் மனம் (இளமை மனம்); மீறியவர் - கடந்தவர்; வெதும்பி - மனம் வருந்தி; சேகரித்து - திரட்டி.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| தடை | இணையர் | கொடுமை |
| இன்னல் | தூண்டுதல் | ஓய்வின்றி |

## II. பொருளுணர்திறன் பயிற்சி

**அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.**

**1. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் வள்ளுவர் மொழி உணர்த்துவது ..........**

அ. எல்லார்க்கும் திறமை உண்டு

ஆ. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என இல்லை

இ. எல்லாரும் எல்லாம் பெறுவர்

**2. அண்ணல் அம்பேத்கர் யாருடைய நினைவாகத் தம் பெயரை மாற்றிக் கொண்டார்?**

அ. அன்பு காட்டிய ஆசிரியர்

ஆ. உதவி செய்த நண்பர்

இ. ஆதரித்த மன்னர்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

3. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வள்ளுவர் கூறக் காரணம் என்ன?

4. அம்பேத்கரின் பிஞ்சுமனம் எதனைக் கண்டு வெதும்பியது?

5. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்? அவரது இயற்பெயர் யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

6. ‘அம்பேத்கர்’ என்ற பெயரைத் தம் பெயருடன் சேர்த்துக் கொண்ட வரலாற்றை விவரிக்க.

7. அம்பேத்கரின் மேற்படிப்பு பற்றியும், பெற்ற பட்டங்கள் பற்றியும் எழுதுக.

8. தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக அம்பேத்கர் ஆற்றிய தொண்டினை விளக்குக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**எடுத்துக்காட்டைப்போல் கீழ் உள்ள வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.**

எ-டு : அம்பேத்கர் கல்வியில் ஆர்வம் கொண்டார்; விடா முயற்சியுடன் படித்தார்.

அம்பேத்கர் கல்வியில் ஆர்வம் கொண்டு விடாமுயற்சியுடன் படித்தார்.

1. அம்பேத்கர் சிறிதளவு பணத்தைச் சேமித்தார்; குடும்பத்துக்கு அனுப்பினார்.
2. அம்பேத்கர் இலண்டன் சென்றார்; கல்வியைத் தொடர்ந்தார்.
3. அம்பேத்கர் ஏழைகளுக்காக ஊதியமின்றி வாதாடினார்; நீதியைப் பெற்றுத் தந்தார்.
4. அம்பேத்கர் அல்லும் பகலும் உழைத்தார்; வாழ்க்கையில் வெற்றி பெற்றார்.

## IV. பிழை நீக்கி எழுதுக.

வல்லின 'றகர' மெய்யின் (ற்) பின் 'க், ச், த், ப்' என்னும் எழுத்துகள் வாரா என்பதனை அறிக.

வரவேற்பு, ஏற்க வேண்டும் - என எழுதுவதே சரி.

**1. கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆசிரியர் அமரும் இருக்கையின் பெயர் என்ன?
2. கல்லில் உருவங்களைச் செதுக்குபவன் யார்?
3. சூரியன் மறையும் திசை என்ன?
4. வடக்கு என்பதற்கு எதிர்த்திசை என்ன?

**2. வல்லின 'ற்' அமையும் நான்கு சொற்கள் எழுதுக.**

## V. வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம் அறிந்து எழுதுக.

பெயரெச்சத்தின்பின் மிகாது. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் மிகும்.

எடுத்துக்காட்டில் உள்ளதுபோல் கீழ் உள்ள வினைப் பகுதிகளைப் பெயரெச்சங்களாகவும், எதிர்மறைப் பெயரெச்சங்களாகவும் மாற்றுக. 'க, ச, த, ப' வருக்கத்தில் தொடங்கும் (குயில், செய்தி, தொழில், பாடம் போன்ற) சொற்களைச் சேர்த்துத் தொடர்கள் அமைத்து எழுதுக.

| | வினைப் பகுதி | பெயரெச்சம் | எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|---|
| எ-டு : | எழுது | எழுதிய கவிதை | எழுதாத கவிதை |
| 1. | படி | .................. | ................ |
| 2. | பாடு | .................. | ................ |
| 3. | கேள் | .................. | ................ |
| 4. | செய் | .................. | ................ |

**பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகாமை காண்க. எதிர்மறைப் பெயரச்சத் தொடர்களை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்களாக எழுதுக.**

எ-டு : **எழுதாத** கவிதை. (எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்)

**எழுதாக்** கவிதை. (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்)

1. ஓடாத குதிரை  3. வற்றாத கிணறு
2. பேசாத பெண்  4. வேகாத சோறு

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகுந்துள்ளமை காண்க.

## VI. அகராதி காணும் பயிற்சி

கீழ் உள்ள உயிர் எழுத்துகளில் தொடங்கும் சொற்களையும், உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொற்களையும், ஒன்றன் கீழ் ஒன்றாக அகர வரிசைப்படுத்துக.

ஆக்கம், தேர்வு, இயல்பு, காடு, ஏவல், சினம், ஒழுங்கு, தொழில், குழந்தை, செந்தமிழ், நிகழ்வு, மிளகு, விலங்கு பழக்கம், ஒப்புரவு, கழகம், தெளிவு, கொழுந்து, துறவு, நீளம், தூக்கம்.

## VII. திறன்வளர் தொடர்பணி

பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டுதல் கூடாது என்பதனை சான்றோர் வலியுறுத்திக் கூறிய பாடல்களின் வழி அறிக. இவற்றின் பொருளையும் அறிக.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் .

**- திருவள்ளுவர்.**

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

**- ஔவையார் (நல்வழி)**

# 8. விளையாட்டுகள்

(முனைவர் இராச.திருமாவளவன்)

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!"

எனப் பாடினார் மகாகவி பாரதியார். விளையாட்டு என்றால் பாப்பாவுக்கு மட்டுமா பிடிக்கும்? சிறியவர், பெரியவர், ஆண், பெண் அனைவருக்கும் விளையாட்டு என்றால் மிகவும் பிடிக்கும். சிலர் விளையாடி மகிழ்கின்றனர். விளையாட முடியாத பலர் பிறர் விளையாடுவதைப் பார்த்து மகிழ்கின்றனர். விளையாட்டில் பங்கேற்பதும், விளையாட்டைப் பார்ப்பதும் போலவே விளையாட்டைப் பற்றிப் படிப்பதும் மகிழ்ச்சி தரும்.

குழந்தை பேசத் தொடங்குவதற்கு முன்பே விளையாடத் தொடங்கிவிடுகிறது. விழித்திருக்கும் நிலையில் சிறுகுழந்தை கைகால்களை வீசி உதைத்து மகிழ்கிறது. இவை குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் மன மகிழ்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றன. எழுந்து உட்காரும் இளம் பருவத்திலேயே

"கை வீசம்மா கைவீசு!

கடைக்குப் போகலாம் கைவீசு ....." எனத் தாய் பாடக் குழந்தை கை வீசி மகிழ்கிறது. வளர்ந்த நிலையில் ஆடவரும் மகளிரும் தத்தமக்குப் பிடித்த விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்கின்றனர். இவ்வாறு குழந்தைப் பருவம் தொடங்கி முதுமைப் பருவம் வரையிலும் இவ்விளையாட்டு நீடிக்கிறது.

விளையாட்டுகளைப் பல வகையாகப் பிரிப்பர். ஓடுதல், தாண்டுதல் முதலியன தடகள விளையாட்டுகள் எனப்படும். கால்பந்து, கூடைப்பந்து, மட்டைப் பந்து (கிரிக்கெட்), வளைகோல் பந்து (ஹாக்கி), டென்னிஸ் முதலியன ஆடுகள விளையாட்டுகள்

ஆகும். விளையாட்டுகள் நடைபெறும் இடம் நோக்கி அவற்றை உள்ளரங்க விளையாட்டுகள், வெளியரங்க விளையாட்டுகள் என இருவகைப்படுத்துவர். கைப்பந்து, இறகுப் பந்து, நீச்சல், மற்போர் போன்றவை உள்ளரங்க விளையாட்டுகள். கால்பந்து, சடுகுடு, மட்டைப் பந்து முதலியன திறந்த வெளியில் விளையாடப்படுவன. நிலத்தில் விளையாடுவதைப் போல நீர் நிலையிலும் விளையாட்டுகள் நடைபெறுகின்றன. நீச்சல், படகுப்போட்டி, முதலியவை நீர் விளையாட்டுகளாகும்.

தனியொருவர் பங்கேற்கும் விளையாட்டுகளும் உண்டு. பலர் சேர்ந்து குழுவாகப் பங்கேற்கும் விளையாட்டுகளும் உண்டு. ஓடுதல், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் முதலியன தனி ஒருவராகப் பலர் பங்கேற்கும் விளையாட்டுகளாகும். கால்பந்து, கோல்பந்து, மட்டைப்பந்து போன்றவை குழு விளையாட்டுகளாகும். டென்னிஸ் விளையாட்டில் தனி ஒருவரோ, இரட்டையரோ பங்கேற்று விளையாடுவர்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறியவர்களும், பெரியவர்களும் விளையாட்டில் ஆர்வம் காட்டி வந்தனர். சடுகுடு (கபாடி) என்னும் விளையாட்டு தமிழ்நாட்டில் பல பகுதிகளில் விளையாடப்பட்டு வந்தது. விளையாட்டோடு வீரத்தையும் மக்கள் வளர்த்தனர். சல்லிக்கட்டு, சிலம்பம், மற்போர் முதலியன வீரவிளையாட்டுகள். இளமை முதல் வளர்த்த காளையை அடக்குவதே சல்லிக்கட்டு விளையாட்டு ஆகும். இத்தகைய விளையாட்டுகளோடு கிளித்தட்டு, நீந்துதல், பட்டம் விடுதல் முதலியவை இன்றும் தமிழகத்தில் விளையாடப்படுகின்றன. இவற்றைப் பெரும்பாலும் ஆண்களே விளையாடுகின்றனர். பெண்கள் வரிப்பந்து, கழங்கு, ஊசல் முதலிய விளையாட்டுகளில் ஈடுபட்டதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றை இன்றும் பெண்கள் ஊர்ப்புறங்களில் விளையாடி வருகின்றனர்.

இவ்வகை விளையாட்டுகள் அனைத்தும் உடல் திறமை சார்ந்த விளையாட்டுகளாம். இவற்றில் திறமை பெறுவதற்காகப் போட்டிகள் நடத்துவதுண்டு. பள்ளி அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில், நாட்டு அளவில், உலக அளவில் போட்டிகள் ஏற்பாடு செய்யப் பெறுகின்றன. உலக அளவில் நடைபெறும்

விளையாட்டுப் போட்டியை ஒலிம்பிக் போட்டி என்பர். விளையாட்டு வீரர்களின் ஒரே இலக்கு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதும், அதில் வென்று தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பெறுவதுமாகும்.

ஒலிம்பிக் போட்டி முதன் முதலில் கி.மு.8 ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் உள்ள 'ஒலிம்பிய' என்னும் இடத்தில் நடைபெற்றது. கி.பி.4 ஆம் நூற்றாண்டுவரை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்போட்டி அங்கு நடைபெற்றது. அதன்பின் நின்றுபோன இப்போட்டி, பிரெஞ்சுக் கல்வியாளர் திரு.பியாரே தெ கொபார்டின் (Pierre de Coubertin) அவர்களின் முயற்சியால் கி.பி.1896 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப் பெற்றது. அப்பொழுது முதல் உலகின் பல்வேறு நாடுகளில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகின்றது.

இப்போது ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு நாட்டில் நடைபெறுகிறது. இப்போது அனைத்து நாடுகளும் பங்கேற்கும் உலகப் போட்டியாக நடைபெறுவதால், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முதல்தர விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்கின்றனர். போட்டியில் வென்று பதக்கம் பெற்றால் 'உலகின் தலை சிறந்த விளையாட்டு வீரர்' என்னும் பெரும்புகழ் கிட்டும்.

நம் இந்திய வீரர்கள் ஹாக்கிப் போட்டியில் பலமுறை தங்கம் வென்றுள்ளனர். தடை ஓட்டம், மற்போர், டென்னிஸ், பளு தூக்குதல், குறிபார்த்துச் சுடுதல் ஆகிய போட்டிகளில் வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களையும் நம் வீரர்கள் வென்றுள்ளனர்.

விளையாட்டுப் போட்டி அறிவையும் உடலையும் செம்மைப்படுத்துகிறது. அனைவரிடமும் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கிறது. அண்மையில் 2004 ஆகஸ்டில் ஒலிம்பிக் போட்டி நடந்தது அப்போது ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு.ஜாக்வஸ் ரோக்ஸ் விழாவின் தொடக்க உரையில் "மொழி, இனம், மதம், நாடு, பண்பாடுபோன்ற பல்வேறு தடைகளை உண்மையான விளையாட்டு உணர்வு தகர்த்து எறிந்துவிடும். உலகிற்கே அமைதி வழியைக் காட்டும்"

என்று கூறினார். இதனை மனத்தில் கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வேண்டும். அதன் மூலம் உடலையும் உள்ளத்தையும் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஆசிரியர் :** முனைவர் இராச.திருமாவளவன், புதுச்சேரியில் கலவைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருபவர். பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம் :

### அ. சொற்களைப் பிரித்தறிக.

பங்கேற்கும் - பங்கு + ஏற்கும்; தனியொருவர் - தனி + ஒருவர்; ஊர்ப்புறம் - ஊர் + புறம்; உள்ளரங்கம் - உள் + அரங்கம்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

விழித்திரு - எச்சரிக்கையுடன் இரு, தூங்கி எழுந்திரு; ஏற்பாடு - ஆயத்தம்; குழு - கூட்டம்.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| பங்கேற்றல் | ஈடுபட்டு | நீடித்தல் |
| ஆர்வம் | தேர்ந்தெடுக்கப்பெற்ற | எறிந்து |

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கீழுள்ளவற்றில் பிற இரண்டினையும்விட மாறுபட்ட விளையாட்டு எது?**

அ. இறகுப்பந்து ஆ. மற்போர் இ. சடுகுடு

2. **தவறாகப் பொருத்தப்பட்டிருப்பது எது?**

அ. நீச்சல் - உள்ளரங்க விளையாட்டு

ஆ. வளைகோல் பந்து - தனியொருவர் விளையாட்டு

இ. மட்டைப் பந்து - குழு விளையாட்டு

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

3. விளையாட்டு யார்யாருக்கு மகிழ்ச்சி தரும்?

4. விழித்திருக்கும் நிலையில் குழந்தைக்கு மகிழ்ச்சி தருவது எது?

5. விளையாட்டு வகைகளை எழுதுக.

6. உள்ளரங்க விளையாட்டுகள் யாவை?

7. தனியொருவராகப் பங்கேற்கும் விளையாட்டுகளை எழுதுக.

8. இரு குழுவாகப் பிரிந்து விளையாடும் விளையாட்டுகளைக் கூறுக.

9. தமிழக விளையாட்டுகளாக ஆசிரியர் கூறுவன யாவை?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

10. ஒலிம்பிக் போட்டியைப் பற்றி விளக்குக.

11. உலக அளவில் நம் வீரர்கள் எவ்வெவ் விளையாட்டுகளில் பதக்கம் பெற்றுள்ளனர்?

12. விளையாட்டால் ஏற்படும் பயன்கள் யாவை?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**எடுத்துக்காட்டைப்போல் கீழ் உள்ள வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.**

எ-டு : டென்னிஸ் விளையாட்டில் தனி ஒருவர் பங்கேற்கலாம்; இரட்டையர் பங்கேற்கலாம்.

டென்னிஸ் விளையாட்டில் தனி ஒருவரோ, இரட்டையரோ பங்கேற்கலாம்.

1. விடைகளைப் பேனாவால் எழுதலாம்; பென்சிலால் எழுதலாம்.
2. திருச்சிக்கு இரயிலில் செல்லலாம்; விமானத்தில் செல்லலாம்.
3. கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதலாம்; தமிழில் எழுதலாம்.
4. இம்மரத்தின் காயைக் காயாகச் சாப்பிடலாம்; பழமாகச் சாப்பிடலாம்.

## IV. பிழை நீக்கி எழுதுக.

மெல்லின மெய்யெழுத்துகளைத் (ங், ஞ், ண், ந், ம், ன்) தொடர்ந்து அந்த மெல்லின உயிர்மெய்யெழுத்துத் தவிர, அவற்றிற்கு இனமான வல்லின மெய்யெழுத்து வருக்கங்கள் வரும் என்பதை அறிக.

எ-டு : தங்கம், இஞ்சி, வண்டி, பந்து, கம்பி, கன்று எனவரும்.

'ட' வருக்கத்தின் முன் அதற்கு இனமான 'ண' கர மெய்(ண்) வரும் என்பதை அறிக. (இதனை டண்ணகரம் என்பர்)

1. 'ண்' மெய்யைத் தொடர்ந்து 'ட' வருக்க எழுத்துகள் அமையும் வண்ணம் ஐந்து சொற்கள் எழுதுக. எ-டு : வண்டி

2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக பாடத்தில்

"உங்கள் விளையாட்டுப் போட்டிகளை" (பக் : 106) என்னும் பத்தியில் உள்ள 'ண்' மெய்யைத் தொடர்ந்து 'ட' வருக்க எழுத்துகள் அமைந்த நான்கு சொற்களை எடுத்து எழுதுக.

## V. வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம் அறிந்து எழுதுக.

பார்த்து, கேட்டு போன்ற வன்தொடர்க் குற்றியலுகரமுள்ள வினையெச்சங்களின்முன் வல்லினம் மிகும்.

எ-டு : பார்த்து + பேசினேன் - பார்த்துப் பேசினேன்.

வந்து, கண்டு, சென்று போன்ற மென்தொடர்க் குற்றியலுகர முள்ள வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகாது.

எ-டு : சென்று + கண்டேன் - சென்று கண்டேன்

**கீழ் உள்ள தொடர்களை வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம் அறிந்து சேர்த்து எழுதுக.**

1. கேட்டு + பார்த்தான்
2. உண்டு + சுவைத்தான்
3. மென்று + தின்றான்
4. வந்து + கண்டான்
5. பார்த்து + படி
6. எடுத்து + செல்

## VI. அகராதி காணும் பயிற்சி

கீழுள்ள உயிர் எழுத்துகளில் தொடங்கும் சொற்களையும், உயிர்மெய் எழுத்துகளில் தொடங்கும் சொற்களையும் ஒன்றன் கீழ் ஒன்றாக அகர வரிசைப்படுத்துக.

உண்மை, நுட்பம், ஒலி, இறக்கம், ஒற்றுமை, கிழக்கு, ஆண்மை, செப்பம், ஆற்றல், அடக்கம், ஊக்கம், ஏக்கம், நுவலுதல், எழுச்சி, ஓதல், மேவல், ஐயம், ஔவியம், கோயில், தோப்பு, முயற்சி, தென்றல், சேவல், கொண்டல், சீற்றம், நேயம், மொந்தை.

## VII. திறன்வளர் தொடர்பணி

கடந்த நான்கு முறை ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடங்களை அறிக.

1988 - சியோல் (கொரியா)

1992 - பார்சிலோனா (ஸ்பெயின்)

1996 - அட்லாண்டா (ஐக்கிய அமெரிக்கா)

2000 - சிட்னி (ஆஸ்திரேலியா)

2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற இடத்தையும், 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள இடத்தையும் அறிந்து எழுதுக.

# 9. நலவாழ்வுக்கு நல்ல மூலிகைகள்

**(முனைவர் பி. இரத்தின சபாபதி)**

உலகில் மக்கள் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. உடல் நலத்துடன் வாழ, சத்துள்ள உணவு எது, காய்கறி கீரை வகைகள் எவை என்று நாம் அறிதல் வேண்டும். அத்துடன் உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பவற்றை, சுவை மிக்கனவாயினும் வெறுத்து ஒதுக்க வேண்டுமெனவும் அறிதல் வேண்டும்.

நம் உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிப்பதாக உள்ளது புகையிலை. இது ஒருவகைச் செடியிலிருந்து கிடைக்கிறது. இந்த இலையிலிருந்து பீடி, சுருட்டு, சிகரெட்டு முதலியன தயாரிக்கிறார்கள். புகைக்கப் பயன்படுத்து வதால் இது புகையிலை எனப் பெயர் பெற்றது போலும்! வெற்றிலை சுவைப்போர் சிலர், புகையிலையையும் சேர்த்துப் பயன்படுத்துவர். சிலர் புகையிலையை மட்டும் தனியாக வாயில் அடக்கிக் கொள்ளுவது உண்டு. சிலர் புகையிலையைப் பொடியாக்கி மூக்கால் உறிஞ்சுவதும் உண்டு. இதனை மூக்குப் பொடி என்பர்.

புகையிலையில் 'நிக்கோடின்' எனும் நச்சுப் பொருள் உள்ளது. எந்த வடிவில் இதனை உட்கொண்டாலும் இது உடலுக்குக் கேடு விளைவிக்கும்; நாக்கு வறட்சியை ஏற்படுத்தும்; சிறிது நேரச் சுறுசுறுப்பைக் கொடுத்துப் பின் மூளையை மழுங்கச் செய்யும்; வாந்தி, மயக்கம், நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தும். பித்தப் பிணிகள் பலவும் இதனால் ஏற்படும். புகையிலையைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படப் பெரிதும் வாய்ப்புண்டு என மருத்துவர் கூறுகின்றனர்.

பெரும்பாலானவர்கள் பீடி, சிகரெட்டு முதலானவற்றைப் புகைப்பதைப் பார்க்கிறோம். அப்போது ஒவ்வொரு முறையும் ஒருவர் சுவாசிக்கும் சிகரெட்டுப் புகை நுரையீரலில் குவிந்து தாராக மாறுகிறது. 'தார்' என்பது சிகரெட்டு புகைப்பவர்களுக்கு

நுரையீரல் மற்றும் தொண்டைப் புற்றுநோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. புகைப்பவரை மட்டுமன்றி, அப்புகையைச் சுவாசிக்கும் பிறரையும் நோய் தாக்குகிறது. ‘இந்திய நாட்டில் புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களுள் 48 சதவீத ஆடவரும், 20 சதவீதப் பெண்டிரும் புகையிலைப் பழக்கத்தால் புற்றுநோயாளிகள் ஆயினர்'' என ஒரு மருத்துவ அறிக்கை கூறுகிறது. எனவே புகையிலையை எக்காரணத்தைக் கொண்டும், எந்த வடிவிலும் பயன்படுத்துதல் கூடாது.

நலவாழ்வு தரும் நல்ல மூலிகைகளைப் பற்றி அறிந்து அவற்றைப் பயன்படுத்துதல் நன்று. பயன் தரும் மூலிகைகள் பல இருப்பினும் கரிசலாங்கண்ணி, தூதுவளை, பொன்னாங்கண்ணி, மணித்தக்காளி ஆகியன எளிதில் கிடைக்கக் கூடியவை. வீட்டுத் தோட்டத்தில் பயிராக்கிப் பயன்படுத்தக் கூடியவை.

கரிசலாங்கண்ணியில் பொதுவாக நான்கு வகைகள் உள்ளன. அவற்றுள் மஞ்சள் பூ பூக்கும் வகைதான் சிறந்ததாகக் கருதப்படுகிறது. கரிசலாங்கண்ணிக்கீரை இரத்தத்தைச் சுத்தப் படுத்துகிறது. கண்பார்வையைத் தெளிவுபடுத்துகிறது. உடலுக்கு உரமூட்டுகிறது. மண்ணீரலில் ஏற்படும் வீக்கம் முதலியவற்றைக் குணப்படுத்துகிறது. தோல் வியாதிகளுக்கு இது மருந்தாகப் பயன்படுகிறது. கரிசாலை இலையை வாயில்போட்டு நன்கு மென்று பல் தேய்த்துவரப் பல்லிலுள்ள அழுக்குகள் நீங்கும். பல் தொடர்பான நோய்களை நீக்கிப் பாதுகாப்பதோடு வாய்ப்புண், வாய் நாற்றம் முதலியவற்றை நீக்கி உடலுக்கு நலம் தரும். கரிசாலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் கலந்து அடுப்பில் இட்டு இளம் சூடு ஏற்றித் தைலமாக்க வேண்டும். அதனைத் தலைக்குத் தடவினால் தலை முடி செழித்து வளரும். நரை ஏற்படுவதையும், முடி உதிர்வதையும் தடுக்கும். இந்தத் தைலத்தை உடலில் வலியுள்ள இடத்தில் தேய்த்தால் வலி நீங்கும்.

பொன்னாங்கண்ணிக் கீரைக்குப் பொன்னாங்காணி, கொடுப்பை, சீதை என்னும் வேறு பெயர்களும் உண்டு. இக்கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் முதுமையிலும் கண்ணாடி அணிய வேண்டிய தேவை இருக்காது. கண் எரிச்சல், கண் மங்கல், கண் கட்டி, கண்ணில் நீர்வடிதல், பீளை தள்ளுதல்

போன்ற கண் நோய்கள் குணமாகும். மேலும் வாய் நாற்றம், வாய்ப்புண் ஆகியவையும் நீங்கும். கரிசலாங்கண்ணி போலவே பொன்னாங்கண்ணிச் சாற்றையும் தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சித் தைலமாகப் பயன்படுத்தலாம்.

மணித்தக்காளியில் கருப்பு, சிவப்பு என இரு வகை உண்டு. இரண்டுமே உணவுக்கும் மருந்துக்கும் பயன்படும். மணித்தக்காளிக் கீரையைப் பாசிப் பருப்புடன் சேர்த்துக் கூட்டு செய்து சாப்பிடலாம். பொரியலாகச் செய்து தொடுகறியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். மணித்தக்காளிக் கீரை, வெங்காயம், தக்காளி, ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி, மிளகுத் தூளும் உப்பும் சேர்த்துக் கொதிக்க வைத்துச் சாறு தயாரித்துக் குடிக்கலாம். இச்சாறு வயிற்றில் ஏற்படும் வாயுத் தொல்லை, குடல் புண், வாய்ப்புண் ஆகியவற்றைக் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு இக்கீரையைத் தினமும் கொடுக்கலாம். வயிற்றுப்புண், வாய்ப்புண், குடல்புண் ஆகியவற்றை மணித்தக்காளிக் கீரை மிகச் சிறந்த முறையில் குணப்படுத்துகிறது.

தூதுவளை ஒரு கொடிவகைக் கீரை. இதனைத் 'தூதுவேளை' என்றும் கூறுவர். இதன் இலைகளிலும் தண்டிலும் கொக்கி போன்ற முள்ளிருக்கும். அதனை நீக்கி இந்தக் கீரையைச் சமையலுக்குப் பயன்படுத்தலாம்.

இதன் பழம், சிவப்பு நிறமுடையது. பழத்தை நிழலில் உலர்த்தித் தேனில் ஊற வைத்துத் தினமும் காலை மாலை சாப்பிட்டுவர, சளியும் கோழையும் நீங்கும். கபத்தால் உண்டாகும் காது மந்தம், நமைச்சல் ஆகியவற்றை நீக்கும். இதன் இலையையும் பூவையும் நெய்யில் வதக்கிப் பருப்புடன் சமைத்துச் சாப்பிடலாம். அதனால் மேற்கண்ட நோய்கள் குணமாவதுடன் உடல் வலுப்படும். இலையை நிழலில் உலர்த்திப் பொடிசெய்து நெய்யுடன் சோற்றில் கலந்து சாப்பிட உடல் வலிவு பெறும். இந்தப் பொடியை மூன்று மாதத்திற்குள் பயன்படுத்த வேண்டும்.

இச்செடிகளை வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கலாம். பூந்தொட்டிகளில் வளர்க்கலாம். தூதுவளையை வீட்டு வேலியில் படர விடலாம். இவ்வாறு பயனுள்ள மூலிகைச் செடிகளை நாமே வளர்த்து அவற்றை நன்கு பயன்படுத்தலாம்.

**ஆசிரியர் :** முனைவர் பி. இரத்தினசபாபதி, சென்னை, சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இலக்கியம், தமிழ் மருத்துவம், கல்வியியல் ஆகிய துறைகளில் பல நூல்கள் படைத்துள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

நோயின்றி - நோய் + இன்றி; நோயற்ற - நோய் + அற்ற; குறைவற்ற - குறைவு + அற்ற; வெற்றிலை - வெறுமை + இலை; மண்ணீரல் - மண் + ஈரல்; உரமூட்டும் - உரம் + ஊட்டும்; நல்லெண்ணெய் - நன்மை + எள் + நெய்; முள்ளிருக்கும் - முள் + இருக்கும்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

பொடி - தூள்; தொண்டை - குரல்வளை; உரம் - வலிமை; ஊட்டும் - தரும், உண்பிக்கும்; குணம் - பண்பு; பீளை - கண்ணில் உண்டாகும் அழுக்கு.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| நலவாழ்வு | குறைவற்ற | விளைவிக்கும் |
| சுறுசுறுப்பு | தேவை | தெளிவுபடுத்து |

## II. பொருளுணர் திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

1. **புகையிலையால் வரும் கேடுகளுள் ஒன்று .........**

   அ. பல்வலி ஆ. நரம்புத் தளர்ச்சி இ. கண்கட்டி

2. **கீழுள்ளவற்றுள் எக்கூற்று தவறானது?**

   அ. தார் என்னும் பொருள் ஈரல் புற்றுநோய்க்குக் காரணமாகிறது

   ஆ. புகையிலையில் நிக்கோடின் என்னும் நச்சுப் பொருள் உள்ளது

   இ. கரிசாலை பல் வலியைப் போக்கும் குணம் கொண்டது

### ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

3. **உடல் நலத்துடன் வாழ நாம் எவற்றை வெறுத்து ஒதுக்க வேண்டும்?**

4. புகையிலையிலிருந்து தயாரிக்கப்படுவன யாவை?

5. தொண்டைப் புற்றுநோய் ஏற்படக் காரணம் என்ன?

6. வீட்டுத் தோட்டத்தில் பயிராகும் கீரைகளைக் கூறுக.

7. தூதுவளைக் கீரையை எவ்வாறு அறியலாம்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

8. புகைப்பதால் ஏற்படும் தீமைகளைச் சுருக்கி எழுதுக.

9. கரிசலாங்கண்ணியின் பயன்களைக் கூறுக.

10. பொன்னாங்கண்ணி எவ்வகை நோய்களைத் தீர்க்க உதவுகின்றது?

11. மணித்தக்காளியை எவ்வாறு பயன்படுத்தலாம்? அதன் பயன்களைக் குறிப்பிடுக.

12. தூதுவளைக் கீரையின் பயன்கள் யாவை?

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

எடுத்துக்காட்டைப்போல் கீழ் உள்ள வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.

எ-டு : மூலிகை மருந்துகளை முறையாக உண்டான்; அவன் நோயின்றி வாழ்ந்தான்.

மூலிகை மருந்துகளை முறையாக உண்டதால் அவன் நோயின்றி வாழ்ந்தான்.

1. விறகாளாய் வந்த சிவபெருமான் நன்கு பாடினார்; ஏமநாதன் ஊரைவிட்டு ஓடினான்.

2. ஆசிரியர் நல்ல பயிற்சி தந்தார்; மாணவர் சிறப்பாக நடித்தனர்.

3. நேற்று இரவு மழை பெய்தது; குளம் நிறைந்தது.

4. திருடன் காவலர் வரக் கண்டான்; ஓடி ஒளிந்து கொண்டான்.

## IV. பிழை நீக்கி எழுதுக.

'ற' வருக்க எழுத்துகளின்முன் அதற்கு இனமான மெய் 'ன்' வரும் என்பதை அறிக. (இதனை றன்னகரம் என்பர்).

1. 'ன்' மெய்யைத் தொடர்ந்த 'ற' வருக்க எழுத்துகள் அமையும் வண்ணம் ஐந்து சொற்கள் எழுதுக. எ-டு : மன்றம்

2. 'உலக உத்தமர் காந்தியடிகள்' என்னும் பாடத்தில் ''இன்று நடந்திடும்'' (பக் : 95) என்று தொடங்கும் பத்திமுதல் அடுத்த

இருபத்திகளுக்குள் 'ன்' மெய்யைத் தொடர்ந்து 'ற' வருக்க எழுத்துகள் அமைந்த நான்கு சொற்களை எடுத்து எழுதுக.

**V. வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம் அறிந்து எழுதுக.**

**கீழுள்ள தொடர்களை வல்லினம் மிகுமிடம், மிகாவிடம் அறிந்து சேர்த்து எழுதுக.**

1. அவன் தோட்டத்துக்கு சென்று பழத்தை பறித்தான்.
2. பறித்த பழத்தை வீட்டுக்கு எடுத்து சென்றான்.
3. எட்டு பழங்களை தன் நண்பனுக்கு கொடுத்தான்.
4. நண்பன் அவற்றை பெற்று பாராட்டினான்.

**VI. அகராதி காணும் பயிற்சி**

**கீழுள்ள சொற்களுக்கு அகராதி பார்த்துப் பொருள் எழுதுக.**

மௌவி, துறக்கம், நௌவி, ஞாலம்,

வேட்கை, பௌவம், ஞெகிழி, ஞிமிறு, மிடறு, வேய், கிள்ளை, ஞமலி, நாவாய், அரவம், குணக்கு, எகினம், குடக்கு, பஃறி, வேழம், வாரணம்.

**VII திறன்வளர் தொடர் பணி**

வீட்டில் பயன்படுத்தப்படும் மூலிகைக் கீரைகள் இரண்டின் பெயர் எழுதி அவற்றின் பயன்களை எழுதுக.

# 10. குமண வள்ளல்

(நாடகம்)

(புலவர் தணிகை உலகநாதன்)

(முதிரமலை நாட்டு மன்னன் குமணன்; வரையாது வழங்கும் வள்ளல். தீயவர் நட்பினால் இளங்குமணன் தன் அண்ணன்மீது அழுக்காறு கொண்டு அரியணையில் அமரத் திட்டமிட்டான். இளவலின் மனம் உணர்ந்த குமணன், ஆட்சியை அவனிடம் ஒப்படைத்துக் காட்டில் உறைகிறான். இளங்குமணன் மீண்டும் தன் அண்ணன் ஆட்சிக்கு வரக்கூடும் என்னும் அச்சத்தால், அவன் தலையைக் கொண்டு வருபவருக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாகப் பறையறைவிக்கிறான்)

## காட்சி - 1

**இடம்** : தலைநகரின் நாற்சந்தி

**நேரம்** : நண்பகல்

**நாடக உறுப்பினர்** : பறையறைவோன், வழிப்போக்கர் சிலர், புலவர் பெருந்தலைச் சாத்தனார்.

**பறையறைவோன் :** (பறையடித்து) குடிமக்களுக்கு ஓர் அறிவிப்பு. காட்டில் ஒளிந்து கொண்டிருக்கிற குமணனைக் கண்டுபிடித்து, தலையைக் கொய்துவந்து ஒப்படைப்பவருக்கு ஆயிரம் பொன் அளிக்கப்படும். (மீண்டும் பறையறைந்து கொண்டே செல்கிறான். வழிப்போக்கர்கள் பேசிக் கொள்கிறார்கள்)

**ஒருவன் :** கொடுமை ! கொடுமை!

**மற்றவன் :** அநியாயம்! அக்கிரமம்!

**இன்னொருவன் :** வந்தவர்க்கும் நொந்தவர்க்கும் பொன்னும் பொருளும் வாரி வழங்கிய குமண வள்ளலுக்கா இக்கதி!

**மற்றொருவன் :** நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால் சும்மா இருக்குமா? இனி, அது நினைக்குமிடமெல்லாம் சுடுகாடு தான்!

**வேறொருவன் :** சிங்கம் இருந்த இடத்தில் சிறு நரி! அன்னம் அமர்ந்த தாமரையில் அழகற்ற காக்கை! இந்த நிலையில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

**மற்றவன் :** நாடு கொடுத்த நாயகனுக்குக் காடும் கொடுக்க இசையாத கடுகு உள்ளம் படைத்தவனிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

(ஒருவர் தளர் நடையுடன் வருகிறார்)

**புலவர் :** அப்பப்பா! நடந்து நடந்து கால்கள் தளர்ந்தன! வெயிலின் கொடுமையால் நாவும் உலர்ந்தது! பசியோ காதை அடைக்கிறது. (வழிப்போக்கன் ஒருவனைப் பார்த்து) ஐயா, குமண வள்ளலின் அரண்மனை அண்மையில்தானே இருக்கிறது? அவரைக் கண்டால் என் பசி தீரும்; வறுமை நீங்கும், வளமை ஓங்கும்.

**ஒருவன் :** ஐயா, உமக்கு இந்த நாட்டு நிலை தெரியாது போலும்! தாங்கள்....

**புலவர் :** நான் ஒரு புலவன்! பெருந்தலைச் சாத்தனார் என்பது என் பெயர். என் வறுமைப் பிணி தீர வள்ளல் குமணனை நாடிச் செல்கிறேன்!

**ஒருவன் :** புலவரைப் போற்றும் புரவலராகிய அவர், இளங்குமணனின் வஞ்சகத்தால் அரண்மனை நீங்கிக் காட்டுக்குச் சென்று விட்டார்.

**புலவர் :** அப்படியா!

**மற்றொருவன் :** ஆமாம் ஐயா! பசித்துக் களைத்துள்ள தாங்கள் என் இல்லம் வந்து உணவு உண்டு செல்லலாமே!

**புலவர் :** இல்லை அப்பா! புலவர்களின் கண்மணி அனைய குமண வள்ளலைக் காணாமல் இனி உணவு உண்ணமாட்டேன்! ஏன், நீரும் அருந்த மாட்டேன்!

### காட்சி - 2

**இடம் :** காடு

**நேரம் :** பிற்பகல்

**நாடக உறுப்பினர் :** குமண வள்ளல், புலவர் பெருந்தலைச் சாத்தனார். (காட்டில் குமண வள்ளலைத் தேடி அடைகிறார் புலவர்)

**குமணன்** : புலவர் பெரும வரவேண்டும்! தமிழ் அன்னையின் கண்மணியே! வணக்கம்.

**புலவர்** : வள்ளல் பெருமான் வாழ்க! நாட்டில் கண்டு களிக்க வேண்டிய நான், இன்று காட்டில் சந்திக்கிறேன். இஃது என் பொல்லாத காலம்.

**குமணன்** : புலவரே, தங்களை இங்குக் காண நேர்ந்தது என் நல்ல காலம்! இந்நாள் எனக்கு ஒரு பொன்னாள்; நன்னாள்.

**புலவர்** : ஆகா! துன்ப நிலையிலும் இன்பம் காணும் உம் தூய உள்ளத்தை என்னென்று பாராட்டுவேன்!

**குமணன்** : புலவர் மணியே! என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ? இங்குக் காட்டு வளம் கண்டு களிக்கிறேன். இயற்கைக் காட்சிகள் பூத்துக் குலுங்கும் இந்தக் கானகம் என் உள்ளத்துக்கு அமைதியளிக்கின்றது. தாங்கள் கால்கடுக்க நடந்து இக்காட்டிற்கு வந்த காரணம்?

**புலவர்** : வள்ளலே, என் வறுமை கூறிப் பரிசு பெற்றுச் செல்ல உம்மை நாடி வந்தேன். எமது இல்லத்தில் சமைக்கும் தொழிலை மறந்ததால் அடுப்பு காளான் பூத்துக் கிடக்கிறது. பால் இல்லாமையால் குழந்தை என் மனைவியின் முகத்தை நோக்க, அவள் என் முகம் நோக்கினாள்; நான் தங்கள் முகம் நோக்கி வந்தேன்.

**குமணன்** : பைந்தமிழ்ப் பாவலரே, நான் வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கிய காலத்தில் தாங்கள் வரவில்லை! ஆட்சி துறந்து அருங்கானில் வாழும் இந்நாளில் வந்துள்ளீர்! என் செய்வேன்?

**புலவர்** : ஆறு நீர்ப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளிலும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுமன்றோ?

**குமணன்** : ஆம். புலவரே! (சற்றுச் சிந்தித்து) செந்தமிழ்ப் புலவர், நீர் பரிசு பெறாமல் திரும்புவதா? நான் நாடு இழந்ததனினும் இது நனி இன்னாது! (உறையிலிருந்து வாளை உருவி) இதோ வாள்! என் தலையைக் கொய்து, என் தம்பியிடம் ஈந்து, அதன் விலையைப் பெற்றுக் கொள்ளுங்கள். உமது வறுமை தீர இதுவே தக்க வழி!

(குமணன் தந்த வாளைப் புலவர் உடனே பெற்றுக் கொள்கிறார்.)

**புலவர்** : ஆகா! வள்ளலே! என்னே நின் கொடைத் திறன்! தமிழுக்காகத் தலையளிக்க முன்வந்த வள்ளலே! உம்மினும் சிறந்தார் எவர்! வாள் மட்டும் என்னிடம் இருக்கட்டும். தலை உம்மிடமே இருக்கட்டும். அதனை நான் வேண்டும்போது, கொய்து கொள்வேன்!

(புலவர் போகிறார்)

## காட்சி - 3

**இடம்** : அரசரின் அவைக்களம் **நேரம்** : காலை

**நாடக உறுப்பினர்** : இளங்குமணன், வாயிற் காவலன், பெருந்தலைச் சாத்தனார், அவையோர்.

(அரியணையில் இளங்குமணன் அமர்ந்திருக்கிறான். அமைச்சர்கள், தளபதிகள் அவையில் கூடியுள்ளனர்; வாயிற் காவலன் வருகிறான்)

**வாயிற்காவலன்** : அரசர் வாழ்க! அரண்மனை வாயிலில் புலவர் ஒருவர்....

**இளங்குமணன்** : புலவரா? இங்கு என்ன வேலை? என் அண்ணன் ஆண்ட காலத்தில் செல்வத்தைச் சுரண்டியது போதாதா? (வெறுப்புடன்) அவரை அழைத்துவா!

(வெளியேறிய காவலன் பெருந்தலைச் சாத்தனாருடன் உள்ளே வருகிறான்.)

**இ. குமணன்** : புலவரே, இஃதென்ன விந்தை! கையில் வாளேந்தி, வந்துள்ளீரே! யாருடனாவது வாட்போர் புரிய விருப்பமா?

**புலவர்** : (சினத்துடன்) ஆராயாமல் பேசும் அரசே! உன் அறியாமை கண்டு நாடே நகைக்கிறது! அண்ணனைக் காட்டுக்கு விரட்டிய காவலனே! இந்த வாள் யாருடையது என்பதை உற்றுப் பார்!

(வாளை இளங்குமணன் உற்றுப் பார்க்கிறான்)

**இ. குமணன்** : ஆ!.... இஃது என் அண்ணன் குமணனது வாள்! இந்த வாள் உங்களிடம் எப்படி வந்தது?

**புலவர்** : ஆம். இளங்குமணா! நான் கானகம் சென்றேன்; குமணனைக் கண்டேன்; பாடினேன். செந்தமிழ்க் கவிதை

பாடிய புலவர்க்கெல்லாம் பொன்னும் பொருளும் பட்டாடைகளும் வழங்கிய அப்பெருமான் கைப்பொருளற்ற நிலையில் வருந்தினான்; நீடு நினைத்தான்; 'என் இளவல் என் தலையைக் கொணர்வோர்க்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாக அறிவித்துள்ளானாம். என் தலையினை அரிந்து தம்பியிடம் தந்து விலைதனைப் பெற்று வளமுடன் வாழ்க!' எனக் கூறினான். வாளை என்னிடம் கொடுத்துத் தலை குனிந்து நின்றான். தமிழுக்குத் தலையளிக்க முன்வந்த குமணன் தலை இப்போது எனக்கு உரிமையானது. உனக்கு உன் தமையனின் தலை வேண்டுமா? சொல். கொய்து வந்து தருவேன்.

(புலவரின் பேச்சைக் கேட்ட இளங்குமணன் மனம் மாறினான். கண் கலங்க, நா தழுதழுக்கப் புலவரை நோக்கினான்.)

**இ. குமணன்** : புலவர் பெருமானே! என் அறிவுக் கண்ணைத் திறந்த ஒளிவிளக்கே! நான் பாவி! தமிழுக்காகத் தலையளிக்க முன்வந்த வள்ளலின் இளவல் என்று சொல்வதற்கே தகுதியற்றவனாகிவிட்டேன். அண்ணனைக் காட்டுக்கு விரட்டிய பழிச் செயலுக்கு வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள். இந்த நாட்டை ஆளும் தகுதி எனக்கில்லை. என் அண்ணனை அழைத்து வந்து, மீண்டும் அரியணையில் அமர்விப்பேன்!

(அரியணையிலிருந்து இறங்கி வருகிறான்).

தண்டமிழ்ப் புலவரே! என் தமையன் எங்குளார்?

**புலவர்** : இளங்குமணா! நின் மனமாற்றத்தைக் கண்டு என் உள்ளம் மகிழ்கிறது. இனி, முதிரமலை நாட்டில் முத்தமிழும் முழங்கும்; அமைதி நிலவும்; அன்பு தழைக்கும்! என்னுடன் புறப்படும். உம் தமையன் உறையுமிடம் காட்டுவேன்.

(அனைவரும் புறப்படுகின்றனர்)

**ஒருவர்** : மனம் திருந்திய மன்னர்!

**அவையோர்** : வாழ்க! வாழ்க!

**ஒருவர்** : தமிழுக்குத் தலைகொடுத்த வள்ளல்!

**அவையோர்** : வாழ்க! வாழ்க!

**ஆசிரியர் :** புலவர் தணிகை உலகநாதன் சென்னை இந்து தியாலாஜிகல் மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், துணைத் தலைமையாசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். குழந்தை இலக்கியம் தொடர்பான நூல்கள் பல எழுதியுள்ளார்.

## I. சொற்களஞ்சியம்

### அ. சொற்களைப் பிரித்தறிக.

அழுக்காறு - அழுக்கு + ஆறு; பறையறை - பறை + அறை; அழகற்ற - அழகு + அற்ற; பைந்தமிழ் - பசுமை + தமிழ்; அருங்கான் - அருமை + கான்.

### ஆ. அருஞ்சொற்பொருள் :

வரையாது - அளவின்றி; அழுக்காறு - பொறாமை; அரியணை - அரசிருக்கை, சிம்மாசனம்; உறைகிறான் - தங்கியிருக்கிறான் ; நாற்சந்தி - நான்கு தெருக்கள் கூடுமிடம்; கொய்து - பறித்து; அன்னம் - சோறு, பறவை; உலர்ந்தது - வற்றியது; வறுமை - இல்லாமை, ஏழ்மை; வளமை - செழுமை; புரவலர் - பாதுகாப்பவர்.

### இ. சொல்லாட்சித்திறன் :

**கீழுள்ள சொற்களையும் தொடர்களையும் பொருள் விளங்கும் வண்ணம் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| அழுக்காறு | வாரி வழங்குதல் | எதிர்பார்த்தல் |
| கண்டுகளித்தல் | சுரண்டுதல் | தழைக்கும் |

## II. பொருளுணர்திறன் பயிற்சி

### அ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **குமணன் காட்டில் உறையக் காரணம்......**

   அ. தீயவர் நட்பு ஆ. இளவலின் வஞ்சகம்

   இ. காட்டு வளம் காண

2. **மக்களால் 'கடுகு உள்ளம் படைத்தவன்' என்று குறிப்பிடப் பெற்றவன் ....**

   அ. பறையறைவோன் ஆ. இளங்குமணன் இ. குமணன்

3. **'அன்னம் அமர்ந்த தாமரையில் அழகற்ற காக்கை'**

   **- இத்தொடரில் 'அன்னம்' உவமையாகக் கூறப்பட்டிருப்பது......**

   அ. குமணனுக்கு ஆ. அரியாசனத்திற்கு

   இ. இளங்குமணனுக்கு

4. **நன்னாள் என்பதை ..... எனப்பிரிக்க வேண்டும்.**

அ. நன்+நாள் ஆ. நன்+னாள் இ. நன்மை + நாள்

5. **ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டுவது....**

அ. ஆறு ஆ. மணல் இ. தண்ணீர்

6. **'குமணன் தலை இப்போது எனக்கு உரிமையானது' என்று கூறியது யார்?**

அ. இளங்குமணன் ஆ. பெருந்தலைச் சாத்தனார்

இ. வாயிற்காவலன்

7. **இளங்குமணனை அவையோர்.......... என்று கூறினர்.**

அ. தமிழுக்குத் தலைதந்த வள்ளல்

ஆ. மனம் திருந்திய மன்னர்

இ. நாடு கொடுத்த நாயகன்

8. **'பொன்னாள்' என்பதை எப்படிப் பிரிப்பது சரியானது?**

அ. பொன்மை + நாள் ஆ. பொன் + நாள்

இ. பொன் + னாள்

9. **குமணன் நாடகக் கதை மாந்தருள் ஒருவர் 'என் அறிவுக் கண்ணைத் திறந்த ஒளிவிளக்கே' எனக் கூறுகிறார். அவர் யார்?**

அ.குமணன் ஆ. இளங்குமணன் இ. புலவர்

ஆ. **பொருத்துக.**

**கீழுள்ள கூற்றுகளையும் ,அவற்றைக் கூறியவர்களையும் பொருத்துக.**

| **கூற்றுகள்** | **கூறியவர்கள்** |
|---|---|
| 10. உணவு உண்ணேன்; நீர் அருந்தேன் | - அ. பறையறைவோன் |
| 11. சிங்கம் இருந்த இடத்தில் சிறுநரி | - ஆ. வாயிற்காவலன் |
| 12. நாடாளும் தகுதி எனக்கில்லை | - இ. பெருந்தலைச்சாத்தனார் |
| 13. தலைகொய்து ஒப்படைப்பவருக்கு ஆயிரம் பொன் அளிக்கப்படும் | - ஈ. மக்களுள் ஒருவன் |
| | - உ. இளங்குமணன் |

இ. **மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

14. குமணன் காட்டில் உறைந்த காரணத்தை எழுதுக.

15. பறையறைவோன் அறிவித்த செய்தி யாது?

16. வழிப்போக்கரிடம் புலவர் பெருந்தலைச் சாத்தனார் கூறியதென்ன?

17. தன் காட்டு வாழ்க்கையின் மகிழ்ச்சி குறித்துக் குமணன் கூறியது யாது?

18. பெருந்தலைச் சாத்தனாரின் வறுமை வாழ்வை உணர்த்தும் செய்தியை எழுதுக.

19. வாளைப்பெற்ற புலவர், குமணனிடம் கூறியது என்ன?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

20. இளங்குமணன் செயல் குறித்து வழிப்போக்கர் பேசிக் கொண்ட செய்தியைச் சுருக்கமாக எழுதுக.

21. பெருந்தலைச் சாத்தனார் உணவு உண்ணமாட்டேன் எனவும் நீரும் அருந்தமாட்டேன் எனவும் கூறக் காரணமான நிகழ்ச்சியை எழுதுக.

22. முதிரமலைக் காட்டில் புலவரைக் கண்ட குமணன் கூறியது யாது?

23. பெருந்தலைச் சாத்தனாரின் வறுமை போக்கக் குமணன் செய்த செயலை விவரி.

24. இளங்குமணன் மனந்திருந்துமாறு பெருந்தலைச் சாத்தனார் கூறியது என்ன?

25. மனமாற்றம் பெற்ற இளங்குமணன் புலவரிடம் கூறியதை எழுதுக.

## III. மொழித்திறன் வளர் பயிற்சி

**கீழுள்ள தொடர்களைத் தனிவாக்கியங்களாக எழுதுக.**

1. குமணனைக் கண்டால் என் பசி தீரும்; வறுமை நீங்கும்; வளமை ஓங்கும்.

2. நான் கானகம் சென்றேன்; குமணனைக் கண்டேன்; போற்றிப் பாடினேன்.

3. இந்தக் காடு இயற்கை பூத்துக் குலுங்குகிறது; வளம் பலநிறைந்துள்ளது; என் உள்ளத்திற்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

## IV. பிழை நீக்கி எழுதுக.

1. 'ன' கரம் மொழிக்கு முதலில் வராது.

நகரம், நகம், நம்பிக்கை என எழுத வேண்டும்.

2. வல்லின மெய்கள் சொற்களின் இறுதியில் வாரா.(க், ச், ட், த், ப், ற்) வந்தார், சென்றார், பார்த்தார் என எழுத வேண்டும்.

3. அனுப்புநர், பெறுநர், இயக்குநர், என்னும் சொற்களில் 'ன' பயன்படுத்துதல் தவறு. 'ந' பயன்படுத்த வேண்டும்.

**மேலே உள்ள எடுத்துக் காட்டுகளை அறிந்து அதன்படி ஈற்றில் அவ்வாறு அமையும் வேறு சொற்கள் நான்கினை எழுதுக.**

## V. வல்லினம் மிகுமிடம் - மிகாவிடம் அறிந்து எழுதுக.

**கீழ் உள்ள தொடர்களை வல்லினம் மிகுமிடம்-மிகாவிடம் அறிந்து சேர்த்து எழுதுக.**

1. விறகு கடைக்கு சென்று சுள்ளி கட்டை வாங்கி வந்தான்.
2. அவன் நல்லப் பையன். ஆனால் அவன் புத்தகத்தை பார்த்து படிக்க தயங்கினான்.
3. அறிவுரைக் கூறுவோர் வாழ்ந்துக் காட்ட வேண்டும். மாணவர்கள் அதை பார்த்து தம் வாழ்வில் பின்பற்ற தொடங்க வேண்டும்.

## VI. அகராதி காணும் பயிற்சி

**கீழ் உள்ள பாடலில் தடித்த எழுத்தில் அமைந்த சொற்களுக்கு, பாடல் கருத்துக்கேற்ற பொருளை அகராதி பார்த்து எழுதுக.**

1 வெள்ளைக் **கலை** உடுத்து வெள்ளைப் **பணி** பூண்டு
வெள்ளைக் **கமலத்தே** வீற்றிருப்பாள்.

2. பெரியவர் **கேண்மை பிறை**போலநாளும்
வரிசை வரிசையா **நந்தும்.**

## VII. திறன் வளர்தொடர்பணி

1. இப்பாடத்தில் காணப்பெறும் சிறந்த உவமைத் தொடர்களை எடுத்தெழுதுக.
2. கீழுள்ள சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை அறிக.
   அநியாயம் -
   அக்கிரமம் -
3. 'நாடு கொடுத்த நாயகனுக்குக் காடு கொடுக்க இசையாத'
   - என்னும் தொடர் இப்பாடத்தில் வந்துள்ளது. இந்த அடி இடம்பெற்ற கம்பராமாயணப் பாடல் முழுமையையும் அறிக.

ஆடு கொடிப்படை சாடி அறத்தவ ரேஆள
வேடு கொடுத்தது பாரெனும் இப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தஎன் நாயக னுக்குஇவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகி எடுத்தது காணீரோ?

4. 'ஆறு நீர்ப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளிலும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்' என்னும் உவமை பாடத்தில் இடம் பெற்றுள்ளது. அவ்வுவமை அமைந்துள்ள 'நல்வழி'ப் பாடல் முழுமையையும் அறிக.

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளும்அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

# பின் இணைப்பு - 1

'கேட்டல் திறன்' என்பது ஒருவர் பேசுவதைச் செவிமடுத்தலாகும். அது நேரடியாகப் பேசுதலைக் கேட்பதாகவோ, ஒலிப்பதிவு நாடாவைக் கேட்பதாகவோ, அமையலாம். எட்டாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் கேட்டல் திறனில் ஐந்து உட்கூறுகள் குறிக்கப் பெற்றுள்ளன. அக்கேட்டல் திறன் கூறுகளுக்கான பயிற்சி முறைகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மாணவரது கேட்டல் திறனை வளர்த்தல் வேண்டும்.

**திறன் : 1 குரல் மாற்றங்களை வேறுபடுத்தி அறிதல்.**

மகிழ்ச்சி, துன்பம், வியப்பு, கோபம் போன்றன வரும்படியான உரைப்பகுதிகளைத் தக்க குரல் ஏற்றத்தாழ்வுகளுடன் பதிவு செய்க. பாடல்களை அவற்றில் அமைந்துள்ள உணர்வுகளுக்கேற்பப் பாடச் செய்க. இவற்றை ஒலிப்பதிவு செய்து மாணவரைக் கேட்கச் செய்க. இவை வெளிப்படுத்தும் **உணர்ச்சிகளைக்** கூறச் செய்க.

**திறன் : 2. ஒலிப்புப் பிழைகளை இனங்காணல்.**

மயங்கொலிச் சொற்கள் அமைந்த சொற்பட்டியலை மாணவர்க்கு வழங்கவேண்டும். மயங்கொலிகள் கொண்ட சொற்கள் அமைந்த தொடர்களை ஆசிரியர் நேரடியாக ஒலித்தோ, ஒலிப்பதிவு செய்தோ மாணவரைக் கேட்கச் செய்ய வேண்டும். அவ்வாறு கேட்கும்பொழுது மாணவர் சரியானவற்றைக் குறியிட்டுக்காட்டச் செய்ய வேண்டும். ல - ள - ழ எழுத்துகள் அமைந்த சொற்கள் வரும்படியான உரையாடலைக் கேட்கச் செய்ய வேண்டும். அல்லது உரையாடல் பதிந்த ஒலி நாடாவைக் கேட்கச் செய்ய வேண்டும். யார் யார் எந்தெந்த எழுத்துகளைத் தவறாக ஒலித்தனர் எனக் கூறச் செய்ய வேண்டும்.

**திறன் : 3. கேட்ட பகுதியின் மையக்கருத்து அறிதல்.**

உரையாடலைக் கேட்கச் செய்து, மையக் கருத்தை அறிந்தவாறு வெளிப்படுத்தத்தக்க வினாக்கள் கேட்டல் - உரையாடலை ஒலிப்பதிவு செய்தும் கேட்கச் செய்யலாம்.

**திறன் : 4. கேட்ட தகவல்களைத் தொகுத்தல்.**

வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களைச் சொற்பொழிவு ஆற்றச் செய்து கேட்கச் செய்ய வேண்டும். சொற்பொழிவில் வெளிப்பட்ட தகவல்களை வரிசை முறையில் அறிந்தனரா என வினவுதல் வேண்டும்.

**திறன் : 5. பகுதியைக் கேட்டு அடுத்து வருவதை அறிதல்.**

ஆசிரியர் கதை கூறும்பொழுதோ, சொற்பொழிவு ஆற்றும் பொழுதோ இடையில் நிறுத்தி, அடுத்து வருவதை மாணவர்களைக் கூறச் செய்தல் வேண்டும்.

## பின் இணைப்பு - 2

பாட நூல் தவிர, நூல் நிலையப் புத்தகங்கள், பிற புத்தகங்களைப் படித்தமையைக் காட்டும் விவரங்கள் அடங்கிய படிவம்.

ஒவ்வொரு நூலைப் படித்து முடித்ததும் இப்படிவத்தை நிரப்பி மாணவர் கையொப்பமிட்டு, ஆசிரியர் கையொப்பமும் பெற வேண்டும்.

| வரிசை எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் | படிக்கத் தொடங்கும் நாள் | படித்து முடித்த நாள் | மாணவர் கையொப்பம் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |